# தமிழருவி

## கலை இலக்கிய சமூக விஞ்ஞான மாதாந்த சஞ்சிகை

மலை -2 இதழ் - 2 அருவி -2
















விலை 50/-

வெளியுலகில் சிந்தனையிற் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாம் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெல்லாம் செய்து
செந்தமிழைச் செந்தமிழாய்ச் செய்திடவும் வேண்டும்
எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும். - பாரதியார்


இயக்குநர், உதவி ஆசிரியர் :

த. கணேசமூர்த்தி

பிரதம ஆசிரியர் :

ம. பா. மகாலிங்கசிவம்

கௌரவ ஆலோசகர் :

சிவத்தமிழ் வித்தகர்

சிவ. மகாலிங்கம்



முகவரி:

சிவகுல வீதி,

உரும்பிராய் மேற்கு,

உரும்பிராய்.

தொலைபேசி :

077 7743055

021 490 7619

அலுவலக முகவரி

தமிழருவி,

பலாலி வீதி,

டிப்போ அருகாமை,

உரும்பிராய்.

E.mail :

tkm.tamilaruvi@gmail.com

Skype : tkm.tamilaruvi


வாசகர்களுக்கு வணக்கம்!

தமிழருவி முதற்சஞ்சிகைக்கு நீங்கள் காட்டிய ஆதரவு எங்களை மெய்சிலிர்க்க வைக்கின்றது. புத்தகக் கடைகளில் தமிழருவியை வாங்கி வாசித்துவிட்டு நேரிலும், தொலைபேசி மூலமாகவும் நீங்கள் கூறிய பாராட்டும், அறிவுரைகளும் எங்களுக்கு உற்சாகத்தைத் தருகின்றன.

தமிழருவி வெளியீட்டு விழாவிலே உரையாற்றிய பேராசிரியர். கி. விசாகரூபன், கலாநிதி. செ. திருநாவுக்கரசு, செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் முதலியோரின் கருத்துக்கள் எம்மை வளம்படுத்தி உள்ளன.

வலம்புரி, தினமுரசு, வீரகேசரி, உதயன் ஆகிய பத்திரிகைகள் வெளியீட்டு விழா நிகழ்ச்சிநிரல், புகைப்படங்கள், பேச்சுக்கள் என்பவற்றுடன் நூல் அறிமுகத்தையும் பிரசுரித்து எமக்குச் சிறந்ததொரு விளம்பரத்தைப் பெற்றுத்தந்தன. இப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு மனமுவந்த நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு இந்த ஆதரவு எமக்குத் தொடர்ந்தும் கிடைக்க வேண்டுமென மிகுந்த தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பல பாடசாலைகளின் அதிபர்களும் ஆசிரியர்களும் கூடச் சஞ்சிகையை வாங்கி உதவியதோடு தமது பாடசாலை மாணவர்கள் ஆக்கங்களை எழுதவும் வழிகாட்டியுள்ளனர்.

இத்தகைய பின்னணியில் இரண்டாவது தமிழருவி முன்னேற்றகரமான மாற்றங்களுடன் வெளிவருவதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். தமிழ் வாசகர்களின் வாசிப்புத்திறனை விருத்தி செய்யவல்ல பல்துறை ஆக்கங்களுடன் தமிழருவி தொடர்ந்தும் பாயும். தமிழிலக்கிய வயற்பரப்பை வளம்படுத்தும்.

**ஆசிரியர்கள்.**

# சீறாப்புராணத்தில் தமிழ் இலக்கிய மரபு

"திறம் பெறும் காப்பியம்" எனப்போற்றப்படும் சீறாப்புராணம் இஸ்லாத்தின் புகழ்பெறும் முக்கிய காப்பியமாகத் திகழ்கிறது. இச்சீறாப்புராணம் எட்டயபுர வேந்தரது அவைக்களப் புலவராயிருந்த உமறுப்புலவரால் ஆக்கப் பெற்றது. தற்பெருமை கொண்ட வாலைவாரிதி என்ற புலவரை வாதில் வென்றவா் இந்த உமறுப்புலவர். இதனால் தமது ஆசிரியர் கடிகை முத்துப்புலவருக்கும், சமஸ்தானத்துக்கும் ஏன் முழுத் தென்னாட்டுக்குமே பெரும் புகழ்தேடித் தந்தவர்.

இஸ்லாத்தின் எண்ணமிகு ஊடக மொழிகளுள் தமிழும் ஒன்றென நிலைநாட்டிய பெருமை கலைசேர் இலக்கிய மணிமண்டபமாகத் திகழும் சீறாப்புராணத்தைச் சாரும். இவ்வாறு காட்டிய சீறாப்புராணம் தனது உள்ளடக்கத்தில் கூடத்தமிழைத் தவறவிடவில்லை. சீறாப்புராணத்தில் தமிழ் இலக்கிய மரபு பின்பற்றப்பட்டுள்ளமை இதனை நிருபிக்கும். இந்தவகையில் சீறாப்புராணத்தில் தமிழ் இலக்கிய மரபு பின்பற்றப்பட்டுள்ளமை பற்றி ஈண்டு நோக்குவோம்.

ந. உதயலதா
கைதடி வடக்கு
கைதடி.

காதற் சுவை கனிந்த காப்பியம் வளர்த்தல் என்பது தமிழ் இலக்கிய மரபுகளில் ஒன்றாகும். இந்த மரபு தமிழ் இலக்கியங் களிற் போற்றப்பட்டு வந்தது. இந்த மரபை உமறுப் புலவரும் சீறாப்புராணத்தில் கையாண்டுள்ளார். காப்பிய நாயகரும்,நாயகியும் முதல் முறையாகக் கண்டு காதல் கொண்ட அரிய காட்சியினை நாயக நாயகியர் தகுதிநோக்கி விரசமின்றியும், அதே நேரத்தில் அவர்தம் காதலின் திண்மை தோன்றவும் அற்புதமாகப் பாடுவார்

"காக்குதற் குதித்த வள்ளல்
காரிகை வடிவைக் கண்ணால்
நோக்கியும் நோக்காதும் போல்
நொடியினி லெழுந்தம் மாதின்
மாக்கடலனைய கண்ணும்
மனமும் பின்தொடர்ந்து செல்லக்
கோக்குல வீதி நீந்திக்
கொழுமனை யிடத்திற் சார்ந்தார்."

எனப் பாதை போந்த படலத்தில் பாடுகிறார். நபிகள் நாதரும் அன்னை கதீஜாவும் இணைந்து நடத்திய காதல் வாழ்வு, மனை வாழ்க்கைக்கே மாண்புறு வழிகாட்டும் சிறப்புடையதாகும்.

தமிழில் இலக்கியம் பாட வந்ததால் உமறுப் புலவர் சுவை ததும்ப இலக்கியமரபு மாறாமல் கூறினும் காவியத்தலைவர் இறை நபிகள் என்பதால் இஸ்லாமியத் திருமரபையும் பேணுங் கடப் பாடுடையவர். எனவேதான் தமிழ், இஸ்லாமிய மரபுக்குப் பொதுவாகச் செய்தார்.

தமிழ் இலக்கிய மரபிலே வீரம் காலங் காலமாகப் போற்றப்பட்டு வருகிறது. இராமயணத்திலே இராமன், இராவணன், ஏனையோர் வீரம் சொல்லப் பட்டுள்ளது. பாரதப் போரில் அருச்சுனன், வீமன் முதலானோரின் வீரம் களக் காட்சியாக் காட்டப்படுகிறது. இவ்வாறு தமிழ் இலக்கிய மரபில் பேசப்படும் வீரம் உமறுவின் சீறாப்புராணத்திலும் பின்பற்றப்பட்டுள்ளது.

சீறாப்புராணத்தில் வீரச்சுவை விஞ்சி நிற்கும் ஆர்ப்பாட்டப் போர்ப் பாடல்கள் பலவற்றைக் காணலாம். பதுறுப்படைத் தலைவர் பெருமானார் சக்பு என்னும் தம் குதிரையின் மீது ஏறியதும் அக்குதிரை புறப்பட்ட வேகத்தைப் பொருளுக்குத் தகுந்த ஓசையோடு நயமுடன் பாடிக்காட்டுவார்.

"கடலினைக் கலக்க வென்றோ
கதிர்துகள் படுத்த வென்றோ
வடவரை தகர்க்க வென்றோ
மண்ணிலம் பிளக்க வென்றோ
அடையவர் பதியை யின்னே
அந்தரத் திடுக வென்றோ
தடமுறுங் கடின வாசி
தாள்பெயர்த்திட்ட தம்மா"

என்ற பாடல் மூலம் இது காட்டப்படுகிறது. அவர் வீரம் செறிய, பயிர்ச்செடி துவண்டு அழியச் சென்ற காட்சி,

"கடிமலர்க் குவளைக் காடுங்
கமலமும் நெரிந்து சிந்தக்
குடைகொடி செறிந்த தொப்பக்
குருகின மிரியல் போகப்
புடைபடுங் கதலிச் சூழல்
பூங்கரும் படவி மாய
மடைசெறி தடங்கள் சூழ்ந்த
மருதம்விட்ட கன்று போனார்."

என ஒவ்வொரு சொல்லும் வீரம் மிளிரச் செப்பப் பட்டுள்ளது. இவ்வாறு தமிழ் இலக்கிய மரபாம் வீரம் சீறாப்புராணத்திலும் காணப்படுகின்றமை சீறாப்புராணத்தில் தமிழ் இலக்கிய மரபு பின்பற்றப்பட்டுள்ளமைக்குச் சான்று பகரும்.

தமிழ் இலக்கிய மரபிலே பழமை போற்றும் பண்பு முக்கிய ஒரு மரபாகக் கட்டிக்காக்கப்படுகிறது. இந்த மரபைச் சீறாப்புராணத்திற் பலவிடங்களில் இனங்கண்டு கொள்ளலாம். தமிழ் இலக்கியங் களெல்லாம் திருக்குறளைச் சொல்லாலும் பொருளாலும் போற்றி வந்துள்ளன. இது மரபாகவே மாறி விட்டது எனலாம்.

"கண்படைத்தவர் இவரெழிற்
காண்பவர் முகத்திற்

புண்படைத்தவ ரிவர்தமைக் காண்கிலார்"-

எனப் பெருமானார் எழில் பேசுமிடத்தும்,

"அடுத்தவை காட்டுகின்ற
பளிங்குபோல் அகத்தினூடு
தொடுத்திடு நலிதல்யாவு
முகத்தினால் தோன்றக் கண்டு"-

எனப் பெருமானார் குறிப்பறியும் ஆற்றலைக் குறிக்கு மிடத்தும் இன்னும் பல்வேறு இடங்களிலும் குறட் புலமையைப் புலவர் தம் தமிழ்ப் புலமையோடு குழைத்துத் தரக் காண்கிறோம்.

சுந்தரர் திருமணக் காட்சியைச் சேக்கிழார் பாடும் போது, "காளையைக் காண எண்ணிலாத கண்கள் வேண்டும்" என்கிறார். "நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்"எனக் கம்பர் திருமணக் காட்சியைக் காட்டுகிறார். தமிழ் இலக்கிய மரபு போற்றும் சீறாப்புராணமும் மேற்போந்தவாறு திருமணக்காட்சியைப் பழமை சார்ந்து பாடுகிறது.

"மாயிரு ஞாலம் போற்று
மன்னபித் தாலிபீன்ற
சேயலி மெய்யின் வாய்ந்த
திருவடி அழகை நோக்கிப்
பாயரிக் கருங்கட்
செவ்வாய்ப் பாவையீரிமையா நாட்டத்
தாயிரங் கண்கள் வேணுமெனச்சில
அறிவிற் சொல்வார்"

என்ற பாடல் மூலம் "இமையா நாட்டத்தாயிரங் கண்கள்" எனப் பழமை கொண்டு புதுமை புதுக்கிப் பாடுகிறார்.

திருத்தக்கதேவர் கைவண்ணத்தையும் உமறுவின் சீறாப்புராணத்தின் காப்பிய வண்ணத்தில் காணலாம். உமறுவின் சிற்றிலக்கியப் புலமையும் சீறாப்புராணத்தில் தொட்ட இடத்திலெல்லாம் சுடர் விடக் காண்கிறோம்.

இவ்வாறு பழமைபோற்றும் பண்பு கொண்ட சீறாப்புராணம், தமிழ் இலக்கிய மரபுப்படி நாயகரைப் போற்றும் தன்மையையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

காப்பியத் தலைவர் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார். மனித குலத்தின் நிகரற்ற ஒரு தலைவனைத் தலைவராகக் கொண்ட காப்பியம் சீறாப்புராணம். "அறத்தினைத் திரட்டி ஆணுரு அமைத்த திறத்தினராகிய" பெருமானார் இம்மை, மறுமை ஆகிய இருவகைக் கனிகளையும் உதவும் வள்ளலாகக் காணப்படுகிறார். இருமைக்கும் துணை நின்று ஈடேற்றம் தரவந்த காப்பிய நாயகர் மக்களுக்கு, வானவர்களுக்கு, எல்லா உயிரினங்களுக்குமே தலைவராக, உலக முதல்வராகக் காணப்படுகிறார்.

இவ்வாறு நாயகர் புகழ் பேசப்படுகிறது. இன்னும் நல்வழி செல்லின் நன்மையே சேரும் என்பதும் சீறாப்புராணத்தில் காட்டப்பட்டுள்ளது. பெருமானார் வழியில் விரும்பி வந்தோர் "ஈனமில் சுவன நன்னாடு எய்துவர்" எனவும் அவர்வழி மறுத்து நின்றோர் "தேவராயினும் நரகம் சேர்வர்" எனவும் உமறுப்புலவர் கூறிக் காட்டுகிறார். இதனை உடன்பாடாக மட்டுமன்றி எதிர்மறையாலும் காட்டுகிறார். நாயகன் பிறப்பறிந்து தீமையாளன், சைத்தான் கலங்கித் தவிப்பதைக் காட்டுகிறார். இவ்வாறு நல்வழி சார்ந்து நன்மை நடப்பது சீறாவில் அழகுறக் கூறப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கியத்தில் உவமை, உருவகம், தற்குறிப்பேற்றத் தொடர்கள், வர்ணனைகள் முதலியன மரபாகத் தொடர்ந்து வந்துள்ளன. இந்த மரபு சீறாவிலும் பின்பற்றப்பட்டுள்ளது. "மேகம் வானத்துச் சூலுற்றுக் கனத்துக் கருத்துப் பெருமழையாகப் பொழிந்தது" எனப் பெருமானை உவமையாகக் காட்டுகிறார். "அகிலமெங்கணும் திடுக்கிட வாய் திறந்ததிர்ந்து" எனவும் உவமை மரபு கூறுகிறார். பாத்திமா திருமணப் படலத்தில், "பாயரிக் கருங்கட் செவ்வாய்ப் பாவையீர்" எனவும் "கருந்தடங் கூந்தற் செவ்வரி வேற்கண் கடைசியர்" என நாட்டுப் படலத்திலும் அவர் காட்டி நிற்கும் உருவகத் தொடரைக் கண்டு சுவைக்கலாம். இயல்பாய் அசையும் கொடியில் தன் கற்பனைத் திறமூட்டிக் கூறுகிறார். தற்குறிப்பேற்றமாகக் கொடிகள் கைகளை நீட்டி வரவேற்பு வழங்கியதோடு மட்டுமன்றித் தூய்மையின் நிலைக்களமாக விளங்கும் பெருமானார் வரும் காரணத்தால் நகரைத் தூய்மைப்படுத்த மாளிகைச் சுவர்களின் தூசுதுடைப்பதாகப் பின்வரும் பாடலால் சொல்கிறார்.

"விதுக்கொள் மேனிலை மென்றுகள்
மாசறக் துடைத்துப்
புதுக்குவன் றொளிப்புரிந்தவோ
லசைந்தபொற் கொடிகள்"

தலைமுதற் பாதம் வரை பெண்ணை வர்ணிக்கும் மரபு தமிழிலக்கியங்களில் காணப்படுவதாகும் "இருளினும் இருண்ட மைக் குழலாள்" எனப் பெண் கூந்தலை வர்ணிக்கின்றார். இறை நம்பிக்கை இல்லா உள்ளத்தை வர்ணிக்கும்போது, "மனுநெறி பிழைத்த அபுஜகில் பொதித்த மனத்தினும் இருண்ட மைக் கடல்" என்கின்றார்.

தமிழலக்கிய மரபுப்படி நாயகனை வர்ணிக்கும் போது நாயகன் மாலை சூடி இருப்பதை "வனமலர்த்த தொடையுடைய முகமது' என்று கூறுகின்றார். காப்பியத்தலைவனை வேல்வேந்தன் எனவும், வேல் வல்லன் எனவும் சுட்டுவது தமிழிலக்கிய மரபு. சிலப்பதிகாரம், சிந்தாமணி, இராமாயணம் போன்று இது சீறாவிலும் உண்டு.

இவ்வாறு சீறாப்புராணம் சொல்லால், பொருளால் இன்னும் பல வழிகளால் தமிழிலக்கிய மரபைப் பின்பற்றி உள்ளது. மரபு போற்றுவதில் சிறந்து நிற்பதோடு புலவர் தமக்கெனத் தனி நிலை ஒன்றைக் கொண்டவர் என்பதையும் மறுக்கவியலாது.

# புதிய வேதம்

**தொடர்கதை –அத்தியாயம் 02**

மனித நேயம் என்பது இரத்த பந்தம், உறவுகள் அனைத்தையும் தாண்டிய மகத்தான சக்தியுடையது. இதனையே திருவள்ளுவர் "அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்" என்றார் போலும். அன்புடையோர், கருணை மனம் படைத்தோர், பண்புடையோர் அனைவரிடமும் இந்தச் சக்தியை நாம் காணமுடியும். எல்லா மதங்களும் இதனைத்தான் போதிக்கின்றனவாயினும் மதம் பிடித்தோர் தமது வசதிகளுக்கும், வாய்ப்புக் களுக்கும் வரவுகளுக்கும் சுய லாபங்களுக்குமேற்ப வழித்தடங்களை மாற்றிட மனித மனங்களைக் கடவுளின் பெயரால் இல்லாதவற்றை யெல்லாம் இருப்பதாகக் கூறித் திசை மாற்றம் செய்து கொண்டிருப்பதையும் பார்க்க முடிகின்றது. கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்திருந்தாலும் நேசன் என்ற ஜெபநேசன் யாராவது 'நீ எந்த மதம்?' என்று கேட்டால் 'சம்மதம் எனது மதம்' என்று வேடிக்கையாகக் கூறுவான். சிவனேசன் கொடுத்த சாருலதாவின் கடிதத்தைப் படித்து விட்டு, "சிவா இதுபற்றி நான் எதுவும் கூற முடியாது" என்று கூறிக் கடிதத்தை திருப்பிக் கொடுத்த போது அதிர்ந்து போய் நின்ற சிவனேசனால் எதுவும் பேச முடியவில்லை.

"என்ன சிவா பயந்திட்டியா? பொம்பிளைப் பிள்ளை விடயம். திடிரெனப் பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து நீயும் நானும் எதுவித முடிவுகளையும் மேற்கொள்ள முடியாது. சாருலதா உத்தியோகம் பார்க்கும் பெண். அவள் மனதில் என்ன இருக்கு என்று பெற்றவர்களாலோ, உடன் பிறப்பான உன்னால் கூட அறிந்து கொள்ள முடியாது. நான் ஒரு கல்யாணம் முற்றாக்கி வைத்திருக்கின்றேன். அவசரப்பட்டு எதுவும் செய்ய வேண்டாம் என்று அப்பாவுக்கு அறிவித்து விடு. அப்புறம் சாருலதாவின் மனதை தெரிந்து கொண்ட பின்பு மேற்கொண்டு ஆவன செய்யலாம்" என்றான்.

இப்படியெல்லாம் சிந்திப்பதற்கு என்னால் முடியாது நேசன் நீ எப்படி? இப்படி? மேற்கொண்டு பேசமுடியாதவனாக அவன் கரங்களைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டான் சிவனேசன்.

"சிவா! இதற்குக் காரணம் பள்ளிப் படிப்பல்ல. அறிஞர்கள் பலர் அனுபவித்து எழுதிய நல்ல நூல்கள். இப்ப யார் படிக்கின்றார்கள்? பணம் ஒன்றே குறிக்கோளாக இராப்பகல் நித்திரை விழித்து பனியிலும், குளிரிலும் உழைத்துக் கொண்டிருக் கின்றார்கள். இந்தப் பணம் தான் மனிதனை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக் கின்றது. உழைக்கத் தான் வேண்டும். உழைக்கக் கூடாது என்று சொல்ல வில்லை. ஓய்வு நேரத்தில் நல்ல நூல்களைப் படித்துப் பார்க்கலாமில்லையா? என்னைத் தவறாக நினைக்காதே சிவா. இவர்களில் ஒருவனாகத்தான் நீயுமிருக்கின்றாய். நாம் நம் குடும்பம் என்ற வட்டத்துக்குள் சுற்றாமல் மற்றவர்களைப் பற்றியும் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கணும். எத்தனையோ குடும்பங்கள் பணத்தினாலும், சொத்துக்களாலும் பிரிந்து போய்த் தனித்து வாழ்ந்து கொண்டிருக் கின்றார்கள். உங்கள் பிரச்சினையும் முற்றிவிட்டால் இப்படி ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டு விடும். ஆகவே வேண்டியதைப் பார் சிவா"

"சரி நேசன், நான் இன்றைக்கே கடிதம் போட்டுவிடுகின்றேன்."

"சிவா நீ எதையும் பெரிதாக நினைத்துக் கவலைப்படாதே. நடப்பது எதுவும் நடந்துதான் தீரும். நம் கையில் எதுவும் இல்லை" என்று ஆறுதல் கூறிவிட்டு புறப்பட்டான் நேசன்.



கே.எஸ்.ஆனந்தன்

மனித வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் சுழல் சக்கரமாகவிருப்பதை உணராத சிலர் இன்பம் வரும் போது துள்ளிக் களிப்பதும் சிறிது துன்பம் வந்தால் கூட தாங்க முடியாதவர்களாக, அங்குமிங்குமாக அலைந்து உழல்வதுமாகத் துவண்டு போகின்றனர். பண வளம், பொருள் வளம் இரண்டும் இருந்து விட்டால் இன்பம் என்று சிலர் நினைப்பதுண்டு. இல்லாதவனுக்கு "இல்லை" என்ற ஒரு கவலை. இருப்பவனுக்கோ பல கவலைகள். இதை உணர்ந்து விட்டால் மனிதன் நிம்மதியாக வாழ்ந்துவிட முடியும் என நினைப்பவன் நேசன். நிம்மதியை விலை கொடுத்து வாங்கிவிட முடியுமென்றால் பணம் படைத்தோர் எல்லாம் போட்டி போட்டு வாங்கி விடுவார்களே என்று நண்பர்களிடம் தமாசாகப் பேசி எல்லோரையும் ஓரளவுக்கேனும் மகிழ்ச்சியாக இருக்கச் செய்யும் நல்ல உள்ளம் படைத்தவன்.

அவனுடைய தாயார் கொழும்பில் தனது மகளுடன் வாழ்ந்து வந்தார். ஒரே ஒரு அக்கா. இலங்கை வங்கியில் கணக்காளராயிருக்கும் கிறிஸ்தோபர் என்பவரை மணந்து இரு குழந்தை களுடன் வாழ்கின்றார். கொழும்பிலிருந்ததால்

தொலைபேசி வசதிகள் இருந்தன. அன்று பல்வேறு சிந்தனைகளுடன் படுத்திருந்தவனைத் தொலைபேசி, மணியடித்து அழைத்தது. எழுந்து சென்று எடுத்தான்.

"ஹலோ"

"நேசன் நான் அக்கா கதைக்கிறன்"

''அக்கா என் குரலைக் கண்டுபிடித்து விட்டீர்கள் எப்படி? எல்லோரும் சுகமா, ஏதும் விசேடமா? கொழும்பில் கெடுபிடி ஒன்றுமில்லையே, இங்கே ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு விதமாய்க் கதைக்கிறார்கள்"

"இன்னும் ஏதும் கேட்கவிருக்கா? முடிச்சிட்டியா?''

''என்னக்கா நீங்கள்? நான் ஒவ்வொரு கேள்வியாய் கேட்காமல் ஒருமித்துக் கேட்டு விட்டேன் என்று கோபமா?''

''உனக்கு என்னப்பா சோலி, அம்மா ஒரு குழந்தை. என்னுடைய இரண்டு குழந்தைகள். ஒரே வேலை தான். அது சரி உனக்கு லீவு இருந்தால் இங்கே வந்து போகலாமில்லையா?''

"ஏதும் விசேடமா?''

"விசேடம் என்றால் தான் வருவியா?''

''இல்லையக்கா பிரச்சினையான காலத்திலை தேவையில்லாமல் வந்து போவது தான்....." என்று இழுத்தான்.

"அம்மாவுக்குக் கொஞ்ச நாளாய் உடல் நிலை சரியில்லை. உன்னை நினைத்து நினைத்து மனம் புழுங்கிக் கொண்டிருக்கிறார். அது தான் கேட்டனான்."

"சரி சரி, நான் அடுத்த மாதமளவில் வருகின்றேன். அம்மாவை கேட்டதாகச் சொல்லுங்கோ, அது சரியக்கா யாழ்ப்பாணம் போகலாமோ?''

"போகலாம் பிரச்சினையில்லை, நம்மவர் களாலை தான் பிரச்சினை. என்ன நேரம் எது நடக்கும் என்று சொல்ல முடியாது. வந்து தான் பாரேன் வைக்கட்டுமா?''

"ஓ கே. மருமக்களுக்கு என்ன வாங்கி வரவேண்டும் என்று கேட்டுப் போன் செய்யுங்கோ" என்று கூறி ஒலிவாங்கியை வைத்துவிட்டு படுக்கையில் சென்று படுத்துக் கொண்டான்.

காலையில் எழுந்து வேலைக்குப் புறப்படும் முன்னர் சிவனேசனுக்குத் தொலைபேசி மூலம் நடந்தவற்றைக் கூறிப் பின்னேரம் சந்திக்கும்படி தெரிவித்துக் கொண்டு புறப்பட்டான்.

☆ ☆ ☆

சாருலதா வேலை முடித்து வீட்டுக்கு வந்த போது சுந்தரம்பிள்ளை தொலைக்காட்சியில் நாடகம் பார்த்துக் கொண்டிருந்தார். மகளைக் கண்டதும் நாடகம் பார்ப்பதை நிறுத்தி விட்டு எழுந்து வெளியில் வந்து நின்றார். சாருலதா உடுப்பு மாற்றிக் கொண்டு வந்து தேநீர் பருகிவிட்டு வெளியே வந்ததும் "என்னம்மா என்ன முடிவு செய்திருக்கின்றாய்" என்று அவளைக் கேட்டார். அவள் எதுவும் கூறாமல் தலையைக் குனிந்து கொண்டிருந்தாள்.

"சாரு நான் உனது எதிர்காலத்தை நினைத்துத் தான் இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதித்தேன். அந்தப் பெடியன் அடுத்த மாதம் கனடாவுக்குப் போகிறான். சங்கத்திலை வேலை செய்கிறான் என்று தானே நீ பின்னடித்தனி. இப்ப சற்று முன்பு வந்து தான் தகப்பனார் சொல்லி விட்டுப் போகிறார். அவன் கனடா புறப்படுமுன் எழுதிப் போட்டுப் போனால் உன்னையும் கூட்டிப் போவது சுகமாம். இனியும் யோசித்துக் காலம் கடத்தாமல் நன்றாக யோசித்துக் காலையில் எனக்கு முடிவு சொல்லணும்."

"அவரைப்பற்றிப் பலரும் பலவிதமாகக் கதைக்கினம். நான் அது தான் யோசிக்கிறன்"

"எனக்குத் தெரியும் சாரு. இந்தக் காலத்துப் பெடியள் செற் சேர்ந்தால் என்ன செய்வான்கள் என்பது தெரியாமலா என்ரை பிள்ளைக்கு கட்டி வைக்க முயன்றேன். கல்யாணம் செய்தால் திருந்திவிடுவான்கள். உன்ரை சின்னண்ணையைப் பற்றி ஊரெல்லாம் என்ன கதைக்கினம் அப்படித் தான் அந்தப் பெடியனும்"



"வெளிநாட்டுக்குப் போறதென்றால் பரவாயில்லை. இங்கே என்றால் தான் பிரச்சினை. எதற்கும் அண்ணாவையும் ஒருவார்த்தை கேட்க வேண்டும் தானே?"

"இங்கே பார் சாரு, அவங்கள் காசு எதுவும் கேட்கவில்லை. வீடுவளவு கேட்டாங்கள். நீயும் வெளியிலை போய் அங்கே செட்டிலாகினால் நாங்கள் உன்ரை வீட்டிலை இருப்பதற்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. நான் உன்ரை முடிவைக் கேட்ட பின் கொழும்பு போய்த் தம்பியுடன் கதைக்கலாம் என்றிருக்கிறேன்.

"என்னென்றாலும் செய்யுங்கோ. உங்கள் விருப்பத்திற்கு மாறா நான் நடக்க மாட்டேன்"

"சரியம்மா. நான் வாற கிழமை போய் தம்பியோடை கதைத்து விட்டு எழுத்துக்கு நாள் வைப்பம். அடுத்த மாதம் முதல் வாரத்திலை மாப்பிள்ளை கனடா போறாராம்" என்று கூறிவிட்டு மனைவியை அழைத்து அந்த சந்தோஷச் செய்தியைச் சொல்ல உள்ளே சென்றார். சாருலதா நாற்காலியில் சாய்ந்தவாறு கனடாக் கனவுலகில் மிதக்க ஆரம்பித்தாள்.

☆ ☆ ☆

அதிகாலை நான்கு மணிக்கு எழுந்திருந்தான் சிவனேசன். வெளியே பனி கொட்டிக் கொண்டிருந்தது. காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சுடச்சுடக் கோப்பி பருகிவிட்டு நேசனைத் தேடிப் புறப்பட்டான். விரைந்து சென்று நேசன் குடியிருந்த அடுக்கு மாடிக்குச் சென்று அவனுடைய அறைக்கதவின் அழைப்பு மணியை அழுத்தினான். சிறிது நேரத்தில் கதவு திறந்தது.

"சிவா நீயா? என்ன இந்த வேளையில்" என்று முகத்தைத் துவாயால் துவட்டிக் கொண்டே கேட்டான் நேசன்.

"நேசன் உன் போனுக்கு இரண்டு மூன்று தரம் எடுத்தேன். நீ என்ன ஓவ் பண்ணி வைத்தியா? அதுதான் நேரிலேயே வந்தேன்"

"அப்படி என்னப்பா பிரச்சினை? ஈவினிங் சந்திக்கும் போது கதைக்கலாம் தானே?"

"ஒரு பிரச்சினை சுமூகமாகத் தீர்ந்து விட்டது. அந்த விடயத்தை உனக்குத் தெரிவிக்கவே ஓடி வந்தேன். அப்பா கொழும்புக்கு வந்திருக்கிறார். எனக்குப் போனில் விடயத்தைக் கூறினார். சாருலதாவுக்கு பேசிய மாப்பிள்ளையை அவனுடைய அண்ணன் கனடாவுக்கு கூப்பிடுகிறானாம். சங்கத்திலை வேலை செய்த பெடி கனடாவுக்கு போறான் என்றதும் சாருலதா கல்யாணத்துக்கு சம்மதித்திட்டாளாம். மாப்பிள்ளை வீட்டார் றெயிஸ்டேசனை முடித்துக் கொண்டு போனால் சாருவைக் கூப்பிடுகிறது சுகமாம் என்று எழுத்துக்கு நாளும் குறித்தாய்ச்சு. அதைச் சொல்லத்தான் அப்பா கொழும்புக்கு வந்தாராம். எப்படியிருக்குப் புதினம்" என்று சிரித்துக் கொண்டே கூறினான்.

"சந்தோஷமான விடயம் தானே சிவா. எங்கட பிள்ளைகள் வெளிநாடு என்றதும் ஏதோ சொர்க்கம் என நினைக்கினம். வந்து பார்த்தால் தானே எங்கடை நிலைமை தெரியும் சிவா. டவுறிப் பிரச்சினை ஏதும்..."

"அப்படி எதுவும் இல்லை வீடு கேட்டினமாம். வேறு ஒன்றுமில்லையாம். எங்கடை குடும்பத்த வருக்கும் பிரச்சினை இல்லை. அங்கேயே இருக்கலாம்"

"எழுத்துக்கு டேற் வைத்தால் எப்ப என்று சொல்லேன். முடிந்தால் நானும் உனது சார்பில் கலந்துக்கலாம் இல்லையா?"

"நேசன் நேசன்" என்று அவன் கரங்களைப் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டே "என்னுடன் பிறந்த சகோதரனை விட என் மீது இத்தனை பிரியம் வைத்திருக்கின்றாயே. இதற்கு என்ன கைம்மாறு செய்யப் போகின்றேன்?"

"சிவா எனக்கு எதுவும் செய்ய வேண்டாம். நாம் என்றும் நல்ல நண்பர்களாயிருப்போம். அதுவே போதும். வா நீ. ரீ போடுறன் குடிக்கலாம். 'சான்ட்விச்' இருக்கு சாப்பிடுகின்றாயா?" என்று உள்ளே அழைத்துச் சென்றான்.

இருவரும் தேநீரைப் பருகியவாறே வீட்டாரின் சுகநலன்கள் பற்றிக் கதைத்துக் கொண்டிருக்கையில் நேசனுடைய தொலைபேசி மணி ஒலித்தது. நேசன் போனை எடுத்து "ஹலோ நேசன் ஸ்பீக்கிங்" என்றான்.

"டேய் மச்சான் நீ ஊருக்கு போகின்றாயாமே" என்றது பார்த்தீபன் குரல்

"உனக்கு யார் சொன்னது?"

"கணேஸ் சொன்னான். கணேஸின் அப்பா மகளுடைய கல்யாண விடயமாய்க் கதைத்தவராம். அவர் தான் கூறினாராம்."

"சிவா, நீ அப்பாவுக்கு நான் ஊருக்குப் போறதாய்ச் சொன்னாயா?" இடையில் சிவநேசனிடம் கேட்க சிவா தலையாட்டினான்

"யாரோட கதைக்கிறாய் நேசன்?"

"சிவா இங்கேயிருக்கிறான். அவனைத்தான் கேட்டேன். ஏன் பார்த்தி நீயும் வருகிறாயா?"

"நீ போனால் நானும் வருகிறேன். எங்கள் வீட்டிலும் ஒரே தொல்லை. என்னைக் கல்யாணம் செய்யச் சொல்லி. நீயும் வந்தால் அங்கே பெண் பார்த்துச் சரியாக்கலாம்."

"பார்த்தி யாரையாவது..... இல்லை இனித்தான்...." என்று சிரித்தான்.

"அதில்லை மச்சான் போட்டோ மட்டும் பார்த்தன். எனக்குப் பிடித்துக் கொண்டது. நீ தான் வந்து....." என்று மேற்கொண்டு அவன் கூறிய விடயங்களைக் கேட்டு அதிர்ந்து போய் நின்றான் ஜெபநேசன்.

(வளரும்)

# பெயர்களின் பெறுமானம்



வடவரணி
சி. சபா

✯ "அவரின் பெயர் பொன் எழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டும்"

✯ "அவரின் பெயர் இன்றும் வரலாற்றில் நிலைத்து நிற்கிறது"

✯ அவரின் பெயர் "கின்னஸ்" புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

✯ "எனது பெயர் சொல்ல ஒரு பிள்ளை இருக்க வேண்டும்."

ஒருவரின் பெயரில் என்ன மகத்துவம் இருக்கிறது? இதை நாம் சற்று ஆராய வேண்டியது அவசியமாகிறது.

ஒன்றிலிருந்து இன்னொன்றை வேறுபடுத்திக் காட்டுவதற்கோ அல்லது இனங்காணுவதற்கோ பெயர்கள் இடப்படுகின்றன. இது தனிமனிதனுக்கு மட்டுமன்றி அவன் பயன்படுத்தும் பொருட்கள், அவனைச் சார்ந்த உயிரினங்கள், உயிரற்ற சடப் பொருட்கள் அனைத்துக்கும் அவசியமாகின்றது. மேலும் நிறுவனங்கள், தொழிற்சாலைகள், நாம் பேசும் மொழி, இனம், நாடு அனைத்துக்கும் அதற்கான பெயர் அவசியமாகிறது. இப் பெயர்களைக் குறிப்பிட்டே நாம் எமது உரையாடல் களையும் தொடர்பாடல்களையும் மேற்கொள்கிறோம்.

தமிழ் இலக்கணத்தில் பெயர்களை இருபிரிவாகப் பிரித்துள்ளனர். ஒன்று 'காரணப்பெயர்' மற்றது 'இடுகுறிப்பெயர்'. மண்ணை வெட்டுவதில் மண்வெட்டி எனறும் குப்பையை வாருவதில் குப்பை வாரி என்றும், ஒரு காரணத்தின் அடிப்படையில் வழங்கி வரும் பெயர் காரணப் பெயர் ஆகும். ஆடு, மாடு, பால், பழம், என்பன காரணம் எதுவுமின்றி ஒரு சொல்லை குறிப்பிட்டு அல்லது அடையாளமிட்டு அழைப்பது "இடுகுறி" பெயராகும். கவிஞர் கண்ணதாசன் தனது அர்த்தமுள்ள இந்துமதத்தில் சொல்கிறார்

"சனங்கள் எல்லோரும் இடம் விட்டு இடம்மாறி எங்கோ சென்றுகொண்டிருக்கிறார்கள்.வசதி குறைந்த, வலிமை குறைந்தவர்கள் தமது சிறிய பொதிகளுடன் ஊர்ந்து ஊர்ந்து சென்று கொண்டிருக் கிறார்கள். வலிமையுள்ளவர்களும்,வசதி கூடியவர் களும் தமது மூட்டைகளுடன் குதிரை கழுதைகளில் வேகமாக நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். தமக்கு பொருத்தமான இடங்களைத் தெரிவுசெய்து அங்கு தங்கிவிட்டார்கள். ஊர்ந்து ஊர்ந்து சென்று தங்கியவர்களின் இடம் "ஊர்" என்றும் நகர்ந்து சென்று தங்கியவர்களின் இடம் "நகர்" என்றும் பெயர்பெற்றன.'' எவ்வளவு அருமையான குறியீட்டுப் பெயர். இது அவரின் கண்ணோட்டம். கடந்த இருபத்தைந்து வருடங் களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் தோன்றிய "துளசி" என்ற ஒரு சஞ்சிகையின் ஆசிரியர் தனது தலையங்கத்தில் பெயர் பற்றிக் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.

"இந்தச் சஞ்சிகைக்குத் 'துளசி' என்று ஏன் பெயர் வைத்தீர்கள்? என்று என்னைப் பலர் கேட்கிறார்கள். துளசிக்கும் இந்தப் பத்திரிகைக்கும் எந்த வகையான தொடர்பும் இல்லை. அமுதலிங்கம் என்று பெயர் உள்ளவர்கள் அமுதமா அள்ளிக் கொடுக்கின்றனர்? தருமலிங்கம் என்று பெயருள்ளவர்கள் தருமமா செய்கின்றனர்? அவர்களுக்கும் பெயருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. பெயர் என்பது ஒன்றிலிருந்து இன்னொன்றை வேறுபடுத்திக் காட்டுவதற்கே ஆகும். அதே போலவே இன்னொரு சஞ்சிகையிலிருந்து இந்தச் சஞ்சிகையை வேறுபடுத்திக் காட்டுவதற் காகவே இந்த சஞ்சிகைக்கு நான் துளசி என்று பெயர் வைத்துள்ளேன்." இது பெயர் பற்றிய இன்னொரு கண்ணோட்டம் ஆகும்.

தனிமனிதனுக்கு வைக்கப்படும் பெயர்கள் அர்த்தம் உள்ளனவாக இருக்க வேண்டுமெனத், தமிழ் மக்கள் கூடிய அக்கறை கொண்டிருந்தனர். செயல்திறன், ஆற்றல், அறிவு, சத்தியம், வீரம், ஒழுக்கம் என்பனவற்றின் வெளிப்பாடாகப் பெயர்களைச் சூட்டிப் பெருமைப்பட்டனர்.

மன்னனிலிருந்து மக்கள் வரை தங்கள் பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டுவதைப் பெரும் விழாவாகக் கொண்டாடி மகிழ்ந்ததை இலக்கியங் களிற் காணக்கூடியதாகவுள்ளது. இதைப் பின்பற்றுவதற்கு யாழ்ப்பாணத் தமிழறிஞர்களும் அதிக அக்கறை செலுத்தினார்கள். அது பற்றிய ஒரு சிறு கண்ணோட்டமாகவே இக் கட்டுரை அமைகிறது.

சுமார் ஒரு நூற்றாண்டு காலப்பகுதிக்கு முன் யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் மத்தியில் பல்வேறுபட்ட சமூகப்பிரிவுகள் உருவாக்கப்பட்டிருந்தன. அந்த சமூகங்களின் தேவைப்பாடுகளை நிறைவேற்றத் தனித்தனியான அலகுகள் காணப்பட்டன. கல்வி அறிவு, பொருளாதாரம், அந்தஸ்து, பரம்பரை என்ற அடிப்படையிலும் ஒருவர் மேற்கொண்ட தொழிலின் அடிப்படையிலும் சமூகங்கள் உருவாக்கப்பட்டு

அல்லது பிரிக்கப்பட்டிருந்தன. அதன்படி உயர் மட்டம், நடுமட்டம், கீழ்மட்டம் எனச் சமூகங்கள் வகைப்படுத்தப்பட்டிருந்தன.

இச் சமூக மட்டங்களில் உள்ளவர்களுக்கு பெயரிடுவதற்கு உயர்மட்டப் புத்தி ஜீவிகள் கையாண்ட வழிமுறைகள் மிகவும் அருவருக்கத் தக்கவையாகும். பிறக்கும் போது ஒருவனுக்கு வைக்கப்படும் பெயர் அவன் நூறு வருடங்கள் வாழ்ந்து இறந்துவிட்ட போதும் சந்ததிரீதியாகத் தொடரும் எச்சங்களாக நிலைத்திருக்கும்.

கீழ்மட்டம் என வகைப்படுத்தப்பட்ட சமூகத்திற்கு கந்தன், முருகன், நாகன் என்ற பெயர்களை வைக்கவும்.

நடுமட்டம் என்று வகைப்படுத்தப்பட்ட சமூகத்திற்கு கந்தர், முருகர், நாகர் என்ற பெயர்களை வைக்கவும்.

உயர்மட்டம் என்று வகைப்படுத்தப்பட்ட சமூகத்திற்கு கந்தப்பு, முருகேசு, நாகப்பு, என்ற பெயர்களை வைக்கவும் இந்த புத்திஜீவிகள் வழியமைத்துக் கொடுத்தனர்.

இதன் அடிப்படையில் பெயர் மூலம் ஒரு சமூகத்தை இனங்காணவிரும்பினார்கள். அத்துடன் கீழ்மட்டத்துக்கு உரித்தாக்கப்பட்ட பெயர்களில் "அவன்" "இவன்" என்று அழைக்கும் மரியாதை குறைவான "அடையாள ஓசை" புகுத்தினார்கள். அதைப்போல் நடுமட்டத்திற்கு உரித்தாக்கப்பட்ட பெயர்களில் சற்று மரியாதையைச் செலுத்தி "அவர்", "இவர்" என்ற ஓசையைச் சேர்த்துக் கொண்டனர்.

இவை கற்பனை செய்யப்பட்டவையல்ல. ஆவண ரீதியாகச் சான்று படுத்தக்கூடிய விடயங்களாகும்.

இதன் பின் கீழ் மட்ட சமூகத்தினருக்கு, கல்வி அறிவு பொருளாதாரம் வளர்ச்சி கண்ட போது தமக்கு உரித்தாக்கப்பட்ட பெயர்களில் நாகரீகமான முறையில் சில மாற்றங்களை உருவாக்கினர். அவை கீழ்வருமாறு அமைந்தது.

கந்தன்ஸ்ரீ சுகந்தன் ஜெகந்தன்
முருகன்ஸ்ரீ வேல்முருகன் திருமுருகன்
வேலன்ஸ்ரீ கதிர்வேலன் வடிவேலன்

வெறுமனே கந்தன் முருகன் வேலன் ஆக இருந்த சமூகப் பெயர்கள் காலப்போக்கில் மாற்றமடையத் தொடங்கின. இன்றைய கால கட்டத்தில் அவை செயலிழந்துவிட்ட போதிலும் அதன் எச்சங்கள் மாறாது நிலைத்து நிற்பதை அவதானிக்கலாம்.

பெயர்கள் மூலம் சமூக மட்டங்களை உருவாக்கிய புத்திஜீவிகள் அத்துடன் நின்று விடாது, பெயர் மூலம் சொத்துக்களைச் சேர்க்கும் கைங்கரியத்திலும் ஈடுபட்டனர். அதன் விபரத்தையும் அறிந்து கொள்வோம்.

அக்காலத்தில் கூடிய நிலங்களை வைத்திருந்தவர்களும், நிலங்களைப்பிரித்து கொடுக்கச் சந்ததி இல்லாதவர்களும், இறுதிக் காலங்களில் தமது புண்ணிய தலங்களான காசி, சிதம்பரம், கதிர்காமம் என்ற தேவசன்னிதானங் களுக்கு நன் கொடையாகத் தானம் செய்திருந்தனர். அவற்றைச் சில நம்பிக்கையாளர்கள் பராமரித்து அதன் வருமானங்களையும் பெற்றுக் கொண்டனர்.


அக்காலத்தில் தனிமனிதர்களின் பெயர்கள் தெய்வங்களின் பெயர்களாக மட்டுமே அமைந்திருந்தன. (உதாரணம் : காங்கேசன், கிருஸ்ணன், முருகன், வள்ளி, தெய்வானை என அமைந்திருந்தது) ஆனால் தெய்வ ஸ்தானங்களின் பெயர்களாக அமைந்திருக்கவில்லை. காசி, கதிர்காமம், சிதம்பரம், தில்லை என்ற புண்ணியத் தலங்களின் பெயர்கள் தனி மனிதனுக்கு அமைந்தி ருக்கவில்லை. ஆனால் அத்தலங்களுக்குப் பெருவாரி யான சொத்துக்கள் நன்கொடையாக இருந்தன.

இச்சொத்துக்களைத் தமது குடும்ப சொத்துக் களாக மாற்றும் நோக்குடன் தமது வாரிசுகளுக்கு காசி, கதிர்காமம், சிதம்பரம் என்ற பெயர்களை இந்த புத்திஜீவிகள் வலிந்து பிள்ளைகளுக்குச் சூட்டினர். காலப்போக்கில் அந்தச் சொத்துக்களைத் தமது சந்ததிக்குச் சேர்த்துக் கொண்டனர். பெயர்களைச் சூட்டுவதில் பெரும் கைங்கரியங் களை மேற்கொண்ட தமிழ்ச் சமூகம் இன்று செய்வதறியாது அர்த்தமற்ற பெயர்களைச் சூட்டிக் கொண்டு அல்லல் படுவதை அவதானிக்க முடிகிறது.

எண்சோதிடம், அதிஸ்ட விஞ்ஞானம் இன்று பெயர்களை ஆட்டிப்படைக்கத் தொடங்கிவிட்டன. அம்மை அப்பன் வைத்த அருமையான பெயர்களைக்கூட விஞ்ஞானத்துக்காக மாற்றிக் கொண்ட பலரைக்காணக்கூடியதாகவுள்ளது. எண்களின் அடிப்படையில் எழுத்துக்களில் மாற்றம் செய்து பெயர்கள் கொலை செய்யப்படுகின்றன. அப்பெயர்களிலிருந்து பெறப்படும் ஓசை எந்த மொழியுடனும் ஒத்துவராத நிலை காணப்படுகிறது. மேலும் இன்று பெற்றோரால் வைக்கப்படும் பெயர்களைப் பேரன், பாட்டி உறவுமுறை கொண்டவர்கள் உச்சரிக்கமுடியாது கஸ்டப்படு வதையும் அவதானிக்க முடிகிறது.

வளர்ந்து வரும் இப்போக்கின் முடிவினை உற்று நோக்கும் போது வாகனங்களுக்கு இலக்கம் கொடுப்பது போல எதிர்காலத்தில் பெயர்களுக்குப் பதிலாக இலக்கங்களையே கொடுக்கும் நிலை உருவாகினால் கூட அதிசயப்படுவதற்கில்லை.

# புலம்பெயர் தமிழர்களும் சொந்த வளர்ச்சிகளும் : சில சிந்தனைகள்



*பேராசிரியர் மா. சின்னத்தம்பி*

*தலைவர், சட்டத்துறை*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

## அறிமுகம்

மனித சமூகத்தின் வளர்ச்சி என்பது மாற்றங்களுடன் இணைந்தது. மாற்றங்கள், பல வெற்றிகள், தோல்விகள் பற்றிய அனுபவங்களின் தொடர் விளைவுகள், படிப்பினைகள் பொதுமையாக் கப்பட்ட போது தத்துவங்களும் கோட்பாடுகளும் உருவாகின.

இவ்வாறு உருவாக்கப்பட்டவைதான் சமயமும் கலையும், பண்பாடும். மனிதனது முன்னேற்றத்தைக் கட்டுப்படுத்தி, நெறிப்படுத்தும் சமுதாயச் சட்டங்களை உருவாக்க அவை உதவின. ரூசோ என்ற அறிஞன் சமுதாய ஒப்பந்தங்கள் சமூக வளர்ச்சிக்கு உதவியதாக குறிப்பிட்டான்.

மனித வாழ்வில் எதிர் நோக்கிய சவால்களும் மனிதனது ஒய்வும், சிந்தனையும் ஒன்றிணைக்கப்பட்ட போது கடவுள் பற்றிய எண்ணங்கள் உதித்தன. விஞ்ஞான பொறிமுறை ஒழுங்கு முறை யூடாக சமயம் பற்றிய சிந்தனை வளர்ந்தாலும் "எதிர் வினாக்கள் தொடுக்காமல் பின்பற்றப்பட வேண்டியதாக" வளர்க்கப்பட்டு விட்டது.

கோவில்களின் உருவாக்கம், வளர்ச்சி நவீன மயமாக்கம், என்பன சமூகப் படிமுறை முன்னேற்றங்களுக்கு முன்னோடியாகவும், பல சந்தர்ப்பங்களில் சமூக வளர்ச்சி மாதிரிகளின் விளைவாகவும் காணப் படுகின்றன. சமயம், கோவில்கள், அவை சார்ந்த அணுகு முறைகள் என்பன நவீன மயப்பட்டு வருவதும் கவனிக் கத்தக்கது. நவீன உற்பத்தி மாதிரிகளும், தொழில் மாதிரிகளும் லௌகிக வாழ்வியலை மாற்றியமைத்த போது அதனுடன் இணைந்து கோவில்களின் பங்களிப்பும் மாற்றமடைந்து வருகின்றது. கோவில்கள் சமூக ஆதரவைப் பெறுவதற்கும், நிலைத்திருப்பதற்கும் கோவில்களின் சமூக கண்ணோட்டங்களின் மாற்றறங்கள் தேவைப்படுகின்றன. இவை தொடர்பான ஓர் உசாவலின் ஆரம்பமாக இக் கட்டுரை அமைகின்றது.

## சமயத்தின் தேவைகள்

தொடக்கத்தில் தெய்வீக உள்ளுணர்வுடன் சமயம் பற்றிய எண்ணங்கள் துளிர்க்கத் தொடங்கின. தனிநபர்களின் நம்பிக்கை சார்ந்த விடயங்களாக அவை நம்பப்பட்டன.

மனித நாகரிகம், நவீனமயமாதல், தொடர்பான மாறுதல்கள் பற்றிய ஆய்வுகள் சமயத்தின் புதிய அணுகுமுறைகளை ஊக்கு வித்து வந்துள்ளன. முன்பு சமயத்தின் இயல்பு மிகவும் கட்டற்றதாயிருந்தது. இப்போது அவை ஒடுங்கி வருகின்றன. ஒரே சமயத் தில் இருப்பவர்களி டையிலும் பல மாறுதல் கள் உலகம் முழுதும் நிகழ்ந்து வருகின்றன. உணவுப் பழக்கம், உடைகள், வாழ்வியல், சமய வைபவங்கள் கட்டுப்பாடுகள், கட்டுப்பாடுகள் தொடர் பாகப் பல வேறுபாடுகள் வளர்ந்து வருகின் றன. குறிப்பாக வேறுபட்ட புவியியல் பொருளாதார தொழில்நுட்ப கலாசார சூழல் கொண்ட நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து தமது வாழ்வை நிலை நிறுத்த முயன்றபோது சமயம் சார்ந்த எண்ணங்கள், நடைமுறைகள் என்பவற்றிலும் மாற்றங்கள் வளர்ந்து விட்டன. முன்பு பலமாக விளங்கிய மூட நம்பிக்கைகள் - தமக்குரிய தீமைகளைத் தாமே உருவாக்கும் நம்பிக்கைகள் - படிப்படியாகக் குறையத் தொடங்கிவிட்டன. மாற்றங்கள் உள் நுழையாத சமூகங்களில் மூட நம்பிக்கைகள் - சமய உணர்வுகளுடன் பலமாக பிணைக்கப்பட்ட "விரும்பும் துன்பங்களை" தொடர்ந்து கொண்டு தானுள்ளன. பயம், சந்தேகம், விசாரணைகளை நிராகரித்து செயற்படல் என்பன இன்றும் தெளிவற்ற துன்பியல் வாழ்வை நிலைபெறச் செய்து வருகின்றன.

விஞ்ஞான பூர்வமான பல மானிடத் தேவைகளை நிறைவு செய்வதாகச் சமயம் அனுஷ்டிக்கப்படுவதாலே அதன் குறியீடுகளான கோவில்களும், அதன் சமூகம் சார்ந்த தெய்வீக நடை முறைகளும் சடங்குகளும் தொடர்ந்து

வளர்கின்றன. பொருளாதார வசதிகள் கோவில்களில் மிகையாகவே பிரதி பலிக்கின்றன.

அமைதி, நல்நம்பிக்கை, அன்பு, இரக்கம், என்பவற்றைத் தனி மனிதனிடமிருந்து சமூகம் நோக்கி பரப்புவதில் சமயங்கள் மிகப் பெரிய பங்களிப்பைச் செய்து வருகின்றன. விரக்தி, சிந்தனைக் குழப்பங்கள், முரண்பாடுகள், அழுக்காறு, வசதியின்மை, என்பவற்றைக் களைவதற்குரிய வழிமுறைகளைச் சமயம் வழங்கிக் கொண்டேயிருக்கின்றது. உயர்கல்வி, விஞ்ஞானம், புத்தாக்கம், ஆய்வு மூலமாக முன்மொழியப்படும் பல முடிவுகள் இந்து சமயிகளினால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சொல்லப்பட்டுள்ளதோடு நிரூபிக்கப்பட்டும் உள்ளன. தத்துவங்கள், கதைகள், இசைப்பாடல்கள், அற்புதங்கள், அழகியற் கலைகள், போன்ற பலவற்றையும் பயன்படுத்திச் சமயம் தனது சமூக இலக்கினை நிறைவேற்றி வருகின்றது. இன்று நவீன தொழில் நுட்ப வடிவங்களையும் சமயங்கள் பரந்துபட்ட வகையில் பயன்படுத்தி வருகின்றன. நம்பிக்கைகள் தான் மனிதனின் அடி நாதமாகும். நம்பிக்கைகளைப் பலமாகச் சமூகத்தில் விதைக்கும் வலிமை எப்போதும் சமயங்களுக்கு உண்டு.

இந்த அடிப்படையில்தான் கோவில்களும் கோவில் சார்ந்த மதத் தலைவர்களும் ஒப்புவமையற்ற சமூக மேலாண்மையைப் பயன்படுத்தி வருகின்றனர்.

மனித சமூகத்திற்குரிய பாதுகாப்பை வழங்கக் கூடிய ஒழுக்கம், விழுமியம், பண்பாடு, மரபுகள், என்பவற்றை நிலை நிறுத்தி வருவன சமயமும் கோவில்களும் தான்.

இந்து சமயம், மோட்சத்திற்கான வழி முறையாகச் சமயத்தை வலியுறுத்தினாலும் நடை முறைகளில் வாழ்வாங்கு வாழ்வதற்குரியதாகச் சமயம் தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும்.

வங்காளத்தில் அமெரிக்க மிஷன் பாடசாலைகளில் பெற்ற கல்வி, சமூகம் நோக்கிய பார்வையை சமயத்தில் உருவாக்குவதற்குச் சுவாமி விவேகானந்தருக்கு உதவிற்று. ஆங்கிலேயர் அமெரிக்க கிறிஸ்தவ மிஷனரியினர் மக்களிடையே சமயத்தைப் பெரும் எடுப்பில் கொண்டு செல்வதற்கும் சமூகத் தேவைகளுடன் - பொருளாதாரத் தேவைகளுடன் சமயம் பிணைக்கப்பட்டமைதான் காரணம் என்பதையும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

## கோவில்கள் பற்றிய புதிய அணுகுமுறை

எமது வாழ்வியலில் சமூக நிறுவனங்கள் மிகவும் முக்கியமானவை. கோவில்கள் சமூகத்தின் கட்டுப்பாட்டு ஆற்றல் மையங்களாக விளங்கக் கூடியவை. சமூக நிறுவனங்களின் இயங்கியல் தன்மைகளே சமூகத்தின் நேர்முறை மாற்றங்களை ஊக்குவிக்கக் கூடியன.

சமூக நிறுவனமாக கோவில்கள் முன்னிலை வகிக்கின்றன. விளங்கப்படுத்தக் கூடிய காரணிகளும் விளங்கப்படுத்த முடியாத நம்பிக்கைகளும் கோவில்களைப் பலப்படுத்தி வருகின்றன.

இந்துசமயம் என்பது இந்து கலாசாரமாகவும், இந்துசமய மக்கள் தொகுதியின் நம்பிக்கைகளின் மேலாண்மை அமைப்பாகவும் வலிமை பெற்றுள்ளது.

எமது பிரதேசங்களில் யுத்தத்தின் பின் புதிய பொலிவு பெறும் சமூக நிறுவனங்களில் கோவில்கள் முதல் நிலை கொண்டவை.

புலம் பெயர் தமிழர்கள் தமது சொந்த மண்ணுடனான தொடர்புகளைப் புதுப்பிக்கவும் சமூக மக்களுடன் தூய்மையான உணர்வுநிலை, உறவுகளை வலிமையாக உயிர்ப்பிக்கவும் தமது பிரதேசக் கோவில்களுக்கு அதிக பணத்தை செலவிடுவது உதவும் என்று வலுவாக நம்புகின்றனர். அதன் வழி செயற்படுகின்றனர்.

புலம் பெயர்ந்த முதலாவது அணியினர் இதில் விரைபோக்கைக் கொண்டுள்ளனர்.

தமது பிரதேசப் பாடசாலைகளுக்கும் தமது ஊர்க் கோவில்களுக்கும் அதிக பணத்தை வாரி இறைக்கின்றனர். அந்நியச் செலாவணிகளைப் பெறுமதி தேய்ந்து போன இலங்கை ரூபாவுக்கு மாற்றும் போது நூறு மடங்கினால் (டொலர்கள்) பெருகி விடுவதும் செலவு நாட்டத்திற்குரிய ஊக்கத்திற்கு அடிப்படையாகும்.

நீண்ட நாட்கள் தம் ஊர்க் கோவில்களுக்குச் செலவிடவில்லையே என்ற சுயபச்சாதாபமும், குற்ற உணர்வும், கோவில்களுக்குச் செலவு செய்யுமாறு தூண்டுகின்றன.

தமது ஊர் பெருமை மிக்கது என்று சொல்வதில் மகிழ்ச்சியுறும் மாண்புடையவர்கள் எம்மவர்கள். பெற்ற தாயும், பிறந்த ஊரும் முக்கியம் என்னும் சான்றாண்மை எம்மவரிடம் வளர்ந்து நிற்கின்றது. கோவிலைக் காட்டி ஊர்ப் பெருமை சொல்லும் பண்பாடு எமக்குண்டல்லவா?



நல்லைக் கந்தனும், மாவிட்டபுரக் கந்தனும், சந்நிதி முருகனும், நாகபூஷணி அம்மனும், துர்க்கா தேவியும், பன்றித்தலைச்சி அம்மனும், வற்றாப்பளை அம்மனும் யாழ்ப்பாணப் பண்பாட்டு வாழ்வியலின் தூய்மை மிக்க வலுவான குறியீடுகள்.

நல்லைக்கந்தன் தேர் இழுக்கத் தேசப் படத்தில் உள்ள பல புள்ளிகளில் இருந்தும் மக்கள் குவிவது எமது வலிமை. பண்பாட்டின் ஊற்றுக் களாகக் கோயில்கள் செழுமை பெற்றுள்ளன. இந்தப் பண்பாட்டின் செல்வாக்கினாலும், புலம் பெயர் தமிழர்கள் கோவில்களில் அதிகம் செலவிடுகின்றனர்.

இந்த நோக்கும், போக்கும் நல்லதுதான். எனினும் நடைமுறைகளில் புதிய முகங்கள் தேவைப்படுகின்றன. அது பற்றி சிந்திப்பதும், செயற்படுவதும் அவசியம்.

## கோயில்களில் மிகை முதலீடுகளா?

எமது பிரதேசத்தில் சிறிய கோயில்களும், பெரிய கோயில்களும் புலம் பெயர் தமிழர்களின் அளவு மீறிய கொடைகளினால் சிறப்புற்று மிளிர்கின்றன; புத்தொளி பெற்றுள்ளன.

வெளிநாட்டிலிருப்போர் தேவையிலும் மிகையாகக் கோயில்களில் முதலிடுகின்றனரோ என்ற சமூகச் சந்தேகம் எழுந்துள்ளது.

- கோவில்களைப் புனரமைத்தல்
- கோவில்களுக்கு வர்ணம் தீட்டல்
- கோவில்களில் கல்யாண மண்டபம் நிறுவுதல்
- கோவில்களுக்குச் சுற்று மதில் நிர்மாணித்தல்
- புதிய தேர் மற்றும் சப்பறம் நிர்மாணித்தல்
- கோவில் திருவிழாக்களைக் கோலா கலமாகக் கொண்டாடுதல்
- கோடிக்கணக்கில் செலவிட்டு கோவில் சார்ந்த மலர்களை வெளியிடல்
- பல இலட்சம் செலவில் நூல் வெளியீட்டு விழாக்களை நடாத்துதல்

கடந்த இரண்டு வருட காலங்களில் மேற் கூறியவற்றிற்காகப் புலம்பெயர் தமிழர்கள் செலவிட்ட தொகைகள் பல கோடிகளைத் தொட்டிருக்கும். இந்த சிறப்புக்கள் நல்லவை, பெருமைக்குரியவை. ஆனால் நிதானமான சிந்தனைகளுக்கும் சிறிது இடம்கொடுக்கலாம் அல்லவா?

நெருக்கடியான காலங்களில் புலம்பெயர் தமிழர்களின் உழைப்புக்களில் கணிசமான தொகை கொழும்பு நகர மெய்ச் சொத்துக்களில் முடக்கப் பட்டன. எமது பிரதேசத்தில் அந்தளவு முதல் இடப்படவில்லை.

இப்போது எமது பிரதேசங்களில் சொந்த ஊர்களில் உள்ள மெய்ச் சொத்துக்களை விற்று அந்நியச் செலாவணியாக மாற்றிப் புலம்பெயர் தமிழர்களின் இரண்டாம் தலைமுறையினருக்கு கையளிக்கும் போக்கு பரவுகின்றது. பத்திரிகை, விளம்பரங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

மெய்ச் சொத்துத் தொடர்பான புலம்பெயர் தமிழர்களின் மேற்படி இரண்டு செயற்பாடுகளையும் நோக்கும் போது புலப்படுவது என்ன? மண்ணில் இருந்து மனிதர்கள் துண்டிக்கப்படுகின்றனரா? இதே மாதிரிப் போக்கினையே கோவில்கள் தொடர்பான மிகை முதலீடுகளிலும் மேற்கொள்கின்றோமோ? தெய்வீக உணர்வு, உளப் பற்று, சமூக நன்மை தொடர்பாக மேற்கொள்ளப்படும் கோவில்கள் சார்ந்த செலவுகள், அல்லது முதலீடுகள் பற்றிச் சற்று நிறுத்தி யோசித்தால் என்ன?

## தனித்தனியாகவா கூட்டாகவா?

புலம்பெயர் தமிழர்களே நீங்கள் நல்லவர்கள், உங்கள் நோக்கம் தூய்மையானது. எனினும் எம் கண் முன்னே விரவிக்கிடக்கும் ஏனைய தேவைகளையும் பரிசீலனைக்கு எடுத்தால் என்ன?

- **பெற்றோரை இழந்த சிறார்கள் :-**

புதிய நம்பிக்கையும், புதிய வாழ்வும் தரப்பட வேண்டும், உணவு கல்வி வாழ்விடம் தேவை

- **இளம் விதவைகள் :-**

பல்லாயிரக் கணக்கில் காணப்படும் இவர்களுக்கு மறு வாழ்வு தேவை. பொருளாதார பலத்துடனான புதிய வாழ்வு தேவை.

- **வீடற்ற குடும்பங்கள் :-**

வீடில்லா வீதி வாழ்வு அவநம்பிக்கை யையும், ஒழுங்கின்மையையும், தீமைகளையும் பெருகச் செய்துவிடும். நாடோடி வாழ்விற்கு முற்றுப்புள்ளி இடப்பட வேண்டும்.

- **வேலையற்ற இளைஞர்கள் :-**

படித்தும், படிப்பை இடையில் நிறுத்தியும், படிக்காமலும் அலைந்து திரியும் ஆயிரம் ஆயிரம் இளைஞர்களுக்கும் சுய தொழில் உதவி பயிற்சி வழிகாட்டல், சுய நம்பிக்கை வழங்கப்பட வேண்டும். இதற்கான மைய அமைப்புத் தேவை.

- **உடல், உள பாதிப்புற்றோர்.**

மூன்று தசாப்த கால அமைதியின்மையின் விலை அல்லது விளைவுதான் இவர்கள். தனியாக இவர்கள் இதற்கு காரணம் அல்லர். சூழலின் துயர் மிகைச் சமூகக் குழுவினர் இவர்கள். சிகிச்சை உணவு, பாதுகாப்பு, மருந்து, வாழிடம், குதூகலம் இவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். சாதாதண மனிதர்களாக மாற்றப்படுவதற்கான துணை உட்கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும். விவசாயிகளுக்கும், கடல் தொழிலாளருக்கும் துணை ஊக்குவிப்புக்கள், புதிய பயிற்சிகள் தேவை. கல்வியுடன் பயிர் செய்வோம், பயிற்சியுடன் புதிய மாதிரியில் கடற்தொழில் செய்வோம். போட்டித் திறனுடன் கைத்தொழில் செய்வோம், வ்ழிகாட்டல் மற்றும் பயிற்சி ஆலோசனை மையங்கள் பரவலாக உருவாக்கப்பட வேண்டும்.

- **புதிய தொழில் நுட்பப் பல்கலைக்கழகம்**

எமது பிரதேசத்திற்குரிய மாதிரியில் எமது நிதியில் அரச அனுமதியுடன் புதிய உயர் தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்க வேண்டும். சாத்தியமானது. ஆனால் ஈடுபாடுள்ள முனைப்பு வேண்டும்.

- **சமுதாயக் கல்வி மையம்**

எமது பெண்களுக்கும் தொழிலாளருக்கும், கல்வி நிறுவனங்களுக்குள் நுழையத் தவறியவர்களுக்கும் புதிய அறிவு, புதிய நம்பிக்கை வழங்கப்பட வேண்டும். நோக்கங்கள் பற்றியும், சுகாதார வாழ்வு பற்றியும், பிள்ளைகளிற்குரிய பொருத்தமான கல்வி பற்றியும்,பெண்பிள்ளைகளின் பாலியல் பாதுகாப்பு பற்றியும் விழிப்புணர்வை உருவாக்குவோம். தொடர்ந்து சமுதாயத்தை வலுவுடையதாக்குவோம். இதற்கென எமது பிரதேசத்திற்கு மத்திய நிலையமும், செயல் திட்டமும் தேவை.

சொல்ல முடிந்த சில சொல்லப்பட்டுள்ளன. சொல்ல வேண்டியன பல நெஞ்சில் உள்ளன. மனம் கொள்வீர்களா? புலம் பெயர் தமிழர்களே, உங்களை நோக்கியே பேசுகின்றேன், தயவு செய்து சிறு துளிகளாக சிதற விடாதீர்கள். ஒன்று சேர்த்துப் பெருவெள்ளமாக மாற்றுங்கள். எண்ணம், திட்டம், வளம், செயல், வெற்றி, சமூக மேம்பாடு என்ற ஒழுங்கில் செயற்படுங்கள். ஊர் கூடினால் தேர் இழுக்கலாம் அல்லவா?

## முடிவுரை

கோவில்கள் வேண்டும், அதன் பங்களிப்பு வேண்டும். ஆனால் அவற்றின் மிகை முதலீடு வேண்டாம். அவை வணிகமயப்பட வேண்டும். ஊர் போட்டிகளின் கூடாரங்களாக அவை மாறவேண்டாம். நல்ல சமுதாய நிறுவனங்களாக நின்று அவை சேவையாற்ற எப்போதும் துணை செய்யுங்கள்.

கோவிலுக்கு அப்பால் தெரியும் துயரங்களையும் பாருங்கள். மனிதர்களாக வாழ ஏங்கும் யுத்தத்தின் கைதிகளாக துயருறு பிரிவினருக்கு உதவுங்கள். அவர்களை மனித வளங்களாக மகிழ்ச்சி மிக்க குடிமக்களாக மாற்றுங்கள். சமூகம் அல்ல, நாடே நிமிரும். தலை நிமிரும்.

மேற்குலகில் இருந்து நிதி, புதிய தொழில் நுட்பம், நேர்முறை நடத்தை, புதிய தொழில் மாதிரிகை, நவீன தொழில்முனைப்பு என்பவற்றைக் கொண்டு வந்து எமது பிரதேசத்திற்கு வழங்குங்கள்.

உதிரிகளாகச் சிந்திக்காதீர்கள். தனி மரம் தோப்பாகாது, தனிப்பழம் சீப்பாகாது, செயலுக்காக, வெற்றிக்காக, சமூக நலனுக்காக ஒன்று கூடுங்கள். புதிதான கோவிலுக்கு அப்பாலும் நன்மைகளைப் பரவ விடுங்கள். சமூகம் வாழும், வளரும்.




தமிழருவி சஞ்சிகையின் வெளியீட்டுவிழாவில் ஆய்வுரை நிகழ்த்திய கலாநிதி.செ.திருநாவுக்கரசு அவர்கள் எமக்குப் பல அறிவுரைகளை வழங்கினார். அவற்றைக் கருத்திற் கொண்டு இச்சஞ்சிகையில் பல திருத்தங்களை மேற்கொண்டுள்ளோம் என்பதை நன்றியுடன் தெரிவிக்கின்றோம்.

ஆசிரியர்கள்.

# சைவ சித்தாந்த தத்துவ வளர்ச்சியில் ஈழத்தவர்களின் பங்களிப்பு



சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்
*B.A. Dip-in-Edu, S.L.E.A.S., M.A.*

## கட்டுரைத் தொடர் - 2

### கூழங்கைத் தம்பிரான் சுவாமிகளும் சிஷ்யர்களும்

சுவாமி ஞானப்பிரகாசரைத் தொடந்து சைவசித்தாந்தநெறியை வளர்ப்பதில் ஈழத்தவர்கள் பலர் அர்ப்பணிப்போடு பணியாற்றினார்கள். சைவத்தின் வளர்ச்சிக்காகத் தமது வாழ்க்கையையே பருத்தியாகம் செய்த ஆறுமுகநாவலரின் குரு இருபாலைச் சேனாதிராஜமுதலியாருக்குச் சைவசித்தாந்தக் கருத்துக்களைப் புகட்டிய பெருமை கூழங்கைத் தம்பிரானைச் சாரும். தஞ்சாவூரில் உள்ள சைவ ஆதீன மடத்தைச் சேர்ந்த கனகசபாபதி யோகிகள் (கூழங்கைத் தம்பிரான் சுவாமிகள்) இலங்கையில் சைவசித்தாந்த கல்வியைப் பரப்புவதில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தார். வடமொழி, தென்மொழிகளில் மிகவும் பாண்டித்தியம் மிக்கவராகத் திகழ்ந்த இவரிடம் பலர் சைவ சமயம் சார்ந்த தத்துவ நூல்களைக் கற்றுத் தெளிந்தார்கள். கொச்சிக் கணேசையர், வில்வராச முதலியார், கோபாலச் செட்டியார், வண்ணை வைத்திலிங்கச் செட்டியார் ஆகியோர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். வைத்திலிங்கச் செட்டியார் வண்ணார் பண்ணையிலே ஒரு பெரிய சிவன் கோவிலை நிறுவித் தர்ம பரிபாலனம் செய்வதற்கும், கூழங்கைத் தம்பிரான் சுவாமிகளே வழிகாட்டியாக இருந்தார். ஆலயத்தினை நல்ல முறையிலே பரிபாலனம் செய்வதற்காக நிறையச் சொத்துக்களை வைத்திலிங்கம் செட்டியார் சிவன் கோவிலுக்கு தர்மசாசனம் செய்துள்ளார். கூழங்கைத் தம்பிரானிடம் சைவ சித்தாந்தங்களைக் கற்ற இருபாலைச் சேனாதிராஜ முதலியார் சைவ சித்தாந்தத் தேனை அள்ளிப் பருகிச் சைவசித்தாந்த ஞானம் கைவரப் பெற்றவராக மிளிர்ந்தார். இவர் நல்லைக் கந்தன் மீது பாடிய திருவூஞ்சலில் இருந்து இவரிடம் இருந்த சைவ சித்தாந்த ஞானத்தினை அறிந்து கொள்ளலாம்.

### வரத பண்டிதர்

இவர் கி.பி 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சுன்னாகப் பகுதியில் வாழ்ந்தவர். அந்தணர் குலத்தைச் சேர்ந்த அரங்க நாதையர் அவர்களின் புத்திரராய் இன்றைக்கு முந்நூறு ஆண்டுகளிற்கு முன்பு திரு அவதாரம் செய்தார். வைதீக சைவம் வளர்க்கும் குருமணியாய் வந்து தோன்றினார். செந்தமிழையும், வடமொழியையும் துறைபோகக் கற்றிருந்தார். வேதாகம நூல்களைக் கற்றுத் தெளிந்தார். செந்தமிழ்க் கவிதைகளை நவரசம் மிஞ்சப் பாடுவதில் வல்லவராய் விளங்கினர். வட மொழியிலும் கவிதை பாடும் ஆற்றல் இவருக்கு இருந்தது. இவர் இயற்றிய புராணங்களில் சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம், பிள்ளையார்கதை என்பன குறிப்பிடத் தக்கவையாகும். சிவராத்திரி புராணம் ஆகமங்களில் கூறப்பட்ட நெறிகளைத் தழுவித் தமிழில் எழுதப் பெற்ற நூலாகும். இந்நூல் சிவனுடைய மகிமையைப் பாராட்டுகின்றது. சைவ சித்தாந்த உண்மைகளைப் பல இடங்களில் இந்நூலில் எடுத்துக் கூறியுள்ளார். பின்வரும் பாடலில் சிவனின் இயல்புகளை எல்லாம் விபரித்துள்ளார்.

"ஆதி நடு ஈறிலியாய் ஆணுடன் பெண்
அலியவனாய் அவையுமாகிச்
சோதிபெறும் அருவுருவாய்த் தோற்று சராசரா
மனைத்தும் தோய்ந்தும் தோயாய்
பாதிமதி நுதற் பேதை பாகனுமாய் ஏகனுமாய்
பகர்தற் கெட்டாப்
பூதிபுனை திருமேனிப் புனித நின் தாமரைத் தாள்கள்
போற்றி போற்றி"

வரத பண்டிதரை அக்காலத்தில் யாழ்ப்பாணத்தின் பேர் பெற்ற புலவரான சின்னத்தம்பிப் புலவர் "பண்டிதன் முத்தமிழ் வல்லோன்" என்றும்

மயில்வாகனப் புலவர் "மிகு மதுர ஆசு கவிராசன்" என்றும் பாராட்டி உள்ளார்கள்.

போர்த்துக்கேயராட்சியின் அடக்கு முறைக்குள் சமய அனுட்டானச் சுதந்திரமற்றுக் கிடந்த ஈழத்து மக்களுக்கு ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட சமய சுதந்திரத்தின் வெளிப்பாடாகவே இந் நூல்களைக் கொள்ளல் வேண்டும். ஆதரவான அரசோ, ஆதினங்கள் போன்ற சமய நிறுவனங்களோ இல்லாதிருந்த நிலையில் ஈழத்தில் சைவ மரபைக் காத்தளித்து நிலை நிறுத்தியவர்களாக வரத பண்டிதர் முதலான புலவர்கள் விளங்கியிருக்கிறார்கள் என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வெளியிட்ட வரதபண்டிதம் என்ற நூலில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

சைவமும் தமிழும் சிறப்புற்று வளர்வதற் கென்று அருட்கொடையாக வந்து அவதரித்தவரே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆவார். சைவ சித்தாந்த அறிவைப் பிரகரித்தல் மட்டுமல்லாது சைவ சித்தாந்த உணர்வொழுக்க நிலையை ஏற்றுப் பிரதிபலிக்கத் தகுதி பெற்றதாகச் சமூகத்தைப் புனருத்தாரணம் செய்வதிலேயே நாவலர் பெரிதும் ஈடுபட்டார். "போர்த்துக்கேயர் முதலாக ஒன்று மாறி ஒன்றாகத் தொடர்ந்த அந்நியராட்சிக் கெடுபிடிகளுக்குள் அகப்பட்டு ஏய்ப்பார் தந்திரத்தில் எடுபடக் கூடிய ஏமாளி நிலையில் சுயத்தைக் கை நெகிழ்த்து அந்நியத்தை அணைத்துத் தழுவுந் தன்மையோடு இருந்த அன்றைய சமுதாயத்தின் பரிதாபக் கோலம், நாவலருக்கு அடி வயிற்றில் அனலை மூட்டிவிட்டது'' என்று பண்டிதர் மு. கந்தையா அவர்கள் தான் எழுதிய ஈழத்துச் சைவ சித்தாந்த தொன்மை மேன்மைகள் என்ற நூலிற் குறிப்பிட்டுள்ளார். சைவ சித்தாந்த தத்துவக் கருத்துக்களை மிக எளிய முறையில் மாணவர்களுக்கு விளக்கும் வகையில் பாலபாடம், சைவ வினாவிடை ஆகிய நூல்களை எழுதினார். பால பாடங்களில் முதற் பாடம் கடவுள். இரண்டாம் பாடம் ஆன்மா. இப்படியாகச் சிவ பரத்துவமும், தத்துவ ஆராய்ச்சியும், சமய ஒழுக்கங்களும், குருலிங்க சங்கம இயல்புகளுக்கும் முறையாக மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்ப இனிய தமிழ் நடையில் எழுதப் பெற்றன.

இவர் தனது சொந்த வாழ்வில் ஒழுக்க விதிகளை உறுதியாகக் கடைப்பிடித்தார். தூய துறவும் மாசற்ற ஒழுக்கமும் பூண்டு வாழ்ந்தார். துறவினால் உரனும் ஒழுக்கத்தால் விழுப்பமும் ஒருங்கெய்தியவர்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

என்ற குறள் (131) வழி ஒழுகிய நாவலர் பொது வாழ்விலும் உயர்ந்த ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்தவர். தாம் மட்டுமன்றிச் சமூகத்திலுள்ள மற்றையோரும் ஒழுக்கத்தில் வழுவாதிருக்க வேண்டுமென விழைந்தவர். இந்த ஒழுக்க விதிகளை இளமை தொட்டே ஒவ்வொருவரும் உள்ளத்திலும் பதிக்கும் முகமாகத்தான் எழுதிய பால பாடங்களிலே பல பாடங்களை எழுதியுள்ளார். முதலாம் பால பாடத்திலே கடவுளை வணங்கு, குருவை வழிபடு, வீண் வார்த்தை ஒரு பொழுதும் பேசாதே என்று சிறு சிறு வாக்கியங்களின் ஊடாக ஆழமாகப் பதியும் வண்ணம் எழுதியுள்ளார். இரண்டாம் பால பாடத்தின் தொடக்கத்திலே எண்பத்திரண்டு நீதி வாக்கியங்களில் நல்வாழ்வுக்கு வேண்டிய எல்லாக் கருத்துக்களையும் திரட்டித் தந்துள்ளார்.

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம்" என்ற வாக்கியமே இந்த ஒழுக்கக் கோவையின் முதல் வாக்கியமாகும்.

''நாம் சிற்றறிவும் சிறு தொழிலும் உடையோம் ஆதலால் முற்றறிவும் முற்றுத் தொழிலும் உடைய கடவுளை வணங்கி அவருடைய திருவருள் வசமாய் நிற்பின் அன்றிப் பாவங்களை ஒழித்துப் புண்ணியங்களைச் செய்தலும் நம்மால் இயலாவாம்" என்பது இறுதி வாக்கியம். மேற்கூறிய வாக்கியம். சைவசித்தாந்த தத்துவத்தின் பிழிந்த சாறாகக் காணப்படுகின்றது.

நாவலர் எழுதிய சைவ வினாவிடை, இரண்டாம் பாலபாடம் ஆகியன சித்தாந்த அரிச்சுவடி நூல்களாகக் காணப்படுகின்றன. ஆறுமுகநாவலரைச் சைவாகமப் பொக்கிஷம் எனச் சிவசம்புப் புலவரும், தெய்வீக வைப்பு எனத் தியாகராஜச் செட்டியாரும் போற்றியுள்ளார்கள். "தமது வாழ்வு முழுவதிலும் இருந்து அவர் இயற்றிய சயமப்பணி, கல்விப்பணி, சமூகப் பணி, நூற்பிரசுரப் பணி ஆகிய அனைத்தினதும் உத்வேகம் சைவ சித்தாந்த

உத்வேகமே என்று திருமதி லீலாவதி இராமநாதனின் நினைவுப் பேருரையில் பண்டிதர் மு.கந்தையா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

திருவாவடுதுறை ஆதீனத்தில் இவர் ஆற்றிய பிரசங்கங்கள் அனைத்தும் விசேட சைவ சித்தாந்த விளக்கங்கள். திருவாவடுதுறை ஆதீனத்தில் இவர் ஆற்றிய பதிபசு பாசப் பிரசங்கமே இவருக்கு நாவலர் என்ற உயர் விருது வழங்கக் காரணமாக இருந்தது. நல்லூர்க் கந்தசுவாமி கோயிற் கந்த புராண படனத்தின் போது 'வேதக் காட்சிக்கும் உபநிடதக் காட்சிக்கும்' என்ற செய்யுளுக்கு அவருரைத்த விளக்கவுரை சைவசித்தாந்த சாராமிர்தமாகப் போற்றப்பட்டது. திருத்தொண்டர் புராணத்திற்கு அவர் எழுதிய ஆசனங்களும் அத்தகையவையே ஆகும். சிவஞான போதச் சிற்றுரை, சிவஞானபோத மாபாடியம் ஆகிய நூல்கள் இவரால் பதிப்பிக்கப் பெற்றன. சைவநீதி ஒழுக்க நூல்களாகிய வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, மூதுரை முதலியன அவரால் உரை விளக்கம் பெற்றுள்ளன. இரண்டாம் சைவ வினாவிடை முதல் ஐந்து இயல்களும் சிவஞான சித்தியார் பொருள் அறிமுகமாகக் காணப்படுகின்றன. "அவருடைய வாய்மை சைவ சித்தாந்த வாய்மை. அவர் தூய்மை சைவசித்தாந்தத் தூய்மை. அவர் பால் விளங்கிய வீறு, சைவசித்தாந்த ஞான வீறு, அவர் நடை சைவசித்தாந்த நடை என வித்துவான் மு.கந்தையா அவர்கள் நாவலரைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

## காசிவாசி செந்திநாதையர்

இவர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள குப்பிழான் கிராமத்தில் 1848ஆம் ஆண்டில் தோன்றினார். 1872ஆம் ஆண்டிலே வண்ணார் பண்ணையில் நாவலரால் நிறுவப் பெற்ற சைவப்பிரகாச வித்தியாசாலையிலே ஆறு வருடமும் அவருடைய ஆங்கில வித்தியாசாலையில் ஒரு வருடமும் ஆசிரியராக இருந்து பணியாற்றினார். நாவலருடைய நற்சாட்சிப்பத்திரத்துடன் பாரத நாட்டிற்குச் சென்று பல தலங்களையும் தரிசித்ததோடு சைவ மெய்யியல் தொடர்பான ஆய்வில் பெரிதும் ஈடுபட்டார். 1888ம் ஆண்டு தொடக்கம் 1898ஆம் ஆண்டு செய்து வரை காசியிலே வசித்துப் பல அரிய சமய நூல்களையும் ஆய்வு செய்து பல சிறந்த நூல்களை எழுதினர். தேவாரம் வேதசாரம், நீலகண்ட பாஷ்யம், கந்தபுராண நவநீதம், சைவ வேதாந்தம், சிவஞான போத வசனாலங்கார தீபம் போன்ற பல அரிய நூல்கள் இவரால் எழுதப் பெற்றவை ஆகும். இவர் பத்து வருடங்களுக்கு மேலாக காசியிலே வசித்து வந்தமையால் காசிவாசி செந்திநாதையர் என அழைக்கப்பட்டார். சைவ சித்தாந்த தத்துவ வளர்ச்சியில் இவர் செய்த ஆய்வுகள் அளப்பரியவை ஆகும்.

இவர் நாவலர் மீது குருத்துவ அபிமானம் கொண்டவர்.

தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார். நூல் வெளியீடுகளும், பிரசுரங்களும் தருக்க வாதங்களும், கண்டனப் பிரசுரங்களும் பெருமளவிற் செய்ததன் மூலம் இவர் ஈழத்திலும் இந்தியாவிலும் சைவசித்தாந்த விளக்கம் பெற அரும்பணிகள் பல புரிந்திருந்தார்.

வேத சங்கிதைகள், உபநிடதங்கள், சிவாகமங்கள், உபாகமங்கள், பதினென் புராணங்கள், இதிகாசங்கள், பாணினியின் வியாகரண சூத்திரம் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து அவற்றிலே தெளிவு பெற்றே ஐயர் அவர்கள் தனது நூல்களை எழுதினர். மாயாவாத குரவர்கள் உபநிடத பிரமசூத்திர இதிகாச புராணங்களிற் செய்து விட்ட உருமாற்றங்கள், பெயர்த்தெடுப்புக்கள், இடைச் செருகல்களை இனங்கண்டறிந்து உண்மை நிலையை ஊர்ஜிதம் செய்து பல நூல்களை வெளியிட்டார்.

## நீலகண்ட பாஷ்யம்

சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருளிலக்கணம், முத்தியிலக்கணம், முதலானவை வேதநூற் பகுதிகளுக்கு மாறுபட்டவை என்ற விளக்கம் ஏகான்மவாத, மாயாவாத, விசிட்டாத்வைத குரவர்களால் கூறப்பட்டது. இவர்கள் அனைவரும் பிரம்ம சூத்திரத்தை ஆதாரமாகக் கொண்டே தமது விளக்கத்தைக் கூறினார்கள். சங்கரர், இராமானுஜர், மத்துவர் ஆகியோர் பிரம்ம சூத்திரத்திற்குத் தனித்தனியாக விளக்கம் எழுதியுள்ளார்கள். இவர்களுக்கு முன்பே நீலகண்ட சிவாசாரியார் சிவபரத்துவ விளக்க சகிதமாகப் பிரம்ம

சூத்திரத்திற்கு எழுதியநீலகண்ட பாஷியம் உரை இருந்தது. செந்திநாதையர் இந்தியாவிற்கு சென்ற 1877ஆம் ஆண்டு காலப்பகுதியில் சென்னை முதலிய நகரப் பகுதிகளில் மாயாவாத விசிட்டாத்வைத மதப் பிரசாரங்கள் தலை தூக்கி இருந்தன. ஐயர் அவர்கள் இவர்கள் மேற்கோள் காட்டும் பிரமசூத்திரம், உபநிடதம், புராண இதிகாச நூல்களை நுணுக்கமாக ஆராய்ந்தார். இவர்கள் விட்ட தவறுகளை எல்லாம் மூல நூல்கள் வாயிலாகச் செந்திநாதையர் கண்டறிந்தார். நீலகண்டர் எழுதிய பிரம்மசூத்திர உரை சைவசித்தாந்த விளக்கத்திற்குச் சாதகமாய் இருந்ததை அறிந்து கொண்டார். இந்நிலையில் ஐயர் நீலகண்ட பாஷியத்தை தமிழில் மொழி பெயர்த்தார். உபநிடத ஆய்வில் தாம் கண்ட ஆய்வு உண்மைகளை உபநிடத உபக்கிரக மணிகை என்ற பெயரிலும், பிரம்ம சூத்திர ஆய்வில் தாம் கண்ட உண்மைகளை பிரம்ம சூத்திர உபக்கிரக மணிகை என்ற பெயரிலும் உருவாக்கி நீலகண்ட பாஷிய நூலுக்கு முன் இணைப்புக்களாக வெளியிட்டார். இவ்வுபக்கிரக மணிகைகளிரண்டும் சைவ சித்தாந்தக் கருத்துக்களுக்கு வேத சாஸ்திரங்களிரண்டிலும் விரோதமல்ல என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார். நீலகண்ட சிவாசாரியரின் உரை விளக்கத்தில் உயிரும் உலகமும் சிவசக்தி பரிணாமம் என்ற ஓரம்சம் தவிர மற்றையவை யாவும் சைவ சித்தாந்த தத்துவத்திற்கு அனுசரணையாக இருப்பதை விளக்கினார்.

செந்தி நாதையர் செய்த நீலகண்ட பாஷிய மொழிபெயர்ப்பில் எழுதிய உபக்கிரக மணிகை என்னும் முகவுரைகள் இரண்டும் தனித்தனி கோடி பொன் பெறும் என்றும் தனித்தனி கலாநிதி பட்டத்திற்குத் தகுதியானவை என்றும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் கூறியுள்ளார்கள்.

## தேவாரம் வேதசாரம்

இந்து சமயத்தின் மூல நூல்களாகிய வேதங்களில்கூறப்பட்ட கருத்துக்களையும் மூவர் தமிழாகிய தேவாரத்தில் கூறப்பட்ட கருத்துக்களையும் ஒப்பிட்டுக் காட்டத் தேவாரம் வேதசாரம் என்ற நூலைச் செந்திநாதையர் எழுதினார். சிவ பரத்துவமும் சைவ சித்தாந்த விளக்கமும் புலப்படக் கூடிய தமிழ் நூல்களில் திருமுறைகள் முதன்மையானவை ஆகும். வேதம் கூறும் பிரம்மம் உயர்ந்தது, தேவாரங்கள், கூறும் சிவம் தாழ்ந்தது எனக் கருதும் ஏகான்மவாதிகளுக்கு இரண்டும் ஒன்று தான் என வேதசாரத்தின் ஊடாகச் செந்திநாதையர் நிறுவியுள்ளார். இந் நூலில் வேத உபநிடத புராண இதிகாசங்கள் தோறும் காணப்படும் சைவசித்தாந்தக் கருத்துக்களும், திருமுறைக் கூற்றுக்களும் நேருக்கு நேர் இடப்பட்டு அவற்றின் ஒப்புமைகள் விளக்கப் பட்டிருக்கின்றன.

### 4 சைவ வேதாந்தம்

வேதத்திற்குச் சிவ பரத்துவம் இல்லை என்று ஏகான்மவாதிகள் வேதம் சார்பான நூல்களில் வலிந்து புகுத்திய மாற்றங்களை இந்நூலில், முதலில் செந்திநாதையர் விளக்குகிறார். சைவசித்தாந்தம் கூறும் முப்பத்தாறு தத்துவங்களும் உபநிடதங்களில் கூறப்பட்டுள்ளமையை இந்நூலில் அவர் விளக்கியுள்ளார். சைவ சித்தாந்தத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ள விபூதி, உருத்திராக்கம், சிவலிங்கார்ச்சனை, பதி, பராசக்தி, ஆன்மாக்களின் இலக்கணங்கள், சிவோபாசனை, சிவாகமம், பாவனை என்பன பற்றி உபநிடதங்களிலும் சிவாகமங்களிலும் உள்ளவற்றை சைவ வேதாந்தத்திலே விளக்கியுள்ளார். சைவவேதாந்தத்தில் இறுதி அத்தியாயத்தில் "வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்" என்பதை வேத சிவாகம ஆதாரங்களுடன் நிறுவியுள்ளார்.

ஐயரவர்கள் எங்கள் கலாசாரத்திற்கு செய்த அரும் பெரும் முயற்சிகளைக் கணக்கிட்டு விளக்கிய பண்டிதமணி ஐயரவர்களின் உபக்கிரக மணிகள் தத்துவப்பட விளக்கக் குறிப்பு, சைவ வேதாந்தக் குறிப்பு, கந்தபுராண நவநீதக் குறிப்பு ஆகியன மிக இன்றியமையாதன என்றும் அவை யாழ்ப்பாண கலாசாரத்தின் கலங்கரை விளக்கங்கள் என்றும் கூறுகின்றார்.

# மேம்பாடுள்ள தனி மனித ஆளுமை

திருமதி. சிவமலர் அனந்தசயனன்
அதிபர்
யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

ஆளுமை என்பதற்குத் திருத்தமான வரைவிலக்கணம் கூறுவது என்பது கடினமானது. ஆளுமை, ஒருவனுடைய உடற்பண்புகள், உளப் பண்புகள், மனப்போக்குகள், சமூக, அறநெறிப் பண்புகள், போன்றவற்றின் சேர்க்கையேயாகும். அதே நேரத்தில் ஒருவனுடைய உடல் தோற்றம், உணர்ச்சி, இயல்பூக்கங்கள் அவனுடைய ஆளுமையை நிர்ணயிக்கும் காரணிகளாக அமைகின்றன.

தனிமனித ஆளுமை ஏன் ஒவ்வொரு வருக்கும் அவசியம் என்ற கேள்வி எழுகின்றது. எல்லோரும் மகிழ்ச்சியான தொடர்பாடலையே எதிர் பார்க்கின்றோம். ஒருவரோடு உரையாடச் செல்லும் போது அவர் எம்முடன் மகிழ்வாகப் பேசவேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோமாக இருந்தால் அவரும் இதையே எம்மிடம் எதிர்பார்க்கின்றார் என்பது எமக்குப் புரிந்திருக்க வேண்டும். இவ்வகையான மகிழ்வான தொடர்பாடலை நாம் மேற்கொள்ள வேண்டுமாயின் எமது ஆளுமை நிச்சயமாக மேம்பட்ட நிலையிருக்க வேண்டும் என்பது நிஜம்.

ஆளுமை மேம்பாட்டின் முக்கியமானது ஒத்திசைவு. யதார்த்தத்துக்கும் சுய எண்ணத்துக்கும் இடையில் ஒத்திசைவு இருந்தால் தான் எண்ணங்கள் நிறைவேறும். எண்ணங்கள் தான் எம்மை ஆளுகின்றன. நாம் நல்லவற்றையே எண்ணினால் அவ் எண்ணங்களின் அதிர்வுகள் எங்களுடன் தொடர்பாட லிலுள்ளவர்களிடம் சென்று அவர்களின் எண்ணங் களையும் நல்லனவாக மாற்றும். அப்போது தான் ஆத்மார்த்தமான விசுவாசமான தொடர்பாடல் ஏற்படும். இது தனிமனித ஆளுமை மேம்பாட்டின் அளவுகோலாகும்.

மற்றவர்கள் நல்ல விடயங்களைச் செய்யும் போது மனம் திறந்து பாராட்டும் குணம் எம்மிடம் எத்தனை பேரிடம் உள்ளது? பாராட்டும் போது மனதில் ஒரு ஏக்கம், கோபம், பொறாமை, இருந்தால் நிச்சயமாக அதை நாம் தவிர்க்கப்பழக வேண்டும். ஏனெனில் நல்ல விடயங்களை மனதார ஏற்றுக் கொள்ள வில்லையென்பது ஒரு ஆளுமைக் குறைபாடாகும்.



மேலும் எம்மிடம் உள்ள தாழ்வு மனப்பான்மை பாரிய ஒரு ஆளுமைக் குறைபாடு. புத்தக அறிவைக் கொடுத்துவிட்டு வாழக் கற்றுக் கொடுக்காத கல்வி முறையில் இன்றைய இளம் சமுதாயம் அல்லாடிக் கொண்டிருக்கின்றது. ஒரு விடயத்தைச் செய்ய ஆரம்பிக்கும் போது என்னால் முடியுமா என்பதற்கும் என்னால் முடியும் என்பதற்கும் மிகப் பெரிய வேறுபாடுண்டு. முடியும் என்ற நம்பிக்கையுடன் செயற்படுவதற்குச் சளைக்காத மனம் இருக்க வேண்டும். இப்போதெல்லாம் எல்லோர் வாயிலும் அடிக்கடி வரும் சொல் பிரச்சினை, பிரச்சினை என்பது தான். பிரச்சினை என்பது அணுகும் விதத்தில்தான் அது பிரச்சினையாக இருக்கும். ஆளுமை மேம்பாட்டில் பிரச்சினையைத் தீர்ப்பது என்பது முக்கியமானது. 'ஆயிரம் மைல் பயணம் என்பது முதல்மைலைக் கடப்பதிலேயே உள்ளது' என்பது மாசேதுங்கின் கூற்று.

ஆயிரம் மைல் எனத் திகைத்து நின்றோமானால் எமது பயணத்தைத் தொடர முடியாது.

எனவே ஆளுமை மேம்பாட்டில் சளைக்காத மனத்துடன் பிரச்சினைகளை அணுகிச் சாதனைகளைப் புரிவோமானால் சமுதாயத்தில் எமக்கு நிச்சயமாக அங்கீகாரம் உண்டு என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட யதார்த்தம்.

என்னை யாருக்காகவும் மாற்ற வேண்டிய தில்லை. ஆனால் என்னை எனக்காக, என்னுடைய மனித ஆளுமை மேம்பாட்டிற்காக மாற்றியே ஆக வேண்டும். ஆம் மாறத் தொடங்கி விட்டேன். மகிழ்வான தொடர்பாடலுக்கா காத்திருக்கின்றேன். மீண்டும்!

# செவ்வியல் தமிழிலக்கியத்தில் பெண்மை

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**
**முன்னைநாள் ஆய்வாளர்,**
*கக்சுயின் பல்கலைக்கழகம்*
*ஜப்பான.*



திருக்குறள் பெண்மையை வாழ்க்கைத் துணை என்று சிறப்பித்துக் கூறுகின்றது. ஓர் ஆணுடைய வாழ்க்கைக்குச் சிறந்த துணையாக இருவர் உள்ளனர். ஒன்று அவனைப் பெற்றதாய், மற்றது அவன் மனைவி. இந்த நிலையை விளக்கும் முதுமொழி ஒன்றும் எம்மிடையே இன்றுவரையும் வழக்கிலுள்ளது. "தாய்க்குப் பின் தாரம்" என்னும் முதுமொழி ஆணுடைய முழுமையான வாழ்வியலில் பெண்மையின் பங்களிப்பைத் தெளிவாக விளக்கி நிற்கின்றது.

ஒரு குழந்தையைக் கருவாக வயிற்றிலே சுமந்து பெற்றெடுத்து வளர்ப்பதில் தாயின் பங்களிப்பு முதன்மையானது. ஆண்குழந்தை வளர்ந்து திருமணப்பருவம் எய்தும்போது அவன் மனைவியோடு இணைகின்றான். தாயோடு வாழ்ந்த வீட்டை விட்டுத்தன்னோடு இணைந்த பெண்ணின் வீட்டில் மீதி வாழ்வைக் கழிக்கச் செல்கின்றான். மனைவியின் மனையியல் வாழ்வு அவன் இறக்கும் வரை தொடர்கிறது. இத்தகைய ஒரு குடும்ப அமைப்பைப் பற்றியே வள்ளுவர் கூறியுள்ளார். ஒருவருடைய தரத்தோடு வாழும் வாழ்வு சிறப்பானது. மனம் ஒத்த இல்லறவாழ்வு மக்கட் செல்வத்தை அளிக்கக் குடும்பம் என்ற சிறப்பான கட்டமைப்பு இறுக்கமடைகின்றது. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஓர் உறவு பாலமாகக் குழந்தை அமைகின்றது. இது அடுத்த தலைமுறையின் தோற்றமாகின்றது. அதுவே பல தலைமுறையாகத் தொடர்கிறது.

குடும்ப வாழ்வு நடத்தும் வீடு மனை என்று சிறப்பிக்கப்படுகின்றது. அங்கு தலைமைப்பொறுப்பு பெண்ணிடமிருந்தது. அதனால் அவள் "மனைவி" என்ற சிறப்புப் பெற்றாள். "இல்லம்" என்ற ஒரு சொல்லும் கூடிவாழும் இடமாகக் கருதப்படுகின்றது. அங்கு வாழும் பெண் இல்லாள் என்று அழைக்கப்பட்டாள். இல்லம் அவளுடைய ஆளுகைக்குட்பட்டிருந்தமையால் இப்பெயர் வழங்கப்படுகின்றது. பெண்ணுடைய நிர்வாகத்துக்குரிய இடமாக இல்லம் அமைந்தது. வள்ளுவர் குறள் இல்லாளின் சிறப்பை எடுத்துரைக்கின்றது.

"மனைமாட்சி இல்லாள் கண் இல் ஆயின் வாழ்க்கை
எனை மாட்சித்து ஆயினும் இல்"

மனைவாழ்க்கைக்குரிய சிறப்பான குணவியல்புகள் மனைக்குத் தலைவியான மனைவியாரிடம் இருக்கவேண்டும். இத்தகைய குணங்கள் இல்லாவிட்டால் அந்த வாழ்க்கை எவ்வளவு சிறப்புடைய வாழ்க்கையாக இருந்தாலும் அது பயனற்றது என்று வள்ளுவர் கூறுகின்றார்.

வள்ளுவர் கூறிய 'மனைமாட்சி' என்பதை உரையாசிரியர் 'மனையறத்திற்குத்தக்க நற்குண நற்செய்கைகள்' என விளக்கி உள்ளார். மனை வாழ்க்கையையும் ஓர் அற வாழ்க்கையாகவே முன்னோர் கருதினர். ஆனால் அந்த அற வாழ்க்கையில் பெண்மையின் பங்கு முக்கியமானதாக இருந்தது. பெண்ணின் சிறப்பான குணவியல்புகளும் நிர்வாகத்திறனும் மனை வாழ்கையை ஓர் அற வாழ்க்கை என்ற உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்லும். 'இல்லாள்' என்ற சிறப்புப் பெயரைப் பெண் பெறுவதற்கு அவளுடைய நிர்வாகத் திறமைதான் காரணம். 'இல்லான்' என்ற சிறப்புப் பெயர் ஆணுக்கு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இக் குறளிலே பெண்மையின் சிறப்பான குணவியல்பால்தான் வாழ்க்கை சிறப்பாக அமையும் என வள்ளுவர் வரையறை செய்துள்ளார். வாழ்க்கை ஆணும் பெண்ணும் சேர்ந்து இயங்கும் ஒரு இனிய கலையரங்கம். குழந்தைப்பேறு வாழ்க்கையின் முழுமையை உணர்த்துவது. தனது அடுத்த தலைமுறையைப் பெண் நல்லமுறையில் வளர்தெடுக்க வேண்டிய பொறுப்பை ஏற்றிருப்பவள். அதனால் அவளுடைய அறிவும் ஆற்றலும் ஆணை விடச் சிறப்பானதாகவே அமைந்துள்ளன. இதனைப் பெண் இயற்கையாகவே பெற்றிருக்கிறாள். அதனால் குழந்தைப்பேறு பெற்றவுடன் புதிய அறிவு பெற்றவளாக மாறிவிடுகிறாள். தாய் என்ற சிறப்பான பதவியைப் பெறுகிறாள்.

இல்லறம், துறவறம் என அறத்துப்பாலை இரு பகுதியாக வள்ளுவர் அமைத்த போதிலும் முதலில் இல்லறவியலையே வைத்துள்ளார். அதிலும் இல்லாளுடைய சிறப்பையே முதலில் கூறியுள்ளமை அவர் பெண்மையை நன்குணர்ந்து கொண்டதை விளக்கி நிற்கிறது. குடும்பம் என்பது வெறுமனே ஆண் பெண் தொடர்பான வாழ்க்கையே. அது ஒரு மக்கள் நிறுவனம் ஆகும். தாய், தந்தை, மக்கள், மூத்தோர் என்பவர் கூடி வாழும் இடம். அங்கு எல்லோரையும் உடல், உள நலம் உள்ளவராகப்

பராமரிக்கும் அன்பான தொண்டுப் பணியைப் பெண் பொறுப்பேற்றுள்ளாள்.

இல் வாழ்வினுடைய கடமையாக ஐந்து பேரை ஓம்பும் பணியைச் சிறப்பாக நிறைவேற்று வதற்குப் பெண்ணே உற்ற துணையாவாள். அதனால்தான் வள்ளுவர் பெண்ணை 'வாழ்க்கைத் துணை நலம்' எனச் சிறப்பித்துக் கூறினார். தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என ஐவரை ஓம்பும் அறப்பணியை ஆண் செய்வதற்கு இல்லாளே உதவியாக இருக்கின்றாள். இதனால் மனை மாட்சியோடு விளங்குகிறது. இந்த மனைமாட்சி தான் சமூகத்தில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்தி நல்லதொரு சமூகத்தை உருவாக்குகிறது. மனைவியின் சிறப்பான குணவியல்பு அவளை மனைக்குத் தலைவியாக ஏற்க வைத்துள்ளது.

வள்ளுவர் 'இல்லாள்' என்ற சொல்லைச் சங்க இலக்கியப் பயன்பாட்டில் இருந்து எடுத்துள்ளார். இல்லத்தைத் தொடர்ந்து நிர்வகிக்கும் ஆற்றல் பெண்ணிடம்தான் உள்ளது. தன் கணவரையும் பிள்ளைகளையும் ஏனைய குடும்ப அங்கத்தவர்களையும் கவனிக்கும் நிலையில் பெண் மிக முயற்சி உடையவளாக சுறுசுறுப்பு உள்ளவளாக விளங்குகிறாள். தன்னுடைய ஆற்றல்களையும் திறன்களையும் தனது வளர்ச்சிக்காகப் பயன்படுத்தாமல் பிறருக்குப் பயன்படுத்தும் கொடைத்திறன் பெண்ணிடம் தான் உள்ளது. இக்குணவியல்பையே வள்ளுவர் சிறப்பு அடையாக மனைமாட்சி என வரையறை செய்துள்ளார். இத்தகைய குண நலம் இல்லாத பிற சிறப்புக்களால் வாழ்க்கை சிறப்பாக அமையாது எனத் தெளிவுபடுத்தியுள்ளார். இன்றைய கால கட்டத்தில் இதனை நன்கு உணரக்கூடியதாக உள்ளது.

பெண், வீட்டில் இருந்து தன் கடமைகளைச் சிறப்பாகச் செய்யாமல் வெளியே பொருள் தேடற் பணிகளில் பொழுதை செலவழிப்பதனால் குடும்பக் கடமைகள் நிறைவேற்றப்படாமல் இல்லத்தில் ஒழுங்குகள் சீர்குலைந்துள்ளன. கணவனும் மனைவியும் பொருள் தேடும் குடும்பத்தின் நிலையில் உள்ளனர். ஆண் தனது பொருள் தேட்டப் பணியில் முழுமையான முயற்சியைச் செய்யாமையே இதற்கு முக்கிய காரணமாகும். இல்லத்தை நிர்வகிக்கும் பணியுடன் பொருள் தேட்டப் பணியையும் ஏற்க வேண்டிய இக்கட்டிற்குப் பெண் தள்ளப்பட்டுள்ளாள். எனவே வள்ளுவர் வரையறை செய்த மனைமாட்சிப் பண்பு சீர்குலைவதற்கு ஆண் காரணம் என்பதை வள்ளுவர் மறைமுகமாகவே குறளிற் சுட்டிச் சென்றுள்ளார். அத்துடன் பெண்ணே தனது வாழ்வியலைக், கடமைகளை நிறைவேற்றத் தேவையான பொருள்வளத்தையும் கொண்டு வர வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு இன்றைய ஆண்கள் இல்லற வாழ்வை மேற்கொள்ள விரும்புகின்றனர். இந்நிலையும் பெண்ணை பொருள் தேட்டப் பணியில் ஈடுபடுத்தித் திருமணமான பின்பு குடும்பத்துக் கடமைகளோடு பொருள் தேட்டப் பணியையும் செய்யும் புதிய 'மனைமாட்சி' ஒன்று இன்றைய பெண்களிடம் சிறப்பாக இணைந்துள்ளது. இப் பண்பு வள்ளுவர் வரையான செய்திகளிற் கூறப்பட்ட பெண்ணின் சிறப்புக் குணங்களுக்கு மேலதிகமான சிறப்பாக அமைந்துள்ளதை எல்லோரும் கருத்திற் கொள்ள வேண்டும்.

## தமிழருவி சஞ்சிகையால் நடத்தப்பட்ட பாடசாலை மாணவரிடையேயான கவிதை, கட்டுரைப் போட்டி முடிவுகள்

கவிதைப் போட்டி :

- 1ஆம் பரிசு 500/=
  செல்வி வானதி விஸ்வநாதன்
  இணுவில் மத்திய கல்லூரி, இணுவில்
- 2ஆம் பரிசு 300/=
  செல்வி விதுசா கிருபாகரன்
  சங்கானை சைவப்பிரகாச மகாவித்தியாலயம், சங்கானை.
- 3ஆம் பரிசு 200/=
  செல்வி நா.கீர்த்திகா
  இணுவில் மத்திய கல்லூரி. இணுவில்

கட்டுரைப் போட்டி :

- 1ஆம் பரிசு 500/=
  ச.தரண்யா
  மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.
- 2ஆம் பரிசு 300/=
  செல்வன் ஜெய. ஜெயவர்மன்
  மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை.
- 3ஆம் பரிசு 200/=
  செல்வி கி.தனுசா
  மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

பரிசில் பெற்ற மாணவர்களைத் தமிழருவி வாழ்த்துகின்றது. பரிசில்கள் விரைவில் மாணவர்களுக்கு வழங்கப்படும்.


# இலக்கிய இன்பம்

## வள்ளுவர் கூறும் அறம்



தமிழரின் பண்பியல் கருவூலத்தை அடியொற்றி ஊற்றெடுத்த திருக்குறள் உலகப் பொது மறையாக வைத்து நோக்கப்படுகிறது. இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அவதரித்த திருவள்ளுவர் மக்களுக்காக ஈன்ற உயர் ஞானச்செல்வமாகத் திருக்குறள் திகழ்கின்றது. வெப்பம் அதிகமானபோது அவ் வெப்பத்தைத் தணிக்க வானத்தில் மேகங்கள் சூல்கொண்டு மழை பொழிவது இயற்கை. அது போலவே அநீதியென்ற வெம்மை இப்பூவுலகில் மிகுதியானபோது ஞானமாகிய வானத்தில் அருளாகிய மேகம் தோன்றி நீதியாகிய மழையை 1330 குறள்களாகப் பொழிந்தது. அந்த நீதி என்ற மழை வெள்ளம் எல்லா இடங்களிலும் இப்போதும் தேங்கி நிற்கின்றது. இதனால் அற உலகம், பொருள் உலகம், இன்ப உலகம் மூன்றும் செழித்தன. அம் மேகந்தான் திருவள்ளுவர். அம்மழைதான் திருக்குறள் எனக் கொள்ளலாம். திருவள்ளுவர் பரந்த நோக்கம் கொண்டவர். எம் மதத்தையும் சாராமல் பொது நிலையில் நின்று எல்லா மதங்களையும் நோக்கினார். எவர் மனமும் புண்படாமல் கூற வந்த கருத்தை நடுநிலை நின்று ஆணித்தரமான முறையில் அறக் கருத்துக் களை இடித்து ரைத்தார். அவர் கூறிய சில கருத்துக்களை இலக்கிய இன்பம் பகுதி யூடாக நோக் குவோம்.





மனிதர்களில் மூன்று வகையினர் உண்டு. மனிதரில் தேவர், மனிதரில் மனிதர், மனிதரில் விலங்கு, ஆசை, பொறாமை, காம வெறி படைத்தவன் விலங்கு. அன்பு, ஆசை, உள்ளம் படைத்தவன் தேவன். தேவன் என்ற சொல்லுக்கு ஒளியுடையவன் என்பது பொருள். மேலும் தனக்கென்று வாழ்கிறவன் விலங்கென்றும் பாதி தனக்கென்றும், பாதி பிறர்க்கென்றும் வாழ்கிறவன் மனிதன் என்றும் தன்னைப் பிறருக்கே அர்ப்பணித்து வாழ்பவர்களை மனிதரில் மாணிக்கமான தேவநிலை யுடன் ஒப்பிட்டு உரைப்பர் பழந்தமிழ் நூலோர்.

ஆசை வாழ்க்கை துன்பமயமானது, அன்பு வாழ்க்கை இன்பமயமானது, அருள் வாழ்க்கை ஒளி மயமானது. இதனால் திருவள்ளுவர் முதலிய பல புலவர்களைத் தெய்வப்புலவர்கள் எனப் பழந்தமிழ் நூல்கள் சிலாகித்துரைக்கின்றன.

திருவள்ளுவர் பல்லாயிரம் சொற்களால் சொல்ல வேண்டிய விடயங்களைச் சில சொற்களால் மிகத் தெளிவாக அழகாக, எளிமையாகக் கூறிச் சென்றுள்ளார்.

திருமால் தனது பலராம அவதாரத்தில் தனது சிறிய இரண்டு அடிகளால் மூன்று உலகங்களையுமே அளந்தார் என்று புராணங்கள் கூறுகின்றன. ஆனால் ஒன்றே முக்கால் அடியால் பதினாறு உலகங்களையும் திருவள்ளுவர் அளந்தார் என்றால் அவர் தெய்வத்திற்குச் சமமானவர் என்ற முடிவிற்கு வரலாம் அல்லவா?

உலகப் பொதுமறையான திருக்குறளில் கடவுள் வாழ்த்து என்ற பகுதி முக்கிய இடம் வகிக்கின்றமை யாவரும் அறிந்ததே. அத்தகைய கடவுள் வாழ்த்தை ஏன் தனது திருக்குறளுக்கு முத்தாய்ப்பாக வைக்க வேண்டும் எனப் பலர் எண்ணுவது புரிகிறது. எப்போதும் அழிவற்ற பொருளாக, எல்லாம் வல்லவராக, அன்பு வடிவினராக முடிவில்லா ஆற்றல் உடையவராகத் திகழ்பவர் கடவுள் என்பதையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். அப்படியிருக்க அவரை எதற்கு வாழ்த்த வேண்டும்? என்று நீங்கள் கேட்கலாம். இங்கு தான் அவரின் நுண்மாண் நுழை புலத்தை அறிந்து கொள்ளலாம். நூல் ஒன்றில் ஆயிரம் மணிகள் கோர்க்கப்பட்டிருக்கிறது என

வைத்துக் கொள்வோம். அவ் ஆயிரம் மணிகளையும் அசைக்க வேண்டுமானால் ஒவ்வொரு மணியாகப் பிடித்து அசைப்பது அறிவுடைமையாகாது. எனவே ஆயிரம் மணிகளுக்குள்ளும் இழையோடியுள்ள நூலைப் பிடித்து அசைத்தால் ஆயிரம் மணிகளும் அசையுமல்லவா? அது போல எல்லா உயிர்களுக் குள்ளும் உயிருக்குயிராக ஊடுருவி நிற்கும் இறைவனை வாழ்த்தினால் எல்லா உயிர்களையும் வாழ்த்துவது போலல்லவா? அத்துடன் இறைவனை வாழ்த்தினால் எல்லா உயிர்களும் இன்புற்று வாழும் என்ற உயரிய நோக்கமும் அவரிடத்திலிருந்த படியால் கடவுள் வாழ்த்தென்ற பகுதியை முன்னுரையாகத் தனது நூலுக்கு சேர்த்துள்ளமை சிறப்பிற்குரியதாகும். இந்த அரிய கருத்தையே கடவுள் வாழ்த்தில்

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்"

என்ற ஈரடிகளில் ஒவ்வொரு ஆன்மாக்களிலும் நீக்கமற உறைந்திருக்கும் இறைவனை வாழ்த்தி வணங்கி வழிபடுபவர் என்றும் இன்புற்று நீடு வாழ்வார் என்கிறார். எல்லா உயிர்களும் கடவுளின் படைப்புக்கள் ஆதலின் அவ்வுயிர்கள் அனைத்தை யும் ஓம்புதல் வேண்டும். இதுவே ஆன்றோர்கள் தொகுத்துள்ள அறங்கள் அனைத்திற்கும் நடு நாயகமாக விளங்குகின்றது.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

மற்றைய உயிர்களிடத்து அளவு கடந்த கருணை வைத்தாலன்றிக் கடவுளின் கருணையை நாம் எதிர்பார்க்க முடியாதென்ற திருவள்ளுவரின் வாதம் ஏற்புடையதே.

'ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று"

என்ற குறள் மூலம் மனிதருக்கு இருக்க வேண்டிய நல்ல அறங்களை அழகாக எடுத்து விளக்கியுள்ளார்.

எனவே மேற்படி அறங்களை மனிதராகப் பிறந்த நாம் அநுசரித்து நடக்கிறோமா? என்றால் நிச்சயமாக இல்லை என்றே கூறவேண்டும். திருவள்ளுவர் கூறும் அறங்கள் சிறு துளியேனும் உலக மக்களிடத்தே இல்லாமையாலேயே இன்று மனிதர்களுக்கிடையே சண்டைகள், சச்சரவுகள், உட்பூசல்கள், கொலை மற்றும் நாடுகளுக்கிடை யிலான போர் இனங்களுக்கிடையே குரோதம் என விரிவடைந்து கொண்டு செல்கின்றன எனலாம்.

எஸ். நதிபரன் **B.A (Hons)**

## மாணவர் கட்டுரைப் போட்டி II

விஞ்ஞான வளர்ச்சியால் மனித சமுதாயத்திற்குக் கிடைத்தது நன்மையா? தீமையா? என்பதனைக் கருப்பொருளைக் கொண்டு 250 சொற்களுக்குக் குறை யாமல் கட்டுரை எழுதுங்கள்.

முதற் பரிசு 500/-

2ஆம் பரிசு 300/-

3ஆம் பரிசு 200/-

முதற்பரிசு பெறும் ஆக்கம் சஞ்சிகையிற் பிரசுரிக்கப்படும்.

முகவரி : த.கணேசமூர்த்தி, தமிழருவி,
இயக்குநர், உதவி ஆசிரியர்,
சிவகுல வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

குறிப்பு : கட்டுரை குறித்த மாணவரின் சொந்த ஆக்கம் எனப் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.



## மாதம் ஓர் இளம் எழுத்தாளர் அறிமுகம்

வளர்ந்துவரும் எழுத்தாளர்களை மாணவப் பருவத்தி லேயே இனங்கண்டு ஊக்குவிக்கத் தமிழருவி விரும்புகின்றது. இவ்வகையில் சிறுகதை அல்லது கவிதை எழுதும் மாணவர்களுள் திறமையான ஒருவரது முழுப்பெயர், பிறந்த திகதி, இடம், பெற்ற விருதுகள், எழுதிய ஆக்கங்களின் எண்ணிக்கை என்பவற்றுடன் புகைப்படம் ஒன்றையும், அவரது ஆக்கங்களுட் சிறந்ததெனக் கருதும் ஆக்கத்தையும் அனுப்பிவைத்தால் பிரசுரிப்பதற்குத் தமிழருவி தயாராக உள்ளது. ஆக்கங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

**த.கணேசமூர்த்தி, தமிழருவி,**
**இயக்குநர், உதவி ஆசிரியர்,**
**சிவகுல வீதி,**
**உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.**

**எழுத்தாளர் - 2**



பாலசுப்பிரமணியம் நீதுஜன், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மாணவன். இவர் 18.09.1990இல் தெல்லிப்பழையிற் பிறந்தவர். சிறுகதைத் துறையில் ஈடுபட்டுள்ள இவர் இதுவரை 25 சிறுகதைகள் வரை எழுதியுள்ளார். இவரது கதைகளிற் சில மகாஜனன் மலர்களில் வெளிவந் துள்ளன. விஞ்ஞானம் சார்ந்த கதைகளையே அதிகம் எழுதும் இவர், கணிதத் துறையிற் கற்றுப் பொறியியற் பீடத்துக்குச் செல்லும் வாய்ப்பையும் பெற்றுள்ளார். இவர் சிறுவயதில் இருந்தே ஜெயகாந்தன், ரஷ்ய எழுத்தாளர்களான டால்ஸ்ராய், அன்ரன் செக்கோவ் முதலியோரது கதைகளை வாசித்து வருவதுதான் தனக்குச் சிறுகதை எழுதும் ஆர்வத்தை ஏற்படுத்தியதாக இவர் கூறுகின்றார். அத்துடன் தனக்கு விருப்பமான எழுத்தாளர் அன்ரன் செக்கோவ்தான் என்கின்றார். சிறுகதைத் துறையில் சிறந்த எழுத்தாளராக வருவதே இவரது இலட்சியமாக உள்ளது. இவரது சிறந்த சிறுகதை ஒன்று இங்கு தரப்படுகின்றது.

# மிருகம்

கொண்டுவந்திருந்த தண்ணீரை மீண்டுமொரு முறை குடித்துக் கொண்டேன். டேவிட்டின் முகத்தைப் பார்த்தேன். ஐந்து மணி நேரமாக ஒரே நேரத்தில் காத்துக் கிடக்கும் களைப்போ, அலுப்போ முகத்தில் கொஞ்சமும் தெரியவில்லை. சரிதான் இந்தத் தொழிலின் அடிப்படைப் பாடமே பொறுமைதான். நான் தான் கற்றுக்குட்டி என்பதால் பொறுமை யிழந்தேன்.

"சேர்..." ரகசியக் குரலில் டேவிட்டை அழைத்தேன்.

"என்ன?" என்றார் கிசு கிசு குரலில் எரிச்சலைக் கலந்து.

"எதுவும் வருகிறமாதிரித் தெரியவில்லை. வேண்டுமானால் நாளைக்கு வந்து முயற்சி பண்ணிப் பார்க்கலாமே..?

"உஷ் பேசாமல் இரு. இன்னும் கொஞ்ச நேரம் தான். ஏதாவது வரும். பொறுமையா இரு."

இன்னும் கொஞ்ச நேரமா? இப்படித்தான் காலையிலிருந்து சொல்லிக் கொண்டிருக்கிறார். இந்த வெயிலின் ஐந்து மணி நேரம் இருந்தால் 12 ஆம் நம்பர் ஸ்பானரே உருகி ஊற்றிண்டுவிடும். நானெல்லாம் அவிந்திடுவேன். மாலைச் சாப்பாட்டுக்கு உப்பையும் தூளையும் தொட்டுவிட்டு விரல்களையே கடித்துக் கொள்ளலாம் போலிருந்தது. ஹொலிவூட்டில் வாய்ப்புத் தேடாமல் கமராவையும் எடுத்துக் கொண்டு காட்டுக்கு வந்த எனக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும் என நினைத்துக் கொண்டேன்.

"இன்னும் நான்கு மணி நேரம் காத்திருக்கலாம்." என்றார் டேவிட்.

டேவிட்டும் நானும் ஒரு உலகப் பிரபல வனவிலங்குத் தொலைக்காட்சிச் சனலின் ஒளிப் படக்காரர்கள் என்றால் டேவிட் ஒளிப்படவியலாளர், நான் அவரது உதவியாளர் என்று அர்த்தம் கொள்க. நான் - முன்னமே என்னைப் பற்றிச் சொன்னது போல – ஒரு கற்றுக்குட்டி. பயிர் கிரில்ஸ் தவளை சாப்பிடும் நிகழ்ச்சியைத் தொலைக்காட்சியில் பார்த்து ஈர்க்கப்பட்டு, தொலைக்காட்சிப் பெட்டியில் பார்த்ததையெல்லாம் வியூ∴பைண்டர் பெட்டியில் பார்க்க ஆசைப்பட்டு பெண்டகோனியா பல்கலைக் கழகத்தில் வைல்ட்லை∴ப் சினிமோடோ கிர∴பி என்னும் வனவிலங்கு ஒளிப்படவியல் படித்துவிட்டுப் பயிற்சிக்காக இதோ, இங்கே பிணம்மாதிரிக் குப்புறப் படுத்திருக்கும் டேவிட்டிடம் உதவியாளராகச் சேர்ந்துள்ளேன்.

நான் கற்றுகுட்டி என்பதை இதையும் சேர்த்து மூன்று முறையாகத் தெரியப்படுத்தி விட்டால் என் திறமைகளைப் பற்றி மென்மேலும் விவரிக்க நான் முற்படப் போவதில்லை. ஆனால் இந்த டேவிட் இருக்கிறாரே இவர் ஒரு உலகப் பிரபலம். டிரெக்டர் ஓ∴ப் ∴போட்டோ கிர∴பி. டேவிட் விபர்மன் என்று டிஸ்கவரி சனலிலோ அனிமல் பிளனட்டிலோ பார்க்கநேர்ந்தால் அது நம்மவர்தான் என்பதை அன்பர்கள் புரிந்து கொள்ள வேண்டும். எருதுகள் வேட்டையாடப்படுவதைப் படம்பிடித்தே விருதுகளை வேட்டையாடிய மனிதர் அவர். அவரிடம் சேர்ந்த பின்னர் எனது முதலாவதுசெயற்றிட்டம் தான் இது. உலகில் அழிந்து வரும் அரியவகை மானினமான மகுவானாக்கள் பற்றிய ஒரு விவரணப்படத்துக்கான காட்சிகளைப் படம்பிடிப்பதற்காக வட இந்தியாவின் ஹரியானா சமவெளியில் இருவரும் முகாமிட்டுள்ளோம். கடந்த ஆறு மாதங்களாக மண்ணுள் புதைந்திருந்தும் மரங்களில் தொங்கிய படியும் அந்த மான்களின் வாழ்க்கையைப் பலவிதங்களிலும் படம்பிடித்துவிட்டோம். இந்தத் தொழில் எத்தனை கஷ்டமானது என்று உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. இரண்டு சிங்கங்கள் நேரடியாக மோதிக் கொள்ளும் ஒரு ஐந்து நிமிடக் காட்சியை எடுப்பதற்கு நாங்கள் இரண்டு வருடங்கள் குடும்பம், குடித்தனம், சாப்பாடு, தண்ணீர், ஏ.ஆர் ரஹ்மானின் அல்பம், பெரியப்பாவின் மகளின் திருமணம், சில வேளைகளில் சுவாசத்தைக் கூட மறந்துவிட்டுக் கமராவும் கையுமாக வௌவால் மாதிரி மரங்களில் தொங்கிக் கொண்டிருப்போம்.

எப்படியோ எமது செயற்றிட்டத்தில் ஏறத் தாழ முழுவதுமே முடிந்துவிட்டன. மகுவானாக்கள் இரைக்காக வேட்டையாடப்படும் ஒரு காட்சியை மட்டும் எடுத்துவிட்டால் முழு வேலையும் முடிந்துவிடும். அதற்காகத்தான் மகுவானா மான்கள் கூட்டமாக வந்து புல்மேயும் ஒரு வற்றிய குளத்துக்கருகில் பற்றைகளுள்ளே மறைந்து காத்துக் கொண்டிருக்கிறோம். மான்களோ நிதானமாகப் புல்மேய்ந்து கொண்டிருக்கின்றன – ஐந்து மணி நேரமாக.

நான் எதிர்பார்ப்பதை விட அசுவாரசியமாக இருக்கிறது வேலை. டேவிட்டை மறுபடி பார்த்தேன். அசையாமல் வியூ∴பைண்டரையே பார்த்துக் கொண்டிருந்தார். அவரது தொழில் சிரத்தை என்னை பிரமிக்க வைத்தது. ஆறு மாதங்களிலேயே எனக்கு அலுத்துவிட்டதே, இருபது வருடங்கள் இத் தொழிலை ஒரு தவம் போல ஒரு கலையாகச் செய்துவருகிறாரே. இவரைப் பற்றித்தான் எத்தனை வதந்திகள். ஒருவன் புகழ்பெறத் தொடங்கியதுமே அவனைப் பற்றிய வதந்திகளும் வெளிவரத் தொடங்கிவிடுகின்றன. இன்னும் சொன்னால் வதந்தியே புகழ்தலின் ஒரு வடிவம்தானே? ஆனால் இது எந்த ஒரு வனவிலங்கு ஒளிப்படக்காரனாலும் தாங்கிக் கொள்ள முடியாத வதந்தி. தன் உயிருக்கான மிகக் குறைந்தளவு பாதுகாப்புக்கூட இல்லாமல், சகலவிதமான வசதிகளையும் தியாகம் செய்து, வருடக்கணக்காகக் காடுகளிலும் பாலை நிலங்களிலும் அலைந்து படம் பிடித்து, விலங்குகளை வீடுகளின் வரவேற்பறைக்குக் கொண்டு வரும் ஒருவன், அதே விலங்குகளை, அவற்றின் தோலுக்காகவோ, பற்களுக்காகவோ, கொம்புகளுக்காகவோ, இன்னபலவுற்றுக்காகவோ கொன்று கடத்தும் பணவெறிக் கூட்டங்களுக்கு உதவுகிறான் என்று குற்றம் சாட்டினால் யார் தான் பொறுப்பார்கள்? ஆனால் டேவிட்டோ அவ் வதந்திகளைக் கேவலம், கருத்திலெடுப்பது கூட இல்லை.

"ஏய் அதோபார்!"

இடையிலே கதையைத்தொடங்கியதால் வாசகர்கள் குழப்பமடையக் கூடாது என்பதற்காகவும் விளக்கமாக, நினைவுகளில் மூழ்கியிருந்த நான் திடுக்கிட்டு நிமிர்ந்து டேவிட் காட்டிய திசையில் பார்த்தேன். அமைதியாக மேய்ந்து கொண்டிருந்த அந்த மான் கூட்டத்தை நோக்கி ஒரு பெரிய – உயரமான - நீளமான – கம்பீரமான – புலி, ஓசை படாமல் வந்து கொண்டிருந்தது. புலிகளுக்கு இயற்கை வழங்கிய பரிணாமச் சாதகம் இது. புலியின் உடலில் உள்ள வரிகள், நிமிர்ந்து நிற்கும் புற்களிடையே புலியை மிக எளிதாக மறைக்க உதவுகின்றன. ஒரு பெருமூச்சைச் சின்னதாகச்

சிறுமூச்சாக விட்டேன். கடவுளே, இத்தோடு வேலை முடிந்தது. புலி ஏதாவது ஒரு மானைப் பாய்ந்து பிடித்து, நடுத்தொண்டையைக் குறிவைத்துக் கடித்து, அப்படியே இழுத்துச் சீறிவரும் இரத்தத்தைக்



கொஞ்சம் நக்கிவிட்டுப் பின் நெஞ்சுப்பகுதியைக் காலால் கிழித்து, மானின் இதயத்தை நோண்டி எடுத்துத் தின்றுவிட்டு நாக்கால் வாயைத் துடைத்தவாறே நிமிர்ந்து சுற்றுவட்டாரத்தில் எங்காவது கழுதைப்புலிகளோ, ஓநாய்களோ வருகின்றனவா எனப் பார்க்குமே, அதைக் கவர் பண்ணுவதுடன் முடிகிறதையா, இந்த ஆறுமாத அஞ்ஞாதவாசம் எங்களுக்கு.

புலி சந்தடியில்லாமல் மான் கூட்டத்தை நெருங்கியது. ஒரு கமராவைப் புலிக்கும், மற்றையதைப் பொதுவாக மான் கூட்டத்துக்கும் என்று குவித்தோம். (ஃபோகஸ் பண்ணினோம் என்று பொருள் கொள்க) "அக்ஷன்" சொல்லப்படாமலேயே ஒரு உயிர் நாடகம் நடக்கப் போகிறது. அதை அறியாமலேயே நடித்துக் கொண்டிருக்கின்றன அம்மிருகங்கள். புலி ஓசைப்படாமல் புதருக்கிடையில் நடந்தது. புரிந்துவிட்டது. ஏதோ ஒரு மானைக் குறிவைத்துவிட்டது. ஒரு மானுக்குச் சொர்க்கப் பதவியும் ஒரு சர்வதேசத் தொலைக் காட்சியில் முகம் காட்டும் வாய்ப்பும் ஒரு சேரக் கிட்டப் போகின்றன.

புலி மேலும் நெருங்கியது. இன்னும் நாற்பதடிகள் புலி எந்த மானைக் குறிவைக்கிறது என்பதைக் கண்டு பிடித்து விட்டிருந்த டேவிட் கமராவை அதை நோக்கிக் குவித்தார். அடடா! திடீரென்று ஒரு குட்டி மான் புலியைப் பார்த்து விட்டது. அது மிரள எல்லா மான்களும் உசாராகி விட்டன. எல்லாமே புலியை நிமிர்ந்து பார்த்தன. புலி மான்களை விட்டு விலகி நடப்பது போலச் சில அடிகள் எடுத்து வைத்துவிட்டுத் திரும்பிப் பார்த்தது. அது பார்த்த உடனேயே எல்லா மான்களும் ஒரே ஓட்டமாக ஓடத் தொடங்கின. புலி அவற்றைத் துரத்தத் தொடங்கியது. முதலில் ஒரு மானைத் துரத்தியது. பிறகு வேறொன்றைத் துரத்தியது. எல்லா மான்களும் குளத்துக்கு அப்பாலிருந்த மேட்டை நோக்கி ஓடின. மேட்டில் ஏறிவிட்ட மான்கள், சிறிது திரும்பிப், புலியையும் மேட்டை நோக்கி ஓடிவரும் ஏனைய மான்களையும் பார்த்தன.

டேவிட் என்னைத் தட்டி வியூ பைண்டரில் (கமரா திரை) ஒரு இடத்தைத் தொட்டுக் காட்டினார். மேட்டின் அடியில் ஒரு மான்குட்டி விழுந்து படுத்திருக்க, ஒரு பெரிய மான் - அதன் தாயாக இருக்க வேண்டும் முகத்தால் நெம்பி அதை எழுப்ப முயன்று கொண்டிருந்தது. மேட்டில் ஏறும் போது சறுக்கி விழுந்து, அல்லது ஏனைய மான்களிடையே இடறுப்பட்டு, அந்தக் குட்டியின்



கால் உடைந்திருக்க வேண்டும். அதனால் எழும்ப முடியவில்லை. தனது ஆபத்தையும் பொருட்படுத்தாது, அந்தத் தாய்மான் குட்டியை முகர்வதும், நெம்பி எழுப்ப முயல்வதுமாக இருந்தது. இடையிடையே திரும்பிப் புலியையும் பார்த்தது. ஏனைய மான்களைத் துரத்திக் கொண்டிருந்த புலி, இவற்றைக் கண்டதும்,

இவற்றை நோக்கி நிதானமாக நடந்துவரத் தொடங்கியது.

என் இதயம் இடித்துக் கொண்டது. புலி அறுபதடி தூரத்திலிருந்து நிதானமாக அவற்றை நெருங்கிக் கொண்டிருக்க, தாய் மான் அவசரமாக மிக அவசரமாக உயிர்ப் பயத்துடன் குட்டியின் வயிற்றுப் பக்கம் தனது முகத்தை நுழைத்து குட்டியை நெம்பி எழுப்ப முயன்றது. குட்டியும் எழ முயன்றது. ஆனால், பின்னங்கால்களை நிமிர்த்தி முன்னங்கால்களை ஊன்றியவுடனேயே – பரிதாபம்! மறுபடி விழுந்தது.

புலி ஐம்பதடி தூரத்தில் வந்துவிட்டது. ஏனைய மான்கள் ஓடியே போய்விட்டன. புலி இரண்டு மான்களையும் குறிவைத்து நடந்துகொண்டிருந்தது. ஒரே மூச்சாக, இறுதி முயற்சியாகத் தாய்மான் குட்டியை கழுத்துப் பகுதியில் கவ்வி உயர்த்தியது. ஆனால் அதனால் முடியவில்லை. அதன் இயலாமை அதன் கண்களில் தெரிந்தது. மிகப் பரிதாபமாயிருந்து. தாய் ஒருமுறை புலியை நிமிர்ந்து பார்த்து. புலி முப்பதடி தூரத்தில் வந்து கொண்டிருந்தது. மான் சுற்றுமுற்றும் பார்த்தது. பின்னர் புலியை நேராகப் பார்த்தது. அதன் உயிர்ப் பயம் அதன் கண்களில் அப்பட்டமாகத் தெரிந்தது. இருபத்தைந்தடி இடைவெளியில் புலி – மான் மறுபடி குட்டியை முகர்ந்து பார்த்துவிட்டு - இருபதடி – புலியை நிமிர்ந்து பார்த்தது.

ஒரு மரண பயம் - ஒரு பரிதாபம் - ஓர் அவலம் - எனக்கு இரத்தமே உறைந்துவிட்டது. பதினைந்தடி தூரத்தில் அந்த இரண்டு மான்களையும் நோக்கி நடந்து வந்து கொண்டிருந்த புலி – சட்டென்று நின்று விட்டது.

நின்று நிதானமாக நிமிர்ந்து பார்த்தது, சுற்றிலும் பார்த்த, மானின் முகத்தைப் பார்த்தது. குட்டியைப் பார்த்தது. பின் - பின்னர் அந்தப் புலி திரும்பி வந்தவழியே நடக்கத் தொடங்கியது.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இதை எப்படி எடுத்துக்கொள்வது? மானைப் பார்த்தேன். அது புலியைப் பார்த்த பார்வையில் தெரிவது என்ன? புலி ஏன் மான்களை விட்டுச் சென்றது? வேட்டையாடாமல, கிடைத்த இரையைப் பிடிக்க மனமில்லாமலா?, அல்லது மானின் கண்களில் தெரிந்த பரிதாபத்துக்கு இரக்கப்பட்டா,?

விவரிக்க முடியாத ஓர் உணர்ச்சியுடன் டேவிட்டைப் பார்த்தேன்.

"ம்......" ஒரு பெருமூச்சுவிட்டபடி டேவிட் சொன்னார்.

"எனது வாழ்க்கையின் மறக்க முடியாத ஒரு சம்பவம் இது. இதோ பார்! என் கைகள் நடுங்குகின்றன. என்ன ஒரு அருமையான சீன்! ஒரு மிருகத்துள் மனிதம்! இந்த ஒரு விடயத்தை எடுத்ததற்காகவே எனக்கு எட்டாவது முறையாக ஸ்ட்ரோடிங்கர் விருது கிடைக்கப் போகிறது... அதோ அந்தப் புலியைப் பார்"

பார்த்தேன். அது நிதானமாக, அமைதியாக நடந்து போய்க்கொண்டிருந்தது. தாய்மான் அதையே பார்த்துக் கொண்டிருந்தது. குட்டியும் நிமிர்ந்து பார்த்து.

புலி – தாய் மான் - குட்டி மூன்றையும் நான் மெய்மறந்து மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருந்த போது, சொந்தப் பாதுகாப்புக்காக என்று சொல்லி, சரியான வனப்பாதுகாவலரிடம் இலஞ்சம் கொடுத்து அனுமதி பெற்றுக் கொண்டு வந்திருந்த ஷொட்கன் வகைத் துப்பாக்கியை என்கையில் வைத்தார் டேவிட்.

"மூன்றையும் சுட்டுவிடு."


## தவறுக்கு வருந்துகின்றோம்

1. தமிழருவி முதலாவது இதழில் வெளியான வடவரணி சி. சபா அவர்களின் சினிமாவைச் சாதனமாக்கிய பக்திநெறி என்னும் கட்டுரையிலும்
2. முருகையா ஜெயமதன் அவர்களின் சிறுவர் உளவியலும் கற்பித்தல் முறையும் என்னும் தொடர் கட்டுரையிலும் பெயர்கள் தவறுதலாக இடம்பெறவில்லை. எம்மை அறியாமல் இடம்பெற்ற இத்தவறுகளுக்காக மனம் வருந்துகின்றோம்.

ஆசிரியர்கள்

01. சர்வாதிகாரி இடியமீனின் ஆட்சிக்கு உட்பட்ட தேசம் எது?
உகண்டா

02. ரஷ்யாவிடம் முதலில் 2ஆம் உலகப் போரின் போது ஜேர்மனியப் படைகள் தோல்வியைத் தழுவிய களமுனை எது?



ஸ்ராலின் கிராட்

03. ஆங்கிலேயர் இலங்கைக்கு வந்து இருந்த போது தமக்குத் தேவையான அடிமைகளை இந்தியாவில் இருந்து கண்டி உட்பட மலைநாட்டிற்கு எந்தத் துறைமுகம் ஊடாக கூட்டிச் சென்றனர்?
மாந்தை (மன்னார்)

04. ஓசோன் படலம் ஓட்டையாகக் காரணமான வாயு எது?
குளோரோ புளோரோ காபன்

05. இலங்கையில் சமாதான நீதிவான் என்பவரை நியமனம் செய்கின்ற திணைக்களம் எது?
நீதி அமைச்சு

06. இலங்கையில் உள்ள வணிக வங்கிகளின் தலைமை வங்கி எது?
இலங்கை மத்திய வங்கி

07. இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களினை நிர்வாக ரீதியாக ஒழுங்குபடுத்துகின்ற அமைப்பு எது?
உயர்கல்வி அமைச்சின் கீழ் உள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

08. இந்தியா விண்வெளிக்கு செயற்கைக் கோளை அனுப்புகின்ற இடமும் அங்கு பணியாற்றும் தமிழ் விஞ்ஞானியும் எது? யார்?
சிறீஹரிக்கோட்டா, அண்ணாத்துரை

09. நீண்ட அரசியல் அனுபவம் கொண்ட தலைவர் ஒருவர் அரசியல் கிளர்ச்சியை எதிர்கொள் கின்றார் அவர் யார்?
லிபிய ஜனாதிபதி கேணல் கடாபி

10. சந்திரனை முதலில் தொலைநோக்கியால் பார்த்தவர்? கலிலியோ கலிலி

11. சென்னைக்கு அருகில் அமைந்துள்ள வனவிலங்கு சரணாலயம்? வேடந்தாங்கல்

12. தற்போது ஓய்வை அறிவித்துள்ள உலகப் புகழ் வாய்ந்த உதைபந்தாட்ட வீரர்? றொனால்டோ

13. உளப்பகுப்பாய்வுக் கொள்கையை அறிமுகப் படுத்தியவர்? சிக்மன் புறொயிட்

14. 2011ஆம் ஆண்டு உலகக் கோப்பை கிரிக்கெட் நடைபெறும் நாடுகள்?
இந்தியா, இலங்கை, பங்களாதேஷ்

15. யாழ்ப்பாண பொது நூல் நிலையத்தை நிர்வகிக்கின்ற அமைப்பு யாது? யாழ் மாநகர சபை

16. அமெரிக்காவுடன் பல வருடங்கள் போராடி வெற்றியடைந்த சிறிய நாடு?
வியட்நாம்

17. பலஸ்தீன விடுதலைக்காக பல ஆண்டுகள் போராடிய தலைவர் யார்? ஜசீர் அரபாத்

18. இலங்கைப் பாராளுமன்ற வரலாற்றில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி வகித்த ஒரே ஒரு தமிழர் யார்?
அமரர் அமிர்தலிங்கம் அவர்கள்

19. எந்தக் குரங்கிலிருந்து மனிதன் தோன்றியதாக கூறப்படுகின்றது? சிம்பன்சி

20. புனித பாப்பரசரின் அலுவலகம் அமைந்த இடம்? வத்திக்கான்

21. இலங்கைக் கிரிக்கெட் அணியின் மீது எந்த நாட்டில் வைத்து வெடிகுண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டது? பாகிஸ்தானில் வைத்து

22. கைத்தொலைபேசி பாவனையால் அதிகளவில் மனித மூளையை பாதிப்படையச் செய்வது என்ன? கதிர்வீச்சு

23. அமெரிக்காவில் தமிழர்களின் பாரம்பரிய உடையைக் கண்டு நகைத்த வெள்ளையர் களை தனது பேச்சு வசீகரத்தால் பேசி மண்டியிட வைத்த சமயப் பெரியவர் யார்?
சுவாமி விவேகானந்தர்

24. இஸ்லாமியர்களின் புனித நூல் எது?
திருக்குர்ஆன்

25. கந்தசஷ்டி கவசத்தை இசையால் குரல் கொடுத்துப் பாடுபவர்கள் யார்?
சூலமங்கலம் சகோதரிகள்

26. பஞ்சபாண்டவர்களில் சாஸ்திரக் கலையை நன்கு பயின்று தேர்ச்சி பெற்றவன் யார்?
சகாதேவன்

27. இலங்கையின் தற்போதைய பிரதமர் கௌரவ டீ.எம். ஜெயரட்ண அவர்கள் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்? கண்டி மாவட்டம்

28. ICRC நிறுவனம் பல ஆண்டுகள் யாழ் மக்களுக்கு சேவையாற்றி எப்போது யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறியது? 23.02.2011

29. கிளிநொச்சி - யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இடையே கடலை ஊடறுத்துப் பாலம் அமைத்து போக்குவரத்து நடைபெறுவது எங்கு? கேரதீவு-சங்குப்பிட்டி

சி. சிறீதரன்

எழுதுங்கள்! வெல்லுங்கள்!

## மாதாந்த கவிதைப் போட்டி இல - 2

மாணவர்களின் கவிதை எழுதும் ஆற்றலை மேம்படுத்துவதற்காக மாதாந்தம் கவிதைப் போட்டி நடத்தப்படுகின்றது. இப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெறும் மாணவருக்கு முறையே 500/-, 300/-, 200/- வழங்கப்படும். தரப்பட்ட கவிதைகளைத் தொடர்ந்து அந்த சந்தத்தில் நான்கு அடிகள் வீதம் கொண்ட மூன்று பாடல்கள் எழுதவேண்டும். இடைவெளி கீழே தரப்பட்டுள்ளது. இந்த ஆக்கம் குறித்த மாணவர்களுடைய தான் என்பதை அதிபர் உறுதிப்படுத்திய பின்னர்,

த.கணேசமூர்த்தி, தமிழருவி இயக்குநர், உதவி ஆசிரியர், சிவகுல வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். ஆசிரியர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

ஆசிரியர்கள்.

## பப்பி நல்ல நாய்க்குட்டி

பப்பி நல்ல நாய்க்குட்டி
பாய்ந்தே ஓடும் நாய்க்குட்டி
எப்போ தும்என் பக்கத்தில்
வந்தே நிற்கும் நாய்க்குட்டி

.........................................
.........................................
.........................................
.........................................

* * *

.........................................
.........................................
.........................................
.........................................

* * *

.........................................
.........................................
.........................................
.........................................



# தமிழ் மருத்துவமும் ஆரோக்கிய வாழ்வும்

டாக்டர் கந்தையா சோதிதாசன் R.I.M.P (Cey)



தமிழர் மருத்துவமும் ஆரோக்கிய வாழ்வும் கட்டுரை தொடரில் இரத்த அழுத்தம் இதற்குரிய சித்த மருத்துவ சிகிச்சை முறைகள் பற்றிச் சென்ற இதழில் ஆராய்ந்தோம். அடுத்து மதுமேகம் எனச் சித்த மருத்துவ நூல்களில் குறிப்பிடப்படும் நோய் பற்றியும் அதற்கான சித்த மருத்துவத் தீர்வுகள் பற்றியும் இத் தொடர் விபரிக்கின்றது.

சர்க்கரை நோய்க்கான இன்சுலின் மருந்து 1922ஆம் ஆண்டுதான் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் ஆங்கிலேயர் வருவதற்கு முன்பே அகத்தியர் மூலிகைக் குறிப்புக்களில் மதுமேகம் என்ற பெயரில் மருத்துவக் குறிப்புக்கள் இடம்பெற்றுளன. ஆயுர்வேத ரிஷிகளான சரகர், சுருதர் இவர்களுக்கு இந்தக் குறைபாட்டின் பாரம்பரியத் தன்மை மட்டுமன்றி, அதிக தாகம், வாய் உலர்வது, சிறுநீரில் சர்க்கரை இருப்பது போன்ற அடையாளங்கள் தெரிந்திருந்தன. இளவயது நீரிழிவு, வயதாகி வரும் நீரிழிவு நோய்களின் வித்தியாசங்களை அவர்கள் அறிந்திருக்கின்றனர். சிகிச்சை முறைகள், உணவு, கட்டுப்பாடு, உடற்பயிற்சிகள் பரிந்துரைக்கப்பட்டன. 'மது' என்றால் இனிப்பு என்றும் 'மேகம்' என்றால் நோய் என்றும் பொருளாம். அகத்தியர் 1200இல் பின்வருமாறு நோய்வரும் வழி விவரிக்கப்பட்டுள்ளது.

கோதையர் கலவி போதை
கொழுத்தமீனிறைச்சி போதைப்
பாதுவாய் நெய்யும் பாலும்
பரிவுடணுண்பீராகில்
சோதபாண்டுருவ மிக்க
சுக்கில பிரமே கந்தான்
ஓது நீரிழிவு சேர
உண்டென வறிந்து கொள்ளே"

அதாவது மீன் இறைச்சி போன்ற மாமிச உணவுகளை மிக அதிகமாகப் புசித்தாலும், நெய், பால் போன்ற உணவுவகைகளை அதிகமாகப் புசித்தாலும் இந் நோய் தோன்றும் என அகத்தியர் தெரிவிக்கிறார்.

## நீரிழிவு என்றால் என்ன?

உடலால் குளுக்கோசின் கட்டுப்படுத்த முடியாத நிலைமை நீரிழிவு நோய் எனப்படுகின்றது. குருதியில் குளுக்கோசின் அளவு உயர்வதற்கு இன்சுலின் சுரப்பியின் அளவு குறைவதோ செயற்பாட்டில் மாற்றம் ஏற்படுவதோ காரணமாகிறது. நீரிழிவு நோய் இருவகைப்படுகிறது.

வகை 1 இது பொதுவாக இளம் பராயத்தினரிடையே காணப்படுகின்றது. இன்சுலின் தங்கியுள்ள நீரிழிவு என அழைக்கப்படுகின்றது. (Insulin depent diabetes mellitus) கணைய சுரப்பியில் சுரக்கின்ற கலங்கள் பாதிப்படைவதால் ஏற்படுகின்றது.

இங்கு தேவையான அளவு சுரக்கப் படுவதில்லை. இது திடீரெனக் கடும் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

வகை 2 இது பெரும்பாலும் வயது வந்தவர் களிடையே காணப்படும். கணைய சுரப்பியில் இன்சுலின் சுரக்கப்படுகின்ற போதும் அதன் செயற்பாட்டில் தடையேற்படுவதால் ஏற்படுகின்றது. இன்சுலின் சாராத நீரிழிவு எனப்படும் (non – Insulin dependent melitus (IDDM)

உடல் ஆரோக்கியமாக இருக்கும் சராசரி மனிதா் ஒருவா் அன்றாட வாழ்க்கையில் சாப்பிடும் இனிப்பின் அளவுக்கும் அவருக்கு நீரிழிவு நோய் வருவதற்கும் நேரடி தொடர்பில்லை. அதேசமயம், ஒருவருக்கு நீரிழிவு நோய் வருவதற்கான மரபுக் காரணிகளும், சுற்றுப்புறக் காரணிகளும் ஏற்கனவே அதிகமாக இருக்கும் பின்னணியில், அவர் கூடுதலாக இனிப்புணவுகளைச் சாப்பிட்டால், அதன் மூலம் நீரிழிவு நோய் வருவதற்கான சாத்தியங்களும் அதிகரிக்கும்.

## நோய் அறிகுறிகள்

அதிகதாகம், அதிக பசி, அதிக சோர்வு, எடை குறைதல், அடிக்கடி சிறுநீர் கழித்தல், ஆறாத புண்கள், ஆகிய அறிகுறிகள் நீரிழிவு நோய் வந்திருப்பதைக் குறிப்புணர்த்துவனவாகக் கருதப் படுகின்றன.

அதே சமயம் இத்தகைய அறிகுறிகள் சர்க்கரை நோய் பாதிப்புக்கு உள்ளானவர்கள் அனைவருக்கும் தெரிவதில்லை. நீரிழிவுநோய் தாக்கியவர்களில் சுமார் ஐம்பது சதவீதம் பேருக்கு இந்த அறிகுறிகள் வெளியில் தெரியாமலே இருக்கும் என்பதுதான் நீரிழிவு நோயில் இருக்கும் மிகப் பெரிய மருத்துவ அவலம்.

ஒருவருக்கு நீரிழிவு ஏற்பட்டிருக்கிறதா என்பதை இலகுவான குருதிப் பரிசோதனை மூலம் கண்டு கொள்ளலாம்.

1. Facting blood Sugar 6 மணித்தியாலங்கள் உணவை விடுத்து செய்யப்படுவது 126mg/dl க்கு அதிகமாக இருத்தல்.
2. Random blood Sugar எழுந்தமான நேரத்தில் குருதியில் குளுக்கோசின் அளவு 200 mg/dl க்கு அதிகமாக இருத்தல்
3. post prandial உணவு உண்டபின் 2 மணித்தியாலங்களின் பின் குருதியில் குளுக்கோசின் அளவு 140 mg/d க்கு அதிகமாக இருத்தல்

## நீரிழிவு நோய்க்கு சித்த மருத்துவ சிகிச்சை

இந் நோய் சிகிச்சையில் பல மருந்துகள் சித்த ஆயுள்வேத வைத்திய நூல்களில் பரிந்துரைக்கப்படுகின்றன. சர்க்கரை மதுமேகசூரணம், அமுக்கிறாய் சூரணம் இலவங்காதி சூரணம், நிலபாவல் சூரணம் என்பனவும் நீரிழிவால் ஏற்படும் அழல் வாதத்திற்குத் தேத்தாங்கொட்டை லேகியம், வில்வாதிலேகியம் என்பனவும் பரிந்துரைக்கப் படுகின்றன. நீரிழிவில் ஏற்படும் புண்களுக்கு வங்க விரண கழிம்பு, அனுகம் வேர்த்தைலம், புங்கண் எண்ணெய் என்பன சிபார்சு செய்யப்படுகின்றன.

மேலும் அமிர்தாரிஸ்டம் அப்பிரக பற்பம் லோத்திராரிஸ்டம் என்பவற்றின் பயன்பாடு பற்றியும் சித்தாயுர்வேத நூல்களில் குறிப்பிடப்படுகின்றது.

இவை நோயாளரின் தன்மை, நோய் நிலைமை என்பவற்றிற்கேற்ப துறை சார்ந்த வைத்தியர்களால் வழங்கப்படுகின்றன.

இது தவிர சாதாரணமக்கள் பயன்படுத்தக் கூடிய மூலிகைகள் இவற்றினால் தயாரிக்கப்படும் குடிநீர் வகைகள் பற்றி மிக விரிவான குறிப்புக் களை தரும் சித்தமருத்துவம் இன்றும் நடை முறையில் பயனளிக்கும் வைத்திய முறையாகப் பின்பற்றப்பட்டு வருகிறது.

## மதுமேக மருத்துவத்தில் மூலிகைப் பயன்பாடு

சிறுகுறிஞ்சா, நாவல், ஆவாரை, நெல்லி, கடுக்காய், சீந்தில், வில்வம் என்பன இந் நோய் நிலமைக்குச் சிறந்த நிவாரணமளிக்கும் மூலிகைகளாகும்.

### சிறுகுறிஞ்சா :

சர்க்கரை கொல்லி என அழைக்கப்படும் சிறு குறிஞ்சாவின் மருத்துவப் பயன்பாடு நவீன மருத்துவ முறையில் 1930களில் இருந்து உணரப்பட்டு வந்துள்ளது. இதன் இலை இரத்தத்தில் இன்சுலின் அளவை அதிகரிக்கிறது. நமது



உடலிலுள்ள பி.செல் இன்சுலினை உற்பத்தி செய்கிறது. இதில் ஏற்படும் குறைபாடே இரத்தத்தில் குளுக் கோசை அதிகரிக்கச் செய்கிறது. இந்த செல்களின் எண்ணிக்கையை சிறு குறிஞ்சா அதிகரிக்கிறது. இதன் மூலம் இரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் குறைக்கிறது. இந்த செல்கள் அனைத்திற்கும் சிறுகுறிஞ்சாவில் இருக்கும் ஜிம்னிக் அமிலமே காரணியாகும். இது தவிர சிறு குறிஞ்சா குடலுறிஞ்சிகளில் இருந்து குளுக்கோஸ் உறிஞ்சப்படுவதைக் குறைக்கிறது.

(வளரும்)

## கடவுள் நீதான் அம்மா



என்னைப் பெற்றுப் பாலூட்டி
இனிய தமிழால் தாலாட்டி
கண்ணைப் போலக் காக்கின்ற
கடவுள் நீதான் என் தாயே

பத்துமாதம் சுமந்து பெற்று
பாரில் நானும் சிறப்படைய
கனிவாய் என்னைக் காக்கின்ற
கடவுள் நீதான் என்தாயே.

பிழைகள் தம்மைப் பொறுத்திட்டு
வையகத்தில் நான் உயர
கலைகள் எல்லாம் தந்திட்ட
கடவுள் நீதான் என்தாயே

தமிழருவி கவிதைப் போட்டியில் 3ஆம் பரிசு பெற்ற கவிதை.

நா.கீர்த்திகா
தரம் 9A யா/ இணுவில் மத்திய கல்லூரி

# ஆரோக்கியமான வாழ்விற்கு அத்தியாவசியமான யோகப்பயிற்சிகள்

S. யோகதாசன்

மனிதவாழ்க்கை எல்லைக்குட்படுத்தப்பட்டது. பிறப்பு முதல் இறப்புவரையுள்ள மனிதவாழ்வியல் சுழற்சியில் நாம் எதிர்கொள்ளும் சவால்களே அதிகம். இன்றைய தகவல் தொழினுட்பத்தின் வியத்தகு வளர்ச்சியினால் மனிதவாழ்க்கைக் கடமைகள் இலகுபடுத்தப்பட்டு விரைவுபடுத்தப்பட்டு வரும் பின்னணியில் மனிதனின் ஆரோக்கியத்திற்கு உலைவைக்கும் நோய்கள் ஆயுளைக் குறைத்து மரணம் வரை வாட்டுகின்றன. இதற்கு மனித வாழ்வு கட்டமைக்கப்பட்ட தன்மை மற்றும் பரம்பரைக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. எனவே தற்போதைய சூழலில் மனிதர்களைத் தாக்கும் நோய்களில் இருந்து விடுபட்டு ஆரோக்கியமாக வாழ்வதற்கான கருவியாக மக்களிடையே சித்தர்களால் உருவாக்கப்பட்ட யோகமுறைகள் எத்தகைய பங்களிப்பை நல்குகின்றன என்பது பற்றி இக்கட்டுரை அலச முற்படுகின்றது.

யோகமுறை என்பது ஒருவாழ்க்கை முறை. ஆதிகாலத்தில் வாழ்ந்த சித்தர்களால் உருவாக்கப்பட்டுத் தொகுக்கப்பட்ட பயிற்சி முறைகள் ஆகும். இப்பயிற்சி முறைகளில் சாதாரண மக்கள் செய்வதற்கான எளிய பயிற்சி முறைகளில் இருந்து சித்தர்கள்,யோகிகள் என்ற உயர்நிலையை அடைவதற்கான கடின பயிற்சி முறைகளும் இருக்கின்றன. நாம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு இலகுவான ஆசனப்பயிற்சிகளைத் தொடர்ந்து செய்து வரும்போது சகல சம்பத்துக்களையும் பெற்று வாழமுடியும்.

யோகத்தின் தந்தையாகக் கொள்ளப்படும் பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரத்தின் படி ஏராளமான ஆசனங்கள் இருந்தபோதும் நடைமுறை வாழ்க்கையில் நாம் செய்யவேண்டிய இலகுவான பயிற்சி முறைகள் பற்றியும் குறிப்பட்டுள்ளார். அவற்றை எப்படிச்செய்யவேண்டும் என்பதையும் செய்ம்முறை விளக்கத்தையும் அளித்துள்ளார். அவற்றை முறையாகப் பயின்று அன்றாட வாழ்வில் கடைப்பிடித்து வரும்பட்சத்தில் எம்மில் பல நல்மாற்றங்களை அவதானிக்கமுடியும்.

இன்றைய காலகட்டத்தைப் பொறுத்த வரையில் மனிதவாழ்க்கை பரபரப்புடன் நகர்ந்து வரும் இவ்வேளை மனிதன் தன்னைப்பற்றிச் சிந்திப்பதற்கே நேரம் இன்றி அலைகின்றான். இதனால் உடலில் பல எதிர்மறையான மாற்றங்கள் தோன்றுகின்றன. இவை உடலின் உட்கருவிகளின் சீரான இயக்கத்தைப் பாதிக்கச்செய்கின்றன. இதன்விளைவு புதுப்புது நோய்கள் பற்பல வடிவங்களில் எம்மைத்தாக்குகின்றன.

இன்றைய நவீன மருத்துவ விஞ்ஞானத் துறைக்கே சவால் விடும் அளவிற்கு வீரியம் மிகுந்த நோய்கள் நம்மத்தியில் உலாவுகின்றன. இதனால் மனிதவாழ்க்கை இடைநடுவில் தடைப்பட்டு உடல் இயக்கம் பாதிக்கப்பட்டு குறுகிய ஆயுளுடனே எமது வாழ்க்கையை நிறுத்திக் கொள்ளவும் ஏதுவாகின்றது.

மனித நாகரிகம் தோன்றிய காலத்திலிருந்த வாழ்க்கை முறைக்கும் இன்றுள்ள வாழ்க்கை முறைக்கும் இடையே பாரிய இடைவெளிகள் காணப்படுகின்றன. நேரத்தை மிச்சப்படுத்தல் என்ற போர்வையில் மனித வலுவின் பயன்பாட்டைக் குறைத்து இயந்திர சாதனங்களின் பயன்பாடு காத்திரமானஒரு இடத்தைப் பிடித்துள்ளது. இதனால் உடல் உழைப்புக்குறைந்து இலகுவில் நோய்கள் தாக்குகின்றன.

இங்கு நோய் என்று கூறும்போது முதல் வகை நோய்களான கிருமிகளால் தொற்றுகின்ற நோய்களை அதாவது காய்ச்சல் மற்றும் சுவாசம் சம்பந்தமான நோய்களைக் குறிப்பிடலாம்.

இரண்டாம் வகையான கிருமிகளால் தொற்றாத நோய்கள் என்று கூறும்போது நீரிழிவு, மாரடைப்பு, புற்றுநோய், பாரிசவாதம் முதலிய நோய்களைக் குறிப்பிடலாம்.

இன்றைய காலகட்டத்தில் கிருமிகளால் தொற்றாத நோய்கள் மனிதவாழ்விற்குச் சவாலாக அமைகின்றன. மனித வாழ்க்கைமுறையில், உணவு முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் இத்தகைய நோய்களுக்கு மூலகாரணங்களாகும் (Cause of root). இத்தகைய நோய்களில் இதய நோய்கள், நீரிழிவு நோய்கள், சிறுநீரக நோய்கள் தற்போது மனிதர்களை மிக வேகமாகத்தாக்கி வருகின்றன. வைத்தியசாலைப் புள்ளிவிபரங்களின் படி மேற்படி மூன்று நோய்களும் முதல்நிலை நோய்களாக அதிகமக்களைப் பீடித்துள்ளதாக அறிய முடிகின்றது. அத்துடன் புற்றுநோய்கள் மற்றும் பாரிசவாதம் போன்ற நோய்களும் அடுத்த இடங்களில் காணப்படுகின்றன. இதனால் நோய்த்தாக்கத்திற்கு உட்படுத்தப்பட்டவர்கள் மாத்திரமின்றி அவரின் உறவினர்கள் கூடப் பெரிதும் சிரமங்களிற்குள்ளா கின்றனர்.

எனவே இத்தகைய நோய்களிலிருந்து எம்மைக்காப்பாற்றுவதற்கு யோகப்பயிற்சிகள் கை கொடுக்கின்றன. மனித உடல்களில் காணப்படுகின்ற



கழிவுப்பொருட்களை உரியமுறையில் வெளியேற்றி அனுசேபத்தொழிற்பாடுகள் (meta bolism) தடங்கலின்றி இடம்பெறுவதற்கு யோகாசனங்கள் உதவுகின்றன. குருதிச்சுற்றோட்டத்தொகுதியின் சீரான இயக்கத்திற்கும் இரத்தத்தை நன்கு சுத்திகரித்துத் தேவையான உள்ளுறுப்புகளுக்குத் தேவையான இரத்தத்தைச் சேர்ப்பதற்கும், நரம்புத்தொகுதி, எலும்புத் தொகுதி என்பன பலமடைந்து சிறப்பானமுறையில் தொழிற்படவும் இவை உதவுகின்றன. அது மட்டுமன்றிச் சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்புடைய உறுப்புக்கள் இனப்பெருக்கத் தொகுதிகளின் உறுப்புக்கள் நல்ல தொழிற்பாட்டுக்கும் உதவுகின்றன. நாளமில்லாச் சுரப்பிகளின் சீரான தொழிற்பாடுகள் இந்த யோகப்பயிற்சிகள் மூலம் ஏற்படுத்தப்படுகின்றன. உடலில் உள்ள மிகப்பெரிய சுரப்பியான கல்லீரல் மற்றும் கபச்சுரப்பி, பீனியல், பியூற்சிக் சுரப்பி, தைரோயிட்சுரப்பி, அட்ரீனல் சுரப்பி முதலிய முக்கியமான சுரப்பிகளின் தொழிற்பாட்டினால் உடலியற் தொழிற்பாடுகளின் சமனிலை பேணப்படுகின்றது.

ஆக, மனித குலவரலாற்றில் நோயும், வாழ்க்கை முறையும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ள நிலையில் நம்முன்னோர்களால் பேணப்பட்ட யோகப்பயிற்சி முறையில் நல்ல குருவின் வழிகாட்டலுடன் கிரமமாகப் பயிற்சி செய்துவந்தால் எம் உடலில் உடல்ரீதியாகவோ அல்லது உள ரீதியாகவோ எந்தவித நோய்களும் இன்றி ஆரோக்கியமாக வாழலாம்.

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

## உறுதி

பறவையாய்ப் பறந்து
பலவற்றிலும் சிறந்து
சுடரொளியைப் பரப்பிட
சுகமாய் எழுந்துநின்றேன்
குரல்களாலல்ல –இலட்சியக்கனவுகளால்

கேசிகா தனஞ்சயன்
தரம்-8
யா/உடுவில் மகளிர் கல்லூரி
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

# ஊர் பழக ஆனால் ஆட்களும் நடத்தைகளும் புதுசு

"பாலா, ஊருக்குப் போய் இருவாரங்கள் நின்றதாக கூறினார்கள். எப்படி ஊர்ப்பக்கம்? உங்களுக்கு அதாவது வெளிநாட்டில் இருபத்திரண்டு வருடங்கள் இருந்து விட்டு ஊருக்கு போனனீங்கள் அதுதான் கேட்கிறேன். இப்ப ஊரைப்பற்றி அவ்வளவு திறமாக ஒருவரும் கதைப்பதில்லை" என்று நவரத்தினம் கேட்டார். நவரத்தினம் எழுபத்துமூன்று வயதுடையவர். ஓய்வு பெற்ற உதவி வைத்தியர். அவர் யாழ்ப்பாணத்தை விட்டுக் கொழும்பில் வாழ்ந்து வருகிறார். அவருடைய பேரனார் கொழும்பில் குடியேறியவர். இவரது மனைவி யாழப்பாணத்தில் வசாவிளான் பகுதியைச் சேர்ந்தவர். இவரது அடி அளவெட்டி. இவரின் தாயாரின் இடம் வடலியடைப்பு. பாலா இவரின் ஒன்று விட்ட தம்பி. இருவரின் தாய்மார் சகோதரிகள்.

"பாலா சரியாக மனவருத்தப்படு கிறான் தம்பி, நவம்" என்றார் நவரத்தினத்தின் தமக்கையார் நாகரத்தினம்.

"ஏன், என்ன நடந்தது பாலா?" என்றார் நவத்தார். "இல்லை யண்ணை நான் நினைத்த மாதிரி அங்கை ஒரு நிம்மதியுமில்லை. யாழ்ப்பாணமும் இப்ப வெளிநாட்டு வாழ்க்கை மாதிரித் தான் சில விடயங்களில் இருக்கு" என்றார் பாலா.

"நீர் தொண்ணூறு மட்டில்தான் கொழும்புக்கு வந்த நீர் என்று நினைக்கிறேன்" எனறார் நவம்.

"இல்லை இல்லை எண்பத்தெட்டில் வந்து அடுத்த வருடம் லண்டனுக்குப் போய், பின்பு தொண்ணூறில் கனடாவுக்கு போனனான். அப்ப சனங்களின் போக்கு வேறு. இப்ப வேறு"

"பாலா நீர் ஒன்றை யோசிக்கோணும். யாழ்ப்பாணச் சனம் பூச்சிய நிலைக்கு வந்து விட்டார்கள். இப்ப நீர் பழைய பெருந்தன்மைகளை, கனவான் நடத்தைகளை எதிர்பார்க்க முடியாது. எல்லா விதமாகவும் எல்லாரும் சுவடி போட்டுவிட்டார்கள். வடிவாய் மொட்டையடித்துவிட்டு மீளக்கட்டியெழுப்பப் போகிறார்களாம். அந்தச் சனங்களுடைய மனதில் ஒருவிரக்தி இருக்கத்தான் செய்யும்" என்றார் நவம்.

"அண்ணை நான் நீங்கள் சொன்ன விடயத்தை மறுக்கேல்லை. ஆனால் எனது அனுபவங்களைக் கூறுகிறேன் கேளுங்கோ. நான் வடலியடைப்புக்குப் போனேன். போனதும் தம்பி சண்முகநாதன் காம்புக்கு போய்த் தற்காலிகமாக அனுமதி வாங்கித் தந்தார். சனம் கள்வர் பயத்தில் வாழ்கிறார்கள். நான் வெளிநாடு என்று ஊருக்கு சொல்லவில்லை. கொழும்பு என்று தான் சொன்னனான். வெளிநாடு என்றால் கப்பம் கேட்டால் என்ன செய்வது? கள்வர் வந்தாலும் என்று சண்முகம் பயப் பட்டார். நான் அங்கு நின்ற போது பக்கத்து வீட்டுக்காரியின் சங்கிலி பாதையில் வைத்து அறுக்கப்பட்டது. மாறி மாறித் தனியே இருக் கும் ஆண்களிடம், பெண்களிடம் கொள்ளை என்று பத்திரிகையில் படித்தனான். மூன்று கொலைகளும் நடந்து விட்டன"



"எல்லாம் ஊர் ஆட்கள் தானோ? இல்லை வேறு இடத்து ஆட்களோ? என்றார் நவத்தார்.

'அது தெரியாது. இப்ப பாருங்கோ ஹெல்மட் போட்டால் யார் என்று அறிய முடியாது, காலம், கயவருக்கும் கள்வருக்கும்தான் சாதகம். கடன் பட்டவர்கள் ஹெல்மெட் போட்டுக் கொண்டு அச்சம் இல்லாது திரியலாம். அது பெரிய வசதி. ஊரில் இடம் பெயர்ந்தவர்கள் தான் அதிகம். சொந்த ஊரார் வெளிநாட்டிலும், கொழும்பிலும்தான் வசிக்கின்றார்கள்"

"ஊரில் பல பேர் வெளிநாட்டில் காசு சும்மா கிடைக்கிற மாதிரியும், ஏதோ சுகமாய் இருந்து இலகுவாய்ச் சம்பாதிக்கிற மாதிரியும் வெளிநாட்டிற்கு போனவர்கள் தராளமாகப் பணம் வைத்திருப்ப தாகவும் தான் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள்" என்று நாகரத்தினம் சிறிது மனக் கசப்புடன் கூறினர்.

"சரியாய்ச் சொன்னீர்கள் அக்கா நீ கோடீஸ்வரனாய் இருக்கின்றாய் என்று தம்பி ஐயா சொன்னவர் என்று

பரஞ்சோதி மாமி எனக்குச் சொன்னா, எப்படி இருக்கு கதை" என்றார் பாலா.

"யார் அந்த பரவாதி பிடித்த கிழவன் தம்பியையாவோ? அது பெறுமதி பற்றியும், சேமிப்புப் பற்றியும் தான் கதைக்கும். உது அவற்றையொரு ஊகம். மாமீட்டத் தேத்தண்ணி வாங்கிக் குடிக்க விட்ட கதையாயிருக்கும்" எனறார் நவம்.

"தம்பியையா மாதிரி வேலையற்ற எத்தனையோ ஆட்கள் இப்பவும் ஊரில் இருக்கிறார்களோ? வெளிநாட்டவங்கள் ஏதோ மூட்டை மூட்டையாய் பணமும், கட்டிகட்டியாய்த் தங்கமும் வைத்திருக்கின மென்று தான் அவர்களுடைய முழு எண்ணமும். மனிதர் படுகிற பாடு அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் படுகிறபாட்டில் அரைப்பங்கு ஊரிலபட்டால் லட்சாதிபதியாய் வாழலாம்" என்றார் நாகரத்தினம்.

"அது தான் தம்பி. கரன் சொன்னவன் நாங்கள் தேர்த்திருவிழாவுக்கு காசு அனுப்ப எவ்வளவு பாடுபட்டு மேலதிகமாக ஒரு சில்லறை வேலை செய்ய வேண்டியிருக்கு. அது அங்கே இருக்கிறவர்களுக்குத் தெரியாது. மணியம் சித்தப்பா எழுதியிருக்கிறார் 'நீங்கள் கோவிலுக்கு லட்சக் கணக்கில் பணம் அனுப்பி ஊரவைக்கு விருந்து வைக்கிறீர்கள். அப்பனுடன் கூடப்பிறந்த எனக்கு ஒரு லட்சம் ரூபா அனுப்பப் பெரும்பாடுபடுகிறீர்கள் என்று. இது தான் நிலைமை. சண்முகநாதனுக்கு எனது நிலை வடிவாகத் தெரியும். என்ர காசும் அவருக்குத் தேவையில்லை. ஆனால் மற்றவர்கள் பெரிதாகத்தான் என்னிடம் எதிர்பார்த்தார்கள்" என்றார் பாலா.

மேலும் பாலா "கோயில் நடைமுறை, கலியாணவீட்டு நடைமுறை,ஏன் செத்தவீடு கூட காலத்திற்குத் தக்கதாக மாறிவிட்டது. சில புதிய கலாசாரங்கள் புகுந்து பழைய முறையான சில விடயங்கள் கைவிடப்பட்டுவிட்டன. மாப்பிள்ளைத் தோழன் தலைப்பாகை கூட இல்லாது கலியாணம் நடக்குது. மணவறையைச் சுற்றி வீடியோக்காரர்கள் தங்கள் அடுக்குகளுடன் நிற்பார்கள். நாங்கள் அவர்களைப் பார்க்க வேண்டியது தான். சில கலியாண வீடுகளில் ரீவி வைத்துக் காட்டுகிறார்கள். சமையல் இல்லை. எல்லாம் ஓடர், பந்தல் ரெடிமேற், தலைப்பா வைத்தல், கடுக்கன் பூட்டுதல் எல்லாம் இல்லை. பாபர், டோபி, ஒருத்தருக்கும் வேலை யில்லை. ஆண்கள் பெண்களின் விஷேடமாக இளம் பரம்பரையினரின் உடைகள் பலவிதம். வெளிநாடு மாதிரித்தான் இருக்கு. சிறிது காலத்தில் யாழ்ப்பாண வாசனையே அற்றுவிடும். இதற்கிடையில் சிலர் கலாசாரம் கலாசாரம் என்று பீத்திக் கொள்கிறார்கள். பெரிய கலாசார மாற்றமோ அல்லது அழிவோ என்று சொல்ல முடியவில்லை. எமது ஊரின் நிலமை இப்படியாக வந்துவிட்டது என்பது பற்றிக் கவலைதான். ஆனால் புதிதாகத் தோன்றுதலும் பழையன மறைதலும் காலத்தின் கோலம். அதை என்னைப் போன்ற வர்கள் தடுக்க முடியுமா?" என்றார் மிகவும் கவலையுடன், வெறுப்புடனும்.

**பா. பாலச்சந்திரன்**
**மயிலணி, சுன்னாகம்.**

"தம்பி பாலா, நான் மனதை எப்பவோ இரும்பாக்கிட்டேன். முன்பு இராமநாதன் கல்லூரிக்குத் தாவ ணியுடன் தான் செல்ல வேண்டும். என்னை இதற்காகத் தான் பப்பா யாழ்ப்பாணத்திற்கு அனுப்பினவர்."

"உந்தக் கதையைவிடு. உதைக் கதைத்தால் எனக்குச் சாப்பாடும் கிடையாது. வேண்டாம் விடு. யாழ்ப்பாணத்திலே ரியூசனுக்குப் போகிற பிள்ளை களின் சைக்கிள், கலாசாரம், உடை, நடத்தை, கதை எல்லாம் பற்றி உடுவில் பெரியவள் வரும் போது சொல்லுவாள்." என்றார் நாகரத்தினம்.

"இவாவுக்கும் அவாவுக்கும் உது தான் கதை பாலா" என்றார் நவம்

"உது தான் கதைப்பதில்லை. இவர் இப்ப கொழும்புக் கனவானாய் விட்டார். எல்லாம் பெரிய மாற்றம். லண்டன் பரிசைப் பற்றித்தான் கொழும்பில் கதைக்க வேண்டுமோ என்ன? இன்னும் காலில செம்பாட்டு மண்ணின் சிவப்பு போகேல்ல" என்றார் கிண்டலும், எரிச்சலும் கலந்த தொனியில் நாகரத்தினம்.

"இன்னும் பழைய நிலை வரவில்லை. சுதந்திரம் கட்டுப்பாட்டுடன் தான் இருக்கு. எல்லா இடமும் போகமுடியாது. அண்ணியின் ஊர் வசாவிளான் எல்லாம் கட்டுப்பாடுதான். எப்ப விடுவார்களோ தெரியாது, அங்கு போய் மக்கள் இருப்பார்களோ எனவும் தெரியாது" என்றார் பாலா.

"பாலா அண்ணிக்கு விசர்தான் தான் வரும் ஊரை நினைத்தால், பாவம் தான் சாகிறதற்கிடையில் தங்களின் வீட்டுக்குப் போய்ப் பலாப்பழம் எடுத்து வரவேணும் எண்டு சொல்லுவா இப்ப பலா நிற்குதோ அல்லது அதே இடத்தில் அரசமரத்தின் கீழ் புத்தர் தான் இருக்கிறாரோ தெரியாது". என்று சற்றுக் கவலையுடன் கூறினார் நவம்.

"பாலா கோயில் திருவிழாக்களெல்லாம் எப்படி?" என்றார் நவம்.
"அங்கை ஏன் போக வேணும்? கொழும்பில் இல்லாத சின்னமேளமே அங்கை இருக்கு. அதெல்லாம் தம்பி நவம் எழுபதுகளுக்கு பிறகு மெல்லமெல்ல இல்லாமல் போய்விட்டது. நான் வேணுமென்றால் ரீவியில் பார்ப்பன் தெரிகிறதே?" என்றார். நாகரத்தினம் தான் அக்கா என்ற தொனியில்.

"அக்கா இப்ப கோயில்களில் பகல் திருவிழா எல்லாம் மத்தியானம் முடிந்துவிடும். இரவுத் திருவிழா நடக்கும். முந்தின மாதிரிப் பெரிசா இல்ல. சில இடங்களில் மெல்லிசைக் கோஷ்டிகள் பிடிப்பார்கள். சந்நிதி, நல்லூர், வல்லிபுரம், மாவிட்டபுரம், நயினாதீவு போன்ற பெரிய கோயில்களுக்குத் தான் சனம் போகும். கந்தபுராணப் படிப்பு, சித்ரபுத்திரர் கதை, திருவாதவூரடிகள் புராணப் படிப்பு எல்லாம் சரியாக் குறைந்து வருகுது. அர்ச்சனை பண்ணும் முறைகளெல்லாம் மாறி விட்டன. கோயில்கள் ஒரு வர்த்தக அடிப்படையில் தான் இயங்கி வருகின்றன. அதற்கும் வழக்குகள் நடக்கின்றன. கோடு, கச்சேரி என ஏறியிறங்கி திரியினை" என்றார் பாலா.



"வெளிநாட்டுக் காசு யாழ்ப்பாணத்தில கோயில்கள் சிறப்பாக நடக்கப் பெரிய உதவி செய்கின்றது. சிலர் இதை நம்பித்தான் வாழ்கிறார்கள். சில குடும்பங்கள் நல்லாய் வந்திருக் கின்றன. சிலர் கஷ்டப்பட்டு அனுப்ப வீண் செலவு செய்பவர்களும் இருக்கிறார்கள். ஆனால் அடுத்த தலைமுறை காசு அனுப்பும் என்பதற்கு என்ன உறுதியுள்ளது? இதுவும் கொஞ்ச காலத்திற்கு தான்" என்றார் நவம்.

"அதுசரி, நான் எனது குடும்பத்தையே கூட்டிக்கொண்டு சென்றுவிட்டேன். சில பிள்ளைகள் தாய், தந்தைக்கு அனுப்புகின்றனர். ஆனால் பேரப்பிள்ளைகள் அனுப்புமா? என்பது கேள்விக் குரியது தான்" என்றார் பாலா.

"மெய்யே 'சிலர் திரும்பி வந்து யாழ்ப்பாணத்தில் குடியேறப் போகிறார்கள் அங்கை கலாசாரம் விரைவில் அழிந்துவிடும். வெளிநாட்டு விரும்பாத விடயங்கள் வந்துவிடும்' என்று எனது நண்பர் ஒருவர் கூறினார். என்ன மாதிரி?'' என்றார் நவம்.

"யார் அந்தச் சின்னத்துரை லூசோ சொன்னது? அது தான் உனது நண்பர்" என்றார் நாகரத்தினம்.
"அக்காவுக்கு அவனைப் பிடிக்காது. அவன் ஒரு நல்ல மனிதன்." என்றார் நவம்.
''திரும்ப வருவதென்பது நடைமுறைக்குச் சாத்தியப்படாது. என்னை நாகேஸ்வரி கேட்டா 'அண்ண இங்கை வந்து இருக்கிற யோசனை இருக்கோ 'என்று" என்றார் பாலா.
''எந்த நாகேஸ்? மூன்று நாகேசுகள் அங்கை இருக்கினை. நீ யாரைச் சொல்கிறாய்?" என்று நாகரத்தினம் துருவிக் கேட்டார்.
"அது தான் சித்தியின் மகள்"

"அப்ப தங்கச்சி நாகேஸ் என்று சொல்லேன். உனக்கு முறை கூட மறந்து போச்சுதோ?'' என்று நாகரத்தினம் சிறிது எரிச்சலுடன் கேட்டார்.

"நான் மறந்து போனேன். அந்தப் பிள்ளைகளின் வாழ்க்கை முறைவேறு. யாழ்ப்பாணத்து வாழ்க்கை முறைவேறு அதுகள் இங்கை வந்து சமாளிக்க முடியாது. யாழ்ப்பாணம் போகிற போக்கைப் பார்த்தால் இன்னும் பத்து வருடத்தில் வெளிநாட்டை விட மோசமாகவரும் போல இருக்கு. என்றாலும் யாழ்ப்பாணத்திலை பொம்பிள தூக்கிற கலாசாரம் தொண்ணூறுகளில் நடந்தது தானே. இந்த இராக்கத மணம் அங்கு இல்லை. விரும்பினால் அதை ஒருவரும் தடை செய்யமுடியாது. யாழ்ப்பாணத்தில் என்ன நடைபெற வில்லை. எல்லா விதமான பாலியல் நடத்தைகளும் இருக்குத்தானே. இங்கு வருவதில் நடைமுறை சிக்கல்கள் நிறைய இருக்குது. அண்ணை" என்று தனது உண்மையான நிலையைக் கூறினார் பாலா.
"அப்ப நீங்கள் இனி கனடா வாசிகள்தான்" என்றார் நவம்.
"மெய்தான். இப்ப ஊர் பழசு ஆனால் ஆட்களும் நடத்தைகளும் புதுசு" என்றார் பாலா. மணியும் எட்டாக நவம் புறப்பட்டார். பாலா எதையோ இழந்துவிட்ட மாதிரியும், அதை மீண்டும் பெற முடியாத மாதிரியும் ஒரு வித மனநிலையில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தார்.

# தமிழ்த் திரைப்படப் பாடல்களால் நமக்கு ஏற்படுவது நன்மைகளா? தீமைகளா?

21ஆம் நூற்றாண்டான இன்றைய கால கட்டத்தில் மனிதனுடைய பொழுதுபோக்குத் துறைகளில் திரைப்படத் துறையானது மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இந்தத் திரைப்படங் களானவை பாமர மக்கள் முதல் பண்டிதர்கள் வரை தமக்கென ஒரு சிறப்பான இடத்தை பிடித்துள்ளன. இந்தத் திரைப்படங்களில் திரைக் கதைக்கு இணையான சிறப்பிடத்தைத் திரைப்படப் பாடல்கள் பெற்றுக் கொள்கின்றன. இத்திரைப்படப் பாடல்கள் மக்களுடைய மனதில் நீங்கா இடம் பெற்று உள்ளன.

இந்தத் திரைப்படப் பாடல்கள் மக்களுக்குச் சிறந்த மகிழ்வளிப்பனவாகவும், அறிவூட்டுபவனாகவும் இருக்கும் அதே சமயத்தில் சில திரைப்படப் பாடல்கள் மக்களைத் தீய வழியில் இட்டுச் செல்வனவாகவும் அமைகின்றன. எனவே தான் தமிழ் திரைப்படப்பாடல்கள் மக்களுக்கு நன்மை அளிக்கின்றனவா? தீமை அளிக்கின்றனவா? என்ற கேள்வி பலர் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது. அதனால் இந்த விடயத்தைப் பற்றி ஆராய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

தமிழ்த் திரைப்பட உலகில் திரைப்படப் பாடல்கள் மக்களுடைய வாழ்வுடன் பின்னிப் பிணைந்தனவாகவும், அவர்களின் வாழ்வாதார நிலையை எடுத்துக்காட்டுவனவாகவும், அமைந்திருக் கின்றன. மக்களிடையே சாதி வேற்றுமை என்ற பாகுபாட்டை நீக்க வேண்டும் என்றும் நாம் எந்தத் தொழிலைச் செய்தாலும் அதனைத் தெய்வமாக மதித்துச் செய்ய வேண்டும் என்றும் கூறி நிற்கின்றனர்.

அதற்கு சிறந்த உதாரணமாக "சந்திரமுகி" என்ற படத்தில் வருகின்ற "தேவுடா தேவுடா" என்ற பாடல் குறிப்பிடத்தக்கது அதிலே "எந்தத் தொழில் செய்தால் என்ன செய்யும தொழில் தெய்வம் என்று பட்டுக் கோட்டை பாட்டில் சொன்னாரே" என்ற வரிகள் மனித வாழ்வின் யதார்த்தத்தை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. உலகில் அனைத்துத் தொழில்களும் ஏதோ ஒரு வகையில் முக்கியத்துவம் பெறுகின்றன. என்பதை இப்பாடல் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுவதனூடாக மக்களுக்குச் சிறந்த கருத்தை வலியுறுத்துகின்றது.

தோல்வியால் துவண்டு இருக்கும் மனிதனையும் துள்ளியெழ வைத்து வெற்றிப் படிகளை நோக்கி பயணிக்க வைக்க முடியும் என்பதையும், இசையால் எந்தவொரு மனிதனையும் மகத்தான சாதனை படைக்க வைக்க முடியும் என்பதையும், உணர்த்துவதில் தமிழ்த் திரைப்படப் பாடல்கள் முக்கிய இடத்தினை வகிக்கின்றன.

"ஆட்டோ கிராப்" படத்தில் வரும் "ஒவ்வொரு பூக்களுமே" என்ற பாடலில்" தோல்வி இன்றி வரலாறா? துக்கமென்ன என் தோழா" என்ற வரிகள் மக்களைத் தோல்வியைத் துச்சமாகத் மதித்துத் தம்முடைய இலட்சியத்தை நோக்கிப் பயணிக்க வைப்பதில் முக்கிய இடம் வகிக்கின்றன. இவ்வாறாக "எந்திரன்" படத்தில் சில திரைப்படப் பாடல்களும் விஞ்ஞானக் கருத்துக்களை வலியுறுத்துவதாக உள்ளன. "இதென்ன நீயூட்டனின் மூன்றாம் விதியா, ஓடுகின்ற தண்ணியில் தான் ஒட்சிசன் அதிகம்" போன்ற வரிகள் மக்களுக்குப் பல அறிவியற் கருத்துக்களை வலியுறுத்து கின்றன.

"காலுக்குச் செருப்பு எப்படி வந்தது முள்ளுக்கு நன்றி சொல்லடி, தவறுகள் பண்ணித் திருந்திய பிறகுதான் நாகரிகம் பிறந்ததடி" என்ற வரிகள் மனிதனுடைய நாகரிக வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதாகவும் அமைகின்றன. இவ்வாறாகப் பல நன்மைகளை நாம் எடுத்துக் கூறிக் கொண்டே சொல்லலாம்.

நாணயத்திற்கு இருபக்கங்கள் இருப்பதைப் போலத் தமிழ்த் திரைப்படப் பாடல்கள் எமக்கு பல நன்மைகளைத் தருகின்ற போதிலும் சில தீமைகளையும் தருகின்றன. இன்றைய தமிழ்த் திரைப்படப் பாடல்கள் புரியாத பல வேறு மொழிகளில் பாடப்படுகின்றன. ஒரு முக்கிய அம்சமாக உள்ளது. இதனை "தமிழ்ப்படம்" என்ற படத்திலே உள்ள "ஓமகசியா ஓமகசியா...." என்ற சீன மொழி பாடல் மூலம் கண்கூடாகக் காண முடிகின்றது. மேலும் "அலக்ஷா அலக்ஷா..." என்ற பாடலும் வேறு பல மொழிகளில் உள்ளதை காணமுடிகின்றது.

ஏனைய சில பாடல்கள் இன்றைய இளைஞரைப் பல தீய வழிகளில் இட்டுச் செல்வது தமிழ் திரைப்ப பாடல் துறைக்கு ஏற்பட்டுள்ள ஒரு பெரிய துரதிஷ்டம் ஆகும். ஆபாசப் பாடல் காட்சிகள், அதீத கற்பனைகள், அளவு மீறிய ஆசைகள், என்பன இளைஞர்களுக்கு வீணான பல விபத்துக்களை ஏற்படுத்துவனவாய் உள்ளன.

இதனால் சரியான தீர்மானங்களையும், முடிவுகளையும் எடுப்பதற்குத் தடையாக உள்ளது.

இவ்வாறாகத் தமிழ்த் திரைப்படப் பாடல்கள் மக்களை வாழ வைக்கின்றனவாகவும், வீழ வைக்கின்றதாகவும் உள்ள போதும் "வேப்பம் பூவினுள்ளும் சிறு தேன்துளி உள்ளதடா" என்ற பாடல் வரியில் உள்ளதைப் போல நாமும் பல தீமைகளுக்குள்ளும் இருக்கின்ற நன்மைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். மக்களுடைய வாழ்வில் நன்மை, தீமை இரண்டும் கலந்துள்ளன. எனவே நாம்

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று"

என்ற திருவள்ளுவரின் திருக்குறள் கருத்துக்களுக்கு ஏற்ப நன்மைகள் பல இருக்கின்ற போது தீமைகளை நாடிச் செல்லாது எமக்கு தேவையான நன்மைகளை எடுத்துக் கொள்வோமாக.....

ச.தரண்யா 11A
யா/மகாஜனாக் கல்லூரி
(தமிழருவி நடாத்திய கட்டுரைப் போட்டியில் முதற்பரிசை வென்ற கட்டுரை)

---

## விருது கிடைத்தது! வாய்ப்புக் கிடைக்கவில்லை!

புலம் பெயர் தமிழர்களின் முதலீட்டு ஊக்குவிப்பை வேண்டி நிற்கும் இளம் கண்டுபிடிப்பாளர்.

உள்ளூர் வளத்தைக் கொண்டு
உலகத்திற்கு நிகரான
புத்தாக்கங்களைப் படைத்த
குலசிங்கம் நிரோஜன்



கே.கே.எஸ் வீதி இணுவில் என்ற முகவரியில் வாழ்பவர் குலசிங்கம் நிரோஜன். யா/ இணுவில் மத்திய கல்லூரி மாணவன். இருபது வரையான புதிய பயனுள்ள கண்டுபிடிப்புகளுக்குச் சொந்தக்காரன் பல கண்காட்சிகளில் தனது கண்டுபிடிப்புக்களைக் காட்சிப்படுத்தி விருதுகள் வென்றவர். அண்மையில் உலக விஞ்ஞான தினத்தின் போது (2010) தொழில் நுட்பமும் ஆராய்ச்சிக்குமான அமைச்சினால் இவருக்கு இளங்கண்டுபிடிப்பாளர் விருது வழங்கப்பட்டது. இந்த அமைச்சின் யாழ். மாவட்ட இணைப்பாளர் நடராஜா தமிழ் அழகன் யாழ். கச்சேரியில் இவ்விருதை வழங்கிக் கௌரவித்தார்.

இவரது புதிய கண்டு பிடிப்புச் சாதனங்கள்:

1. தானாகவே சூரியனை நோக்கித் திரும்பும் சோலர்கருவி (கல்வி அமைச்சின் இலங்கைக் கண்டுபிடிப்பாளர் சபையிடமிருந்து விசேட தரச் சான்றிதழ் பெற்றது)
2. இலகுவான அளவீட்டுக் கருவி
3. தொட்டி நீர் மட்டத்திற்கேற்ப மின் மோட்டாரை இயக்கவும், நிறுத்தவும் உதவும் கருவி
4. சீமெந்து கலவைக் இயந்திரம்
5. சப்பாத்தின் நடவிசையினைப் பயன்படுத்தி போன் சார்ஜ் செய்தல்
6. றெஜிபோம் கட்டர்
7. கெல்மற்றினைப் பயன்படுத்தி போன் சார்ஜ் செய்தல்
8. இலகு ரக 5A, 13A, 15A பிளக்கின் சுவிச்
9. வீதிப் போக்குவரத்தை இலகுபடுத்தி பொலிசாருக்கு உதவ பயன்படும் கருவி
10. திருட்டைக் கண்டு பிடிக்கும் தொலைத் தொடர்பு தானியங்கி தகவல் வழங்கி
11. வேலை நேரங்களில் தூசு துணிக்கைளில் இருந்து பாதுகாக்கும் தலைக் கவசம்
12. துவிச்சக்கரவண்டி வடிவிலான நீர் இறைக்கும் நீர்ப்பம்ப

இத்தனை புதிய பொருள்களைக் கண்டுபிடித்தும் அவற்றைப் பெருமளவில் உற்பத்தி செய்து மக்களுக்கு வழங்கக் கூடிய நிதிவளமற்ற ஏழைக் குடும்பத்தை சேர்ந்தவர். தமது கண்டுபிடிப்புக்களைத் தொழில் ரீதியாக உற்பத்தி செய்ய, முதலீட்டு உதவி செய்து இணைந்து செயற்படக் கூடிய புலம் பெயர் தமிழர்களிடமிருந்து இவர் உதவியை வேண்டி நிற்கின்றார்.

# பயணங்கள் முடிவதில்லை

A9 வீதி, 769 இல் கொடிகாமம் பேரூந்து யாழ்ப்பாணம் நோக்கிய பயணம். யன்னலோர இருக்கை. வீதியை நோக்கியவாறு நான். இது பெரும் வெற்றி தான். எது? இந்த யன்னலோர இருக்கை. நம்மவர்களோடு, தென்பகுதி மக்கள், வெளி நாட்டவர்கள் என்று நிறைந்திருக்கும் சன நெரிசலில் பேரூந்தில் இருக்கை கிடைப்பதென்றால் அதுவும் யன்னலோர இருக்கை கிடைப்பதென்றால், அது சாதாரண வெற்றியல்ல. சாவகச்சேரிப் பேரூந்து தரிப்பிடத்தில் பேரூந்திலிருந்து இறங்கியவர்களை விடவும் ஏறியவர்களின் தொகையே அதிகம். அந்த நெரிசலிலும், ஒருவாறு ஏறி இதோ யன்னலோர இருக்கையில் அமர்ந்து விட்டேன். எனக்குள் ஒரு பெருமிதம். ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்ற பெருமை. பாடசாலை, பல்கலைக்கழக நாட்களில் ஓட்டம், உயரம் பாய்தல், நீளம் பாய்தல், போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றது இப்போது நன்றாகவே கை கொடுக்கிறது.



யன்னலோரம் அமர்ந்து வீதியைப் பார்க்கிறேன். கைதடி, செம்மணி, அரியாலை ஊடாக பயணிக்கிறது பேரூந்து. வீதியின் இருமருங்கும் என்னைத் தாண்டி ஓடுகின்றன. விளம்பரப் பதாதைகள். எத்தனை வண்ண, எத்தனை வகையான விளம்பரங்கள். விளம்பரங்கள் என்பவை வியாபாரத்திற்கு மிக முக்கியமானவை என்பதை மறுப்பதற்கில்லை. வியாபார வளர்ச்சிக்கு விளம்பரங்கள் அதன் கவர்ச்சியான வாசகங்கள் காரணமாக அமைகின்றன. ஆயின், அங்கும் மொழிப் பிரயோகம் சரியான விதமாக அமைய வேண்டியது அவசியமாயிற்றே. எழுத்துப் பிழை, சொற்பிழை, இலக்கணப்பிழை என்று எத்தனையோ பிழைகள். இவற்றையெல்லாம் சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டாமா?

ஊடகத்துறையை இவ்விடத்தில் சுட்டிக் காட்ட வேண்டிய தேவை உள்ளது. பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி முதலானவைகள் தம் செய்தித் தகவல்களை வெளியிடுவதில் அதிக கவனம் செலுத்துகின்றன. அவற்றின் தொழில் தர்மம், கடமை அது. ஆயின் அவைகளும் மொழி மீது கவனம் செலுத்த வேண்டியது அவசியமல்லவா? எழுத்துப்பிழை, உச்சரிப்புப்பிழை எனப் பல பிழைகள். அதிலும் தொலைபேசி நிகழ்ச்சிகளின் உரையாடல்களில் தான் இந்த உச்சரிப்புத் தவறுகள் அதிகமாகி விட்டன. தமிழ் என்ற சொல்லையே தமில் என உச்சரிக்கும், நாகரிகம் என்ற போர்வைக்குள்.

பத்திரிகைகளும் பொறுப்பின்றி அலட்சியப் போக்கைக் கொண்டிருக்கின்றன. 10.10.2011 திகதி xU ehspjo; mjpy; xU nra;jp "ஒரு இளைஞனொருவன்......." எனத் தொடர்கிறது. இது சரியா? இலக்கணப்படி நோக்கின், உயிரெழுத்துக்களின் முன் 'ஓர்' என்ற சொல்லே வரும். எனவே இளைஞன் 'இ' முன் 'ஓர்' என்பதே வரவேண்டும். சரி இலக்கணத்தைக் கவனிக்காது விடினும் 'ஒரு இளைஞன் ஒருவன் என்று, 'இளைஞன்' என்ற சொல்லின் முன்னும் பின்னும் ஒருவனைப் பயன்படுத்தலாமா? நொந்து கொண்டே யன்னலோரக் காற்றைச் சுவாசிக்கின்றேன். வீதியோரமாகக் கண்ணில் பட்ட ஒரு பொருளுக்கான விளம்பரம். "குரைவற்ற தரம்" எனும் வார்த்தை. தமிழின் தரத்தைக் குறைப்பதற்காய்த் தோன்றுகிறது. எத்தனையோ கோடிக் கண்களில் தென்படுகின்ற பெரியளவிலான விளம்பரம். எழுத்துப் பிழை தெளிவாகத் தென்படுகின்றது. 'ற'வுக்கு பதில் 'ர'. பேரூந்து விரைகிறது. துவிச்சக்கரவண்டி திருத்தும் ஒரு சிறிய கடை. அங்கே ஓர் அறிவித்தல் பலகை. "காற் அடிக்க 2ரூபா" தமிழ் இலக்கணப் புணர்ச்சித் தெளிவு அற்றவரின் எழுத்து. புணர்ச்சி தெரிய வேண்டாம். உச்சரிக்கும் போதாவது தெரிய வில்லையா?

காற்று + அடிக்க (ற் + உ) "உயிர் வரின் 'உ' குறில் மெய்விட்டோடும்" எனும் புணர்ச்சி விதிப்படி, நிலை மொழி உகரம் (ற் + உ) கெட வருமொழி உயிர் 'அ' றகர ஒற்றுடன் சேர்ந்து றகரமாகி 'காற்றடிக்க' என்று புணரும். இவற்றை யெல்லாம் கவனிக்காது விடலாமா? அது தவறில்லையா?

ஐம்பெருங் காவியமெனும் அழகு அணி பூண்டு, அந்தஸ்தால் செம்மொழியான நம்தமிழ் மொழியில் இத்தகைய தவறுகள் இடம்பெற விடலாமா? இவை மட்டுமா?

பேரூந்து விரைகிறது. அரியாலைப் பகுதியில் வீதியின் வலது புறமாக உயர்ந்த ஒரு கட்டடம். வாயில் பகுதியில் ஒரு விளம்பரப் பலகை. மிகப் பெரிய அளவில், மிகக் கவர்ச்சியாக படங்களும் வரைந்தபடி வாசகத்தை வாசித்தேன். நொந்து போனேன். பேரூந்து பயணிக்கின்றது. சிந்தனையோடு நானும் பயணிக்கின்றேன்.

பயணம் தொடரும்

- உதயலதா நவதீசன்

## சிறப்பாக வெளியிடப் பெற்றதமிழருவி சஞ்சிகை

சிறப்பாக வெளியிடப்பட்ட கலை இலக்கிய சமூக விஞ்ஞானமாதாந்த சஞ்சிகைஆன தமிழருவி 12-2-20011 அன்று வெள்ளிக்கிழமை உரும்பிராயில் வைத்து வெளியிடப்பட்டது. சஞ்சிகையின் இயக்குநராகவும் உதவி ஆசிரியராகவும் த.கணேசமூர்த்தி செயற்படுவதோடு பிரதம ஆசிரியராக ம.பா.மகாலிங்கசிவமும் கௌரவ ஆலோசகராக சிவத்தமிழ்வித்தகர் சிவ. மகாலிங்கம் ஆகியோர் முன்னிலையில், அறிஞர், சபையோர் முன்னிலையில் வைத்து இச்சஞ்சிகை வெளியிடப் பட்டது. இதன்பெறுமதியாக 50/= ஆகும். தமிழருவி சஞ்சிகையானது பாடசாலை மாணவர்களுக்குப் பயன்தரும் சஞ்சிகையாகக் காணப்படுகிறது இதைவிடக் கதைகள், பொதுஅறிவு, கவிதை என்பவற்றோடு மற்றும் சுவாரசியமான விடயங்களை நமக்கு அள்ளித்தருகிறது தமிழருவி என்றே கூறலாம். இச்சஞ்சிகையில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸின் தமிழிலக்கியத்தில் பெண்மை என்ற கட்டுரையும் உள்ளது. சைவசித்தாந்த தத்துவ வளர்ச்சியில் ஈழத்தவர்களின் பங்களிப்பு என்ற அருமையான தொகுப்பை சிவத்தமிழ்வித்தகர் சிவ.மகாலிங்கம் தொகுத்துள்ளார். அத்தோடு வடவரணி சபாவின் சிந்திக்கவைக்கும் சினிமாவை சாதனமாக்கிய பத்தி நெறி என்ற கட்டுரை தொகுப்பு வெளிவந்துள்ளது. அதைவிட இளம் சந்ததியர்க்கு வாய்ப்பளிக்கும் பொருட்டு மாதம் ஒரு எழுத்தாளர் அறிமுகம் என்ற தலைப்பில் மாணவர்களின் எழுத்தாக்கத்தை வெளிக்கொணரவும் இச்சஞ்சிகை உதவுகிறது. உங்கள் ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி த.கணேசமூர்த்தி தமிழருவி இயக்குநர், உதவி ஆசிரியர், உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் என்ற முகவரிக்கு அனுப்பி பரிசில்களையும் பெருமைகளையும் பெறுவதற்கும் தமிழருவி வழி வகுக்கிறது. யாழ்பாணத்தில் வெளிவரும் ஒரேயொரு சமூக விஞ்ஞான கலை இலக்கிய சஞ்சிகையாக தமிழருவி விளங்குகின்றது. தமிழருவி மேலும் மேலும் சிறப்புடனும் சீருடனும் வெளிவர வேண்டும். என்பதோடு தமிழருவி நீடூழி வாழ வாழ்த்துக்கள்.

ச. டினேஸ்
யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

## செந்தமிழ் பேசுவோம்



கொச்சைத் தமிழிலே பேசும்
பச்சைத் தமிழனே உனக்கு
இச்சை இல்லையா
செந்தமிழ் பேசிட?

எம் தமிழ் பேச்சில் நின்றது
உயிர் மூச்சில் நின்றது
எம் தமிழ் இனத்தை
பெருமையுடன் போற்றி நின்றது

தூற்றித் திரிந்திட்ட மொழியை – தமிழன்
தேற்றித் திரிகிறான் - இன்று
சேற்றில் இருந்திட்ட மொழியை
போற்றித் திரிகிறான் இன்று

சிந்தை இல்லா மனிதா –உன்னை
மந்தை என்று அழைக்க
எந்தாய் தமிழ் மறந்து –நீ
அந்நிய மொழி மதித்திட்டால்

உன் பிள்ளை நாளை வளர்ந்து
ஊரானை அப்பா என்றால்
உன் மனம் தாங்குமா இதை நீ
புரிந்திடு உண்மை அறிந்திடு
உன்னை வளர்த்த தமிழை
உலகறிய உயர்த்திடு

காற்றிலே கரைய மறைய
எந்தமிழ் செந்தமிழ் ஒன்றும்
சவர்க்கார நுரையல்லடா
மனிதா!

பேற்றில் சிறந்தது தமிழ்
காற்றில் கலந்தது தமிழ்
ஆற்றில் மிதந்தது தமிழ்
நூற்றில் உயர்ந்தது தமிழ்

தேனிலே ஊற்றிய தமிழைக் கற்று
ஊனிலே கலந்த பொருளாய் ஏற்று
நானிலம் போற்றும் மொழியாய் மாற்று
தமிழே எங்கள் உயிரின் ஊற்று.

வி. சுலக்ஷன்
யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரஜ

# விவசாயமும் நாமும்; நேற்று இன்று நாளை

தமிழருவி தைமாத அருவி – 1 இல் யாழ் குடா நாட்டின் விவசாயத் தொழில் துறையின் கடந்த கால முறைமைகள் பற்றியும் யாழ் குடாநாட்டின் பாரம்பரிய விவசாய முறைகள் பற்றியும் சுருக்கமாக ஆராயப்பட்டுள்ளது.

இந்த இதழில் விவசாய தொழில் துறையின் இன்றைய நிகழ்கால நிகழ்வுகள் அலசப்படுகின்றது.

இயற்கை வளங்கள்தான் விவசாய தொழில் முயற்சியின் அடிப்படைஆதாரமாகும். இயற்கை வளங்களை அளவுக்கு மீறிப் பயன்படுத்தும் போதும் சூழலை மாசுபடுத்தும் தவறான செயல் பாடுகளினாலும் சீர் குலைவுகள் தோன்றி எதிர் கால விவசாயத்தையும் உணவு உற்பத்தி அளவிலும், மனித ஆரோக்கியத்திலும் மேலும் முழு சுற்றாடலையும் பாதித்து பாரிய அபாயத்தை தோற்றுவித்து விடும்.



இந்நிலையில் யாழ் குடா நாட்டின் நிகழ்கால விவசாய முறைகள் பற்றி நோக்குவோமானால்

இயற்கைப் பசளை வகைகளின் பாவனை குறைக்கப்பட்டும் பாரம்பரியமாக பேணப்பட்டு வந்த பாரம்பரிய விவசாய நடைமுறைகளில் பெரும்பகுதி கைவிடப்பட்டு நவீன தொழில் நுட்ப முறைகளை சிபார்சுக்கு மேலதிகமாக கண் மூடித்தனமாக பாதுகாப்பு முறைமைகளை கடைப்பிடிக்காமல் தன்னிச்சைப் படி பயன்படுத்தியும் குறுகிய இலாபம் கருதி நீண்ட கால இலாபத்தை மறந்து இன்றைய விவசாயிகள் மண்ணையும், சூழலையும் துன்புறுத்து வதைக் காணக் கூடியதாகவுள்ளது.

உற்பத்தி அதிகரிப்பிற்காகப் பயன்படுத்தப் படும் விவசாய இரசாயனங்கள் அசேதனப் பசளைகள் (யூறியா, அமோனியா, பொஸ்பேற், பொற்றாஸ்) கிருமி நாசினிகள் என்பவற்றின் கட்டுப்பாடற்ற கண்மூடித்தனமான தன்னிச்சையான பாவனை காரணமாக விவசாய சூழலில் காணப்படும் விவசாயிக்கு தோழனாக கருதப்பட்ட மண்புழு, செண்பகம் மற்றும் கண்ணுக்கு புலப்படாத மண்ணில் வாழும் விவசாயிகளுக்கு நன்மை தரும் மண் வாழ் நுண் உயிர்கள் பயிர்ச் செய்கையில் ஊறு விளைவிக்கும் பூச்சி புழுக்களைப் பிடித்து உண்ணும் விவசாயிக்கு நன்மை தரும் பூச்சி வகைகள் அழிந்துவிட்டன. காற்றிலுள்ள பயிர் வளர்ச்சிக்குப் பயன்படும் நைதரசனின் பசளையை மண்ணில் பதிக்கும் மண் வாழ் பக்டீரியாக்கள் மற்றும் பயிர்ச்செய்கைக்கு உதவிவிடும் பங்கசுக்கள் போன்ற விவசாயத் தொழில் துறையில் இயற்கையாக பங்களிப்புச் செய்த விலங்குகள், பறவைகள், பூச்சிகள், மண்புழுக்கள் நுண்ணுயிர்கள் (பக்டீரியா, பங்கசு) போன்ற சூழல் வாழ் உயிரினங்கள் இன்றைய நிகழ்கால விவசாய நடைமுறைகளால் பாதிக்கப் பட்டு விவசாய முயற்சியில் ஒத்துழைப்பு வழங்க முடியாமல் போனமையும் காரணமாகிறது.

செயற்கையாகப் பயன்படுத்தப்படும்விவசாய உள்ளீடுகள் இயந்திரங்களின்பாவனை காரணமாக உற்பத்திச் செலவு அதிகரித்து, உற்பத்திச் செலவிற்கு நிகராக உற்பத்தி அளவு அதிகரிக்காமையும் இன்றைய விவசாயம் எதிர் நோக்கும் பாரிய சவாலாகும். இதன் காரணமாகப் பெரும்பாலான விவசாயிகள் போதிய வருமானம்

இன்மை காரணமாக விவசாய முயற்சியைக் கைவிட்டு வேறு முயற்சியில் ஈடுபட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

சில விவசாயிகள் தற்கொலை செய்துள்ள நிலைமைகளையும் பத்திரிகை வாயிலாக அறியக் கிடக்கின்றது. எல்லாவற்றையும் விட மிக மோசமான நிலைமை தற்போதைய விவசாய உற்பத்திப் பொருட்களால் நுகர்வோருக்குச் சுகாதார சீரகேடுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக அறிக்கைகள் எச்சரிக்கின்றன.

அதாவது நாம் அன்றாடம் சந்தைகளில் வாங்கிச் சமைக்கும் மரக்கறிகளில் விவசாயத்தில் பயன்படுத்தப்படும் விவசாய இரசாயனங்களின் எஞ்சிய மீதிகள் காணப்படுவதாகவும் இவை தினம் தினம் எம் உடம்பில் படிப்படியாக சேர்ந்து புற்று நோய், இருதயத்தில் ஓட்டையுள்ள குழந்தைகள், நீலக் குழந்தைகள் பிறத்தல், அங்கவீனமான குழந்தைகள், மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி உடம்பில் குறைந்து எளிதாக நோய்வாய்ப்படும் தன்மை ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் அதிகரித்து வருவதாக அறியப்பட்டுள்ளது.

அத்துடன் சந்தைப் பொருளாதாரத்தை மையப்படுத்தி கூடிய இலாபம் தரக்கூடிய பயிர்களை தொடர்ந்து செய்வதிலும் கலப்பின பயிர் வகைகளை விரும்பி பயிர் செய்வதாலும் உயிரியல் பல்வகைமை பாதிக்கப்பட்டு நல்ல இயல்புகளை கொண்டுள்ள பாரம்பரிய அலகுகள் கிடைப்பு தன்மை அரிதாவதால் விவசாய ஆராய்ச்சிக்குப் பரம்பரை அலகு பெறும் வாய்ப்புக்களும் அருகிப் போய்விட வாய்ப்புள்ளது.

சுழற்சி முறை பயிர்ச்செய்கை முறைமை பாதிக்கப்பட்டு மண்வளம் குன்றிப்போதல்


பருவ காலத்திற்கு ஏற்ப பயிர் செய்கையை மேற்கொள்ளாமல் விவசாய இரசாயனங்களின் உதவியுடன் வருடம் பூராவும் ஒரு பயிரை செய்வதன் காரணமாக விவசாய இரசாயன பாவனை அதிகரித்து சுற்றுச்சூழல் விவசாய இரசாயனங்களால் மாசுபடல், அளவுக்கு மீறிய நீர்ப்பாசனம் காரணமாகவும் அதிகரித்த செயற்கைப் பசளைப் பாவனை மூலமும் நிலத்தடி நீர் மாசுபட்டு குடித்தரம் வீழ்ச்சியடைந்து சுகாதாரப் பிரச்சினை ஏற்படுகின்றது.

அத்துடன் விவசாய முயற்சியில் கால் நடை வளர்ப்பில் கால் நடைகளுக்கு வழங்கப்படும் பயிர்ச் செய்கை கழிவுகளில் விவசாய இரசாயனங்கள் கலந்து இருப்பதால் கால்நடைகளான ஆடு, மாடு, கோழி, என்பனவற்றை உண்ணும் போது இவற்றில் இருந்து பெறப்படும் பால், இறைச்சி, முட்டை, என்பவற்றிலும் எமது உடல் நலத்திற்கு தீங்கு



விளைவிக்கக் கூடிய இரசாயனங்கள் எம்மை வந்தடைந்து எமது ஆரோக்கியத்தைப் பாதிக்கிறன.

## இலங்கையில் விவசாய விளைபொருள் விலையும் இரசாயன உரத்தின் விலையும்




மேற்குறிப்பிட்ட வரைபடம் விவசாய இரசாயனத்தின் விலை உயர்விற்கு ஈடாக விவசாய உற்பத்தியின் விலை அதிகரிக்க வில்லை என்பதைக் காட்டுகின்றது. தற்போது இந்நிலை மேலும் மோசமாகியுள்ளது.

இந்நிலைமைகளில் இன்றைய நிகழ்கால விவசாய நடைமுறைகளில் சில மாற்று வழிகளில் எமக்குத் தேவையான அன்றாட உணவுக்கூறுகளில் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நாமே

நமக்காக பயிரிட்டு தரமான, எமது உடல் நலத்திற்கு பாதிப்பில்லாத வகையிலும் ஆரோக்கியத்திற்கு அத்தியாவசியமான அனைத்துப் போசாக்குகளையும் பெறவும் அன்றாடம் எமது சூழலில் கிடைக்கும் சேதன கழிவுகளையும் வினைத்திறனாக முகாமை செய்து கூட்டெரு தயாரித்து பயிர்ச்செய்கைக்கு வழங்கியும் அத்துடன் எமது தேசிய வளமான மூலிகைப் பயிர்களை தெரிவு செய்து நாம் வசிக்கும் எமது வீட்டை சுற்றி திட்டமிட்ட முறையில் பயிர்களுடன் பயிர் செய்து பயிர்களைப் பாதிக்கும் பீடைகளை (பூச்சி, புழுக்கள்) வெற்றிகரமாக முகாமை செய்து வெற்றிகரமான வீட்டுத்தோட்டத்தை அமைத்து இன்றைய உணவு தேவை பிரச்சினைகளுக்கம் ஆரோக்கிய பிரச்சினைகளுக்கும், சுற்றாடல் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணலாம்.

சமுதாய மேம்பாட்டிற்கான பொருளாதார மேம்பாடு, உளநல மேம்பாடு உடல் பயிற்சி போசாக்கு மேம்பாட்டிற்கு வித்திட்டு நாம் சகல வழிகளிலும் மேன்மை அடையலாம்.

எனவே வீட்டிற்கு ஒரு வீட்டுத் தோட்டம், அலுவலக தோட்டங்கள், பாடசாலை தோட்டங்கள், ஆலய தோட்டங்கள், சமூக நிறுவனங்களின் தோட்டங்கள் என அமைத்துப் பயன்பெறுவோம், பலம் பெறுவோம்.

நீருக்கான, உணவுக்கான மூன்றாம் உலக யுத்தத்தைத் தவிர்ப்போம்.

நாம் வாழும் பிரதேசத்தில் பெரும் பாலானோருக்கு வீட்டுடன் ஏறத்தாழ நான்கு பரப்பு காணி உண்டு.

சில நகர்ப்புற வீட்டுத் திட்டப் பயனாளி களுக்கு வீட்டை சுற்றி போதிய நில வசதி இல்லாமை குறிப்பிடத்தக்கது.

சில பிரதேசங்களில் உவர் மண், உவர் நீர் காணப்படுவதையும் அறிய முடியும்.

நில வசதி, நீர் வசதி உள்ளவர்கள் நிலவசதி, நீர் வசதி இல்லாதவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவரும் தமக்குத் தேவையான அன்றாடத் தேவை மரக்கறி வகைகளைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் வீட்டுத்தோட்டம் அமைத்திடும் வழி முறைகள் தொழில்நுட்பங்கள் பற்றி அறிய அடுத்த இதழ் வரை காத்திருங்கள்.

"மனமுண்டானால் இடம் உண்டு.

பூமதி யோகநாதன்
விவசாயப் போதனாசிரியர்.

## தெய்வம் நீ தான் அம்மா

என்னைப் பெற்றுப் பாலூட்டி
இனிய தமிழால் தாலாட்டி
கண்ணைப் போலக் காக்கின்ற
கடவுள் நீதான் என் தாயே

கருணை உள்ளம் கொண்டவளே
கவலை மறக்கச் செய்பவளே
அன்பை அள்ளித் தருபவளே
அகிலம் நீதான் என் தாயே

விண்ணைப் போன்ற உயர்ந்த உள்ளம்
மண்ணைப் போன்ற தாங்கும் மனம்
கண்ணிமை போல காக்கும் திறன்
கொண்டவள் நீதான் என் தாயே

வானம் இடிந்து வீழ்ந்தாலும்
வையகமேதான் அழிந்தாலும்
தாயின் அன்பு மாறாது
தரணியில் அதற்கு ஈடேது.

வானதி விஸ்வநாதன்
தரம் - 13
யா/ இணுவில் மத்திய கல்லூரி
(தமிழருவி நடத்திய கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கவிதை)

## கதிர்காம யாத்திரை

வண்டி கட்டி வடிவாய் அணி சூடி
சண்டிக் காளை சலங்கையொடு ஆடி
தொண்டுக் கிழவரும் தொண்டரொடு பாடி
கண்டு மனம் குளிரக் கந்தனைத் தேடி
இன்றும் இளசோடு பெருசுகளும் நாடி
நன்றாக ஆடைகளை நளினமாய்க் கட்டி
ஒன்றாக எல்லோரும் ஒற்றுமையாய்க் கூடி
சென்றே சேர்வதாம் நல்ல கதிர்காம யாத்திரை.

செ. துவாரகா
தரம் - 11
யா/ வேம்படி மகளிர் கல்லூரி

# தெய்வம் நீ தான் அம்மா

என்னைப் பெற்றுப் பாலூட்டி
இனிய தமிழால் தாலாட்டி
கண்ணைப் போலக் காக்கின்ற
கடவுள் நீதான் என் தாயே!

சின்னச் சின்னப் பாட்டுப் பாடி
சிரிக்க வைக்கும் கதைகள் சொல்லி
வண்ண வண்ணச் சட்டை போட்டு
மகிழ்பவள் நீதான் என் தாயே!

தலை நோ எனக்கு வந்திட்டால்
தலைகால் உனக்குப் புரியாமல்
தவித்து நின்று காக்கின்ற
தாதி நீ தான் என் தாயே!

பள்ளிக்கூடம் என்னை அனுப்பி
பக்குவமாய் கூட்டி வந்து
பூவைப் போல வளர்க்கின்ற
புனிதை நீதான் என்தாயே!

பெயர் - செல்வி விதுசா கிருபாகரன்
தரம் - 11A
யா/ சங்கானை சிவப்பிரகாச ம.வி
(தமிழருவி கவிதைப் போட்டியில் 2ஆம் இடம்பெற்ற கவிதை)

# அகிம்சை



அண்ணல் காந்தி தந்த ஒளி
அன்னை அவளும் நின்ற வழி
அகிலம் தன்னில் ஆயுதம் ஒழி
அராஜகம் அதனை வாழ்வில் கழி

அம்மா அன்பே வாழ்க்கைத் தூண்
அடிமை நிலையே எண்ணி நாண்
அன்பு என்றும் வெல்லும் காண்
ஆளும் சக்தி அகிம்சை தான்

கு. சர்விகா
யா/ வேம்படி மகளிர் கல்லூரி
தரம் - 08

# மீண்டும் குருடனாகவே படைத்து விடு..........!

பார்வையற்ற குருடன் ஒருவன்
பாவம் அவனுக்கு யாருமில்லை....?
கையில் பாத்திரம் ஒன்று மட்டும்
கந்தல் உடையுமே அவன் சொந்தம்
எவருமே இல்லாத இடத்தில் கூட
இரந்து கேட்கிறான் பிச்சையென்று
ஏனெனின் அவனுக்குத் தெரியாது
எவருமே அங்கு இல்லையென்று.


சில்லறை சிலநேரம் கிடைப்பதுண்டு
நல்லவர் யாரேனும் சந்தித்தால்
அன்றும் ஒருநாள் அப்படித்தான்
அதிகம் சில்லறை விழுந்தபோது
வாழத்தெரிந்த “ஓர் கயவன்”
வாரிக் கொண்டான் அப்பணத்தை
“இரந்துபெற்ற” பணம் அனைத்தும்
இழந்துவிட்டான் அக்குருடன்

பணத்தை இழந்த அக்குருடன்
“பாவம்” கடவுளை வேண்டுகிறான்
“அகிலத்தைப் படைத்த ஆண்டவனே-எனக்கு
அடுத்த பிறவி இருக்குமானால்.......?
மீண்டும் என்னைக் குருடனாகவே
படைக்குமாறு வேண்டுகிறேன்
இப்படியான ‘ஈனப்பிறவியை’
எனது கண்களால் பார்க்கக் கூடாது.”

வடவரணி
சி.சபா

# வற்றாத அன்பு

இயற்கை அழகிற்கேஎடுத்துக்காட்டாகத் திகழும் அக்கிராமத்திலே ஒரு குடும்பம். தாய், தந்தை, மகன் என சிறிய ஏழைக்குடும்பம். மகன் கதிர் சிறுவனாக இருந்த போது தந்தையை இழந்தான். ஏழைக்குடும்பமான அக் குடும்பம் ஒரு நேர உணவிற்கே வழியின்றித் தவித்தது. கதிர் மேல் அலாதிப் பிரியமான தாய், அவன் மேல் உயிரையே வைத்தாள். தாய் லக்ஸ்மி, கதிர் பசியால் வாடுவதைப் பார்க்க மனமின்றித் தோட்டங்களிற்கும், குறைந்த சம்பளங்களிற்கும் வேலைக்குச் சென்றாள். அதுமட்டுமன்றி இரவிலும் கூடப் பெட்டி, பாய் எனப் பலவற்றைச் செய்து விற்றுச் சம்பாதித்தாள். தாயின் கஸ்ரத்தையும், அன்பையும் புரிந்து கொண்டு கதிர் மேலும் படித்தான். படித்துப் பெரியவனாகிப் பட்டம் பெற வேண்டும் என்ற தாயின் கனவை நனவாக்க எண்ணிய கதிர் கல்விப் பொதுதராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றினான். தாயின் கவனிப்புடனும், தனது இலட்சியத்துடனும் பரீட்சையைத் திறமையாக எழுதினான்.



முடிவுகள் வெளியாகின. கதிரே சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவனாகக் கௌரவிக்கப் பட்டான். தனது முடிவைக் கேட்டதும் ஓடோடிச் சென்று தாயிடம் கூறினான். அவளின் மகிழ்வை வெளிப்படுத்த முடியாது வெளியேறியது. ஆனந்தக் கண்ணீர். கட்டியணைத்து முத்தமிட்டான். பெறுபேற்றிற்கேற்ப கணிதப்பிரிவில் உயர்தரம் கற்றான். படிப்பிற்கேற்ப அவளின் உழைப்பையும் அதிகரிக்க வேண்டிய கடுமையாக உடலை வருத்தி உழைத்தாள். பட்டம் பெறுவதிலே குறியாக இருந்து நன்றாகப் படிக்க வைத்துப் பல்கலைக்கழகம் அனுப்பினாள். அதோடு மேற்படிப்பிற்காக வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. இதைக் கேட்ட கதிர் மிகவும் கலங்கினான். தாயிடம் கவலையுடன் தெரிவித்து தான் போகவில்லை என அடம்பிடித்தான். தாய் மகிழ்வுடன் நீ அங்கே போய் நன்றாகப் படித்து நிறையப் பட்டம் பெற்று நல்ல மனிதனாக வந்தால் எனக்கும் பெருமை தானே! என்றாள். கதிரோ "நான் உன்னை விட்டு எங்கும் போகமாட்டேன்" என அழுதான். பல அறிவுரைகள் கூறி சம்மதிக்க வைத்தாள் லக்ஸ்மி.

கதிர் வெளிநாடு செல்லத் தயாரானான். ஆகையால் அதற்குப் பணம் நிறையவே தேவைப்பட்டது. அதனால் தனது காணியையும் வீட்டையும் அடைமானம் வைத்தது மட்டுமன்றி உறக்கமின்றி உழைத்தும், பல இடங்களில் கடன்பட்டுப் பணம் திரட்டினாள். விடைபெறும் நாள் வந்தது. கண்ணீருடன் பிரிய மனமின்றிப் பிரிந்தனர் தாயும் சேயும். அங்கே சென்ற கதிர் அடிக்கடி கடிதம் அனுப்புவான். பணம் அனுப்புவான். ஆயினும் தாய் பிள்ளை உறவு வெளிநாட்டு மோகத்தால் சீர்குலையத் தொடங்கியது. மதுவிற்கும், மாதுவிற்கும் அடிமையான கதிர், பெற்று வளர்த்த தாயை மறந்தான். எல்லாத் தொடர்புகளும் அறுந்தன. லக்ஸ்மியோ மகனின் தொடர்பு இல்லாததால் துடியாய்த் துடித்தாள். என்னவோ? ஏதோ என பைத்தியம் போல் அனைவரிடமும் விசாரிக்கத் தொடங்கினாள். எப்போதும் மகனின் நினைவால் அழுது துடித்து அலைந்து திரிந்தாள்.

கதிர் ஒரு நாள் மதுபோதையில் கார் ஓட்டியதால் கடும் விபத்தில் சிக்கி பல இடங்களில் காயம் அடைந்ததோடு ஒற்றைக் கண்ணையும் இழந்தான். இதை அறிந்த லக்ஸ்மி மகனின் வேதனையால் படுக்கையாகிப் போனாள். இன்றோ நாளையோ என இறப்பை எண்ணி இருந்தவள் தன் கண்ணைத் தன் மகனுக்குத் தானமாக்கும்படி கூறினாள். அடுத்த கணம் அவளது உயிர் பிரிந்தது. தாயின் இறப்புச் செய்தி கேட்ட கதிர் ஊருக்கு வந்தான். இறந்த தாயின் உடலைக் கண்டு அதிர்ச்சி அடைந்தான். ஏனெனில் அவளது ஒற்றைக் கண்ணில் பஞ்சு வைக்கப் பட்டிருந்தது. அயலவரிடம் விசாரித்தான். இறுதிக் கடன்களைச் செய்து முடித்ததும் கதிருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

தாயினால் மீண்டும் புதுப்பிறப்பு அடைந்த கதிர். தன் தாயின் அளவிட முடியாத அன்பையும் உயிர் கொடுத்த தாயை உதாசீனம் செய்த தன் தவறையும் எண்ணி மனம் நொந்தவன் தாயின் ஆத்ம சாந்திக்காகவும், தன் மனத் திருப்திக்காகவும் தாயின் பேரில் ஓர் அனாதை இல்லம் திறந்து நடாத்தி வருகின்றான்.

"என்ன இருந்தாலும் தாயின் அன்பிற்கு இவை ஈடாகுமா?"

**ஜி. டினோஷா**
**இளவாலை, யாழ்ப்பாணம்.**



# சிறுவர் உளவியலும் கற்பித்தல் முறையும்

முருகையா ஜெயமதன்

தாழ்வு மனப்பான்மையை எப்படி இனங் காண்பதென்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். இவ் வெளிப்பாடானது மனித உயிர்களிடத்தே பொதுவாக இரு வழிகளில் தோன்றி வெளிவருகிறது.

1. உள்ளத்து வெளிப்பாடு
2. உடலியல் வெளிப்பாடு

## உள்ளத்து வெளிப்பாடு

இதுவே ஒரு மனிதனின் நடத்தை சார்ந்த வெளிப்பாடாகும். இதனையே "நன்நடத்தை சார்ந்த தத்துவம்" எனவும் பிரித்துணரலாம். இறுகிப்போன ஆழ்மனதில் வளர்த்து விடப்பட்ட உணர்வலைகள் எந்தப் பாதையில் வெளிவர வேண்டுமோ அதை விடுத்து மனரீதியான உளைச்சலும், நெருடலும் இணைந்து வெளி வருகின்ற செயற்பாடாக இது அமைந்து விடுகின்றது எனலாம். இங்கே உணர்ச்சி வெளிப்பாட்டிற்கே ஆழ்மனம் தூண்டப்படும் என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது கோபம், வெறுப்பு, எரிச்சல், பொறாமை என்கின்ற மூர்க்கத்தனமான உணர்வுகள் இறுகிய மனநிலையில் இயல்பாகவே தோன்றும்.

இவ்வேளை கடும் சொற் பிரயோகம், கொடூரமான சிந்தனை என்பன தோன்றத் தொடங்கும். இங்கேதான் எவர் மீதும் நம்பிக்கையற்ற தன்மையும், உறவுகளைக்கூட எதிரிகளாகப் பார்க்கின்ற மனநிலையும் கூட்டாக வெளிவரத் தொடங்கும். இச் செயற்பாடு ஒரு பிள்ளையின் மனதில் எவ்வாறு தோன்றத் தொடங்குகிறது என்பது மிகவும் தெளிவுபடுத்த வேண்டிய ஒன்று.

சிறுபராயத்தில் பிள்ளைகளை வளர்க்கின்ற போது அவர்கள் செய்கின்ற செயல்களைத் தடம் போட்டு தடுக்கின்ற போது மனநிலை இறுக்க மடைகின்றது. அத்தோடு மனதிலே அதற்கான குரோதம் எப்படி நிகழ்கின்றதென்றால் நாம் பேசுகின்ற மொழியியல் சார்ந்தே அது நடந் தேறுகின்றது. அதாவது அதட்டலான சொற் பிரயோகங்களான நீ, வாடி, வாடா, போடா, போடி, எருமை, மாடு, செம்மறி, குரங்கு, சனியன், மூதேசி, நாயே, சவம் இப்படியான சில கீழ்த்தரமான வார்த்தைகளைச் சிறுபிள்ளை களிடம் விதைக்கின்ற நபர்கள் தமது கோபம் என்கின்ற உணர்வைத் தீர்த்துக் கொள்வ தற்குப் பதிலாகப் பிள்ளைகளை கீழ்நிலைக்குக் கொண்டு செல்கின்றனர். இவ்வேளை சிறார்களின் மனதில் என்ன எண்ணம் தோன்றுகின்றது என்பதை யும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.



எரிச்சற்படும் படியான வார்த்தைகளைக் கொட்டும் போது முதலில் பிள்ளைகளின் மனதில் தோன்றுவது "பயம்" என்கின்ற உணர்வுதான். பயம் என்று சொல்கின்ற போது இங்கே பேசுகின்ற ஒவ்வொரு சொல்லும் புரியாத தன்மைகளோடு கூடிய உணர் வலையைப் பிள்ளைகளிடத்தே தூண்டி விடப் பார்க்கிறது.

இங்கே பிள்ளையின் பேச்சுத்திறன் முதலிலே முடக்கப்படுகின்றது. அடுத்து அன்பு, பாசம், இரக்கம் என்கின்ற அனைத்தும் மறக்கப்பட்டு வக்கிர புத்தியாகிய கோபத்துடன் கூடிய வெறுப்பு என்கின்ற உணர்வலை பிள்ளையின் ஆழ்மனதைத் தாக்கத் தொடங்கும். ஏனெனில் ஒரு சிறு பராயப் பிள்ளையின் உள்ளம் என்பது நாம் எதைச் சொல்கின்றோமோ? அதை மட்டுமே கிரகித்துக் கொண்டு ஏனைய யாவற்றையும் விலக்கி விட்டிருக்கும். இங்கேதான் ஆயிரம் உணர்வலைகள் பதியக்கூடிய வல்லமையில் மனம் என்கின்ற மூளை தயாராகி நிற்கிறது.

## இதனால் ஏற்படும் விளைவுகள்

மழலைகள் மனதிலே விடை தெரியாத அல்லது அர்த்தம் புரியாத வார்த்தைகளை அதட்டலாகப் பரிமாறிக் கொள்ளும்போது அவர்கள் அவற்றை மனதிலே இருத்துகின்றனர். இதற்கு முதற்காரணம் வார்த்தைகளைக் கோபம் என்கின்ற உணர்வைக் கலந்து ஒருவிதமான ஒத்திசைவான அழுத்தத்துடன் கூறுவதேயாகும். இவ்வார்த்தைப் பிரயோகங்களைப் பிள்ளைகள் முதலிலே தமக்கு கோபம் என்கின்ற உணர்வு வரும்போது தமது சகோதரர்களைத் திட்டித்தீர்ப்பதற்குப் பயன்படுத்துவர். இது போதாதென்று பாடசாலையில் சகபாடிகளைப் பேசுவதற்கும் ரியூசனில் நண்பர்கள் தவறுவிடும் பட்சத்தில் அவர்களைப் பேசுவதற்கும், பயன்படுத்தத் தொடங்குவர். இதனால் சிறுபராயத்திலே "முரண்பாடு" என்கின்ற வலைக்குள் பிள்ளைகள் சிக்க வேண்டிய சந்தர்ப்பம் உருவாகத் தொடங்குகிறது. இதற்கு எடுத்துக் காட்டாக சில உண்மைக் கதைகளைச் சொல்ல வேண்டிய தேவை இருக்கிறது. அதாவது ஒரு வீட்டிலே ஐந்து பிள்ளைகளும் தந்தையும் தாயும் வசித்து வந்தனராம்.

(தொடரும்)












றூபன் பிறிண்டேர்ஸ் ஆனைக்கோட்டைச் சந்தி 0776624386